[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

PRINTED BY

T. THOLASILINGA CHETTY & CO,

THE GYANA SAGARA PRESS, 187. MINT STREET,

[illegible]

1905.

Copy-Right and Right of Translation are Reserved.

பிரம்மஸ்ரீ, ஸ்ரீராமலிங்க
பிரம்மானந்தயதீசுவரஸ்வாமிகள்.

முகவுரை.

ஸ்ரீ ராமலிங்க பிர்மானந்த குருவே நம:.

நேரிசை வெண்பா.

சீர்பூத்த செல்வத் திருவாலவாயதனில்
தார்பூத்த ராமலிங்கத் தற்பரனும் — ஏர்பூத்த
ஞான வடிவாகி நன்மையுறு நற்குருவா
மானவன் றன்னருளினால்.

சகலமான ஜகத்திற்கதிஷ்டானமாயும் நித்திய நிரஞ்சன நின்மல வடிவமாயும் சர்வ வியாபகமாயும் ஸ்வகதஸஜாதீய விஜாதீய பேதமற்றதான ஏகமேவாத்துவிதீய சத்வஸ்துமாத்திரமாயுமிருக்கிற பிர்மம் சிருட்டிக்குமுன் பிரகாசித்தது. அநாதிகாலமாயிருக்கிற அவித்தியாவாசனையாற் கட்டுண்ட ஜீவர்கள் சுற்பாந்தத்தில் சகல வாசனைகளுடன் மெழுகுருண்டையில் சொர்ண இரேணுக்கள் அடங்குவதைப்போல் லயமாயிருந்தார்கள். முற்பிறப்பிற்செய்த புண்ணியகன்ம விசேடத்தாலும், மாயாசக்தியின் விசித்திரத்தாலும், பழுதையிற் பாம்புபோல் மாயாபிர்மத்தில் இச்சகம் முதலான சகல கற்பனைகள் உண்டாயின. முன்னுரைத்த சக்தியின் மகிமையால் அட்சர உருவனான ஈசுவரனிடத்திருந்து மூச்சுக்காற்றுக்களைப்போல் இருக்கு, எசுர், சாமம், அதர்வணம் என்கிற நான்மறைகளுண்டாயின. இருக்கு உக (21) சாகையுடனும், எசுர் ௱க (109) சாகையுடனும், சாமம் ௲ (1000) சாகையுடனும், அதர்வணம் ருய (50) சாகையுடனும் விரிவாகி ஒவ்வொரு சாகைக்கும் ஒவ்வொரு உபநிடதமேற்பட்டது, அவைகளிலிருந்து சக்கிரவர்த்தித் திருமகனான ஸ்ரீ ராமபிரான் மகா புத்திமானும் சர்வசாத்திர சம்பன்னனும் வையாகரணியாயும் இராமகாரிய துரந்தரனாயுமிருந்த அஞ்சனைகுமாரனனுமானுக்கு அவ்வுபநிடதசாரார்த்தங்களை "ஈசாவாசியம்" முதல் "முக்திகோ" உபநிடதமீறாய் ௱அ (108) உபநிடதங்களாய் முன் விரித்துரைத்தனர். அதின் சாரமறியச் சக்தியற்றவர்களாயும், சமுசார சாகரத்தில் அழுந்திக்கரையேற வல்லமையற்றவர்களாயுமிருக்கிற சகல மானுஷர்களும் மலங்கடீங்கிப் பாக்கியராக, ௰ரு (15) பிரகரணங்களடங்கிய பஞ்சதசியென்கிற நன்னூலை வடமொழியில் மகாத்மாவானவராயும், சர்வஞ்ஞ புத்திமானாயும், பரமஹம்ச பாஷியகருமான ஸ்ரீ வித்தியாரணியமாமுனிவரா லியற்றப்பட்டது. அன்னோர் பீடகோடிகளி லொருவரான ஸ்ரீ இராமகிருஷ்ண வித்துவானால் வடமொழியிலேயே வியாக்கியானம் செய்யப்பட்டுளது. அதைக் கற்றோரன்றி மற்றோர் தெற்றெனவறிதல் சிரமசாத்தியமானதால், கல்வி, அறிவு, ஒழுக்கம் மூன்றுமொருங்கே பெற்றவரான ஸ்ரீ ராமலிங்க சாஸ்திரிகளென்ற பிரமானந்த யதிகளால் பூர்வ ஆசி

ரமத்திலேயே மேற்கூறிய நூலிற்குத் தெளிவான பதவுரையும், அன்வயரூபமான பொருளும், அவ்விடங்களுக்கேற்ப புத்திக்கெட்டாத சமயோசித யுக்திகளும், மற்றையமேற்கோள்களும் வேண்டியமட்டில் சேர்த்துஎழுதிவைத்த பிரதியைக்கொண்டு அன்னோர் ஜேஷ்ட புத்திரனுன யான் நன்கு சோதித்தும், அத்துடன் என்னால் இயற்றப்பட்டிருக்கிற ஒவ்வொரு பிரகரணத்திற்கு முன் அப்பிரகரணசாராம்சத்தை சங்கிரமாக தொகுத்து நல்ல செந்தமிழ்நடையிலெழுதிச்சேர்த்தும்.நம்குருதைவமான ஸ்ரீ ராமலிங்க விஜயமென்ற சம்ஸ்கிருத சுலோகங்களும், அதினர்த்தம் தமிழ்நடையில் என்னாலெழுதிச்சேர்க்கப்பட்ட புத்தகத்தையும் சம்ஸ்கிருத வித்துவானுன ஸ்ரீநிவாசாரியாளாலும் தமிழ் புலவருன மதுரை தெற்கு ஆவணி மூலவீதி ஸ்கூல்மாஸ்டர். எம். கோவிந்தசாமி ஐயராலும் நன்கு பரிசோதிக்கச்செய்து சுலோகங்களை தேவநாகர எழுத்துகளிலும், கிரந்த எழுத்துகளிலும், மேற்கூறியவைகளை ஒரே புத்தகமாக சுத்தப்பதிப்பிலும் அச்சிட்டு நல்ல காலிகோபயிண்டிலும் பயண்டு செய்து விலைக்கு தயாராய் வைத்திருக்கிறேன். இப்புத்தகம் ரிஜிஸ்டர் காபிரைட்டுடன் கூடியிருப்பதால் தபால் சார்ஜ் நீங்கலாக இதின் விலை ரூபா. 3-8-0. இப்புத்தகத்திற்கு முன் பணம் வெகு பேர்கள் கொடுத்திருப்பதாலும் காபிகள் சொல்பமாய் போட்டிருப்பதாலும் ஜாக்கிரதையாய்அடியிற்கண்டவிலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம். புத்தகம் துரிதமாக அச்சுப்போட்டமையால் அதில் என்னை யறியாமல் சில பிழைகள் ஏற்படக்கூடும். அதை பெரியோர்கள் மன்னித்து குற்றம் நீக்கிக்குணத்தைக்கைக்கொள்வீர்களாக.இப்புத்தகம் நம்பிதாவால் சுமார் (26)வருடத்திற்கு முன் எழுதியிருந்தது. மதுரை. ம-ா-ா-ஸ்ரீ. நா. கி. நா. குப்பய்யரவர்கள்.சோழலிங்கா. வெங்கிடகிருஷ்ணய்யவர்கள் முதலான பக்த சிகாமணிகள் சிரமமெடுத்துகொண்டு தங்கள் தங்களுக்கு வேண்டிய புத்தகங்களுக்கு முன்பணம் கொடுத்தும் ஷை குப்பய்யரவர்கள் மற்றவர்களைக்காட்டிலும் ஜாஸ்தி புத்தகங்களுக்குப்பணம் கொடுத்ததுமன்றி. புத்தகம் முடிவு பெறமார்க்கமில்லாதிருந்ததைக்குறித்து என் வேண்டுகோளுக்கிணங்கி பைண்டுமுதலான சகல சிலவுக்கு வேண்டிய ரூபாயை தடையன்றியில் கொடுத்து முடிக்கச்செய்து அழியாத தர்மத்தைக்கைக் கொண்ட அவர்களின் வம்சபாரம்பரியமா யிப்போதிருக்கும் செல்வத்திற்கதிகமாய் நீடூழி காலம் வரை சுகமாய் வாழக்கடவர்களென நம்தேவனை வணங்கிக்கொண்டிருக்கிறேன், ஞானசாகர முத்திராக்ஷர சாலாதிபரான, தி. துளசிலிங்கஞ்செட்டி யவர்கள் விரைவில் ரெம்பசிரமமெடுத்து முடித்து கொடுத்ததைப்பற்றி மிக்க நன்றி பாராட்டுகின்றேன்.

தங்களன்புள்ள நேசன்,

எம். ஆர். சுந்தரராம சாஸ்திரிகள்,

நெம்பர் 4, கணபதி அக்கிரகாரம், மதுரை.

ஶ்ரீரஸ்து.

ஶ்ரீகணேஶாய நம:.

ஶ்ரீராமசந்த்ரபரப்ரஹ்மானந்தகுரவே நம:.

ஶ்ரீராமசந்த்ரவிஜய:.

வந்தே கணபதிம் தேவம் வந்தே ஶ்ரீநவிரோசனாம் | வந்தே ஸாம்ப நாயகஞ்ச வந்தே ஸாம்பதாண்டவம் || 1 || ஶ்ரீசந்த்ரஶேகரநவிரோஹிநிகா ஜ்ஞசய்யாவரோஸ்தாகாம் ப்ரணசதாம் பாசாயப்ரசஞ்ச | ஶ்ரீவித்யாசார்ய சாமேபாநிஶம்ஸாமபஜ்யம் ஶ்ரீசாம்பாசகாராமபாயஶஹம் நசாமி || 2 || அஸ்மதேஶ யதீந்த்ரதேஶிகவரம் ஶ்ரீபாபதீஶப்ரியம் ஶ்ரீபாணிந்யாதி விஶேஷபஜ்ஜிதபதம் ஶ்ரீஶாங்கரசித்தம் விபும் | ஶ்ரீசத்தாண்டவ பஞ்சராஜபசகுநாதோஷாகாம்ஶம்பஷா வந்தேஸாம்பதாண்டவாஹ்ய சசம் ஶ்ரீபோயஷிநாம் ஶிவம் || 3 || நித்யம் நிசபுக சசிதீய சஜாரம் ஜ்யோதிஸ்ஸாரஜ்வம் ஶிவம் சாயாகாயபு விஷ்ணு சவ்யயபதம் ஸம்பாத்ய கோபாநரும் | ஸத்யம் சிந்ந ஜ்ஞேய சபாரம் ஶ்ரீராமசந்த்ராஹ்வயம் ப்ரஹ்மானந்தகாரம் ஶாரண்யசநவம் ஹம்யொ நசஸ்ய ஸ்ஸம் || 4 || வந்தே தேஶிகதேஶிகம் பாயநாதம் வந்தே சகாந்தாதிபதம் வந்தே ஸாயாஜநாஶ்ரயஞ்ச பாதம் வந்தே பரம் ஶாஸ்வதம் | வந்தே ஸபக்ருதாஸம்ஶி க்ஷிதசதிம் வந்தே ஸாகம்ஸாயபும் வந்தே பாபவிநாஶகம் ஸாரகா ரம் வந்தே விஶாலேக்ஷணம் || 5 || ஸச்சிதானந்தரூபாய ஜ்யோதிஷாம் பதயே நம: | ஸபக்ஷணாக்ஷாய ப்ரஹ்மானந்தாய தே நம: || 6 || ஶ்ரீகௌஶ்யாஸஹாஜிரள ஶ்ராதிஶிர ஸ்ஸளவணபஸீதெஷ்டிதம் ஶ்ரீவிஷ்ணாதிஸாரளபவஜிதபதம் தேஷீவ்யசாநம் ஶிவம் | நகுருஸ்ய யதீந்த்ரதேஶிகவரம் தேஶவ்ரஸாதா ஆஹோ: ப்ரஹ்மானந்தயதீந்த்ரபஞ்சவிஹவம் கிஞ்சித்வதாந்ஹக: || 7 || கதாவிஷ்ணாரதோ யொஶீ கந்யபு ஸஞ்சாரந்தவம் | ஸவெஷாம்ப்ராணிநாம் கஷ்டம் வீக்ஷ்ய ஸோஸாசஶக்தவது || 8 || மரம்பாகஶ்சாசாதாஷ்ட்யா ஜீவதாசேவம் வ்யஜிஜ்ஞபக | கெதோபாயெநஸம்ஸாரா ந்யாவ்யதே ஸொதரா ஜஜெ || 9 || ஜதி விஜ்ஞாபித ஸ்ஸத்ரு ப்ரதிஜ்ஞா சகரோ த்திவ: | அஹசாவிஹபவிஷ்யாமீ த்யத்ரஶம்கா நவித்யதே|| 10 || சயாமாயாம்ப்ரஹ்மகாகேஶபத்ரிவம்ஶா ஷிகளத்ஸாஹ: | ஸம்ஹவாமி பாநஶ்ரீவ்யம் ஸாயசநா கோக்ஷவித

[illegible] ॥ ௧௧ ॥ [illegible] ॥ ௧௨ ॥ [illegible] ॥ ௧௩ ॥ [illegible] ॥ ௧௪ ॥ [illegible] ॥ ௧௫ ॥ [illegible] ॥ ௧௬ ॥ [illegible] ॥ ௧௭ ॥ [illegible] ॥ ௧௮ ॥ [illegible] ॥ ௧௯ ॥ [illegible] ॥ ௨௦ ॥ [illegible] ॥ ௨௧ ॥ [illegible] ॥ ௨௨ ॥ [illegible] ॥ ௨௩ ॥ [illegible] ॥ ௨௪ ॥ [illegible] ॥ ௨௫ ॥ [illegible] ॥ ௨௬ ॥ [illegible] ॥ ௨௭ ॥ [illegible] ॥ ௨௮ ॥ [illegible] ॥ ௨௯ ॥ [illegible] ॥ ௩௦ ॥ [illegible] ॥ ௩௧ ॥ [illegible]

[illegible]

ஸாரயி உவரோக்ஷம் தத்வரோக்ஷம் ப்ரஹ்மலக்ஷணம் । ப்ரஜ்ஞாநம்
ப்ரஹ்மவாக்யாதயும் த்வைதாஞமுத ஜாதா ॥ ௫௨ ॥ அஹம்ப்ரஹ்மா
ஸ்மிவாக்யாதயும் யஜுர்வேதோத்பவம்பரம் । தத்வமஸ்யாதி வாக்யா
தயும் ஸாமதோக்யோபநிஷத்கதம் ॥ ௫௩ ॥ அயமாத்மா ப்ரஹ்மேதி ஹ்ய
வர்ணவஸம்பவம் । வாக்யார்தமஹாவாக்யம்ஜஹல்லக்ஷணசைவச ॥
௫௪ ॥ அஜஹல்லக்ஷணம்நித்யமஜஹ ஜஹல்லக்ஷணம் । ஸாமாநாதி
கரண்யஞ்ச விஶேஷண விஶேஷ்யகம் ॥ ௫௫ ॥ லக்ஷ்யலக்ஷணஸம்ப
ந்தம்நிவிகாரஸ்வரூபகம் । ஸவிகல்பம்நிர்விகல்பம் த்ருஶ்யஶப்தாநு
விதகம் ॥ ௫௬ ॥ அந்தர்த்ருஶ்யாநுரூபஞ்ச பஹிஶ்ஶப்தாநுவிதகம் ।
ஸமாதிம்ஷட்விதஞ்சைவ விதர்ப்பம் பரிகீர்திதம் ॥ ௫௭ ॥ அஜ்ஞாநஸ்
திம்ஸ்த்ரம் ஜ்ஞாநஸ்திதஞ்சயா । பதார்தமஹாகாம ஜடாகாஶா
ஸ்வயயா ॥ ௫௮ ॥ கூடஸ்தப்ரஹ்மணோஹம்ஸ தஜ்ஜீவேஶயோ
பவே । சைதந்யத்ராதி ரூபஞ்ச பரேமம் த்ரய நாமநம் ॥ ௫௯ ॥
மஹாகாஶ மஹாஹோத்ர மஹாத்மாதிவிஶேஷகம் । மாயாவித்யாஸ்வ
ரூபஞ்ச பஞ்சபூத ஸ்வரூபகம் ॥ ௬௦ ॥ ஜீவந்முக்தி ஸ்வரூபஞ்ச
ரூபநாமநசைவச । விதேஹமுக்திம்பஹுஶோ ரூபநாமம் பரம்
விது: ॥ ௬௧ ॥ பாயாத்ருஷ்டிம் ஸ்வப்நத்ருஷ்டிம் விஶ்வாவ்யாவஞ்ச த்ருஷ்டி
கம் । ஶிஷ்யாத்ருஷ்டிம் பஞ்சத்ருஷ்டிம் பாயாமாநந்யசைவச ॥ ௬௨ ॥
ஶ்ரீமத்யாஸவாக்யஞ்ச ஸ்வாநுபூதிமத:பரம் । மூலபதேஶவா
க்யஞ்ச ஸாக்ஷாத்காராயரூபகம் ॥ ௬௩ ॥ ப்ரத்யக்ஷாதிப்ரமாணஞ்ச
ப்ரத்யக்ப்ரஹ்மாத்மரூபகம் । ப்ரஹ்மநந்தாதிவித்யாஞ் மஷ்டகம் வேத
ஸஞ்ஜ்ஞிதம் ॥ ௬௪ ॥ கூடஸ்தகாதி ஸந்யாஸம் ஜாபாலாதி ஶ்ருதௌ
ஶ்ருதம் । ஶ்ரீமத்பரமஹம்ஸாநாம் த்வாதீநாம்க்ரமந்தயா ॥ ௬௫ ॥ ஶோ
காயதாதி ஸாம்வ்யாஞம் ஜீவவிஹ்யாஞ லக்ஷணம் । த்ரணாவகாதி
யோமாஞ த்வாரஹ்யாஞ லக்ஷணம் ॥ ௬௬ ॥ ஸம்ஸார் சக்ரஹ்ரமணம்
காமத்யாஶ்ரிதகாரணம் । ஸம்ஸாரதாரணோபாயம்ஜ்ஞாநசைவப
ரம்மதம் ॥ ௬௭ ॥ ஸவமாதீந்யேநகாநிகாமணிசவாநம்:வாநம் ।வா
த்வைரஸாயவாத்யஞ்சம்போயயாமாஸவாநூநி: ॥ ௬௮ ॥ மநஶ்வ
நமாயசஸ்க்திகாரஜிதம்யயா । மாஹமளஜல ஹாஞ்ம்ஸ்வத்ரு
ஷ்டாஞசைவச ॥ ௬௯ ॥ ஶுகாஶோதாஸிமாயசஸ்ஜ்ஜாவஸ்வஹ்யோய
யா । வாஸ்யாவாஸ்த்ராயயாஹ்யாஷ்ஸ்வாணளவாரஷவச்யக ॥ ௭௦ ॥
ஶஶஶ்ரம்மயயாஶிஷ்யாநஶ்ரம்மந்தயேவஹி । ஜத்யாதிபஹூந்ரு
ஷ்டாதேஞ்போயயிஸ்வாநிரஞார் ॥ ௭௧ ॥ ஸ்வஶேஷம்ஸம்ஸம்

ஸமஜ்ஞ்யஶிஷ்டாணாம் ஸக்திஸ்ப்ருஹயே | ஶ்ரோதகாய ப்ராயஶ்சித்தாக்ருத
வாந்ஸ்வயேநஸஹ || ௭௨ || தாயதேதீர்தாஶ்ரமாநி த்ரிஶாஶ்ரயஸ்ப்ருஹா
நிஷ்டயா | வேதாந்தேஷு ஸம்ப்ராப்தம் ஸ்ருதியஸ் ஸாதிஸம்புதா ||
தஸ்மைவஸ்துகாஸிகாரோபாயிகாஸ்ஸாஸிதः | ஸ்வநிஷ்டம் ஸ்வ
நாஸக்திம் பாநம் பாநாந்தீரயஸ் || ௭௩ || ஶரீரவேஷவிஸாதஸ்து
உஶரீரேவஷ்டிதோநிஶம் | விகாரவேஷவிஷாக்ஷேத்ரே நிவிகாரே
ஶிவேஷ்டிதः || ௭௫ || ஸஸாவ்யாமைதஸ்ஷ்டம் ணைஸ்நிஷிதீக்த
கஸ்மைஷः | ஶாஸ்த்ரவிவைத்ஸ்யஸவஸ்மைஸ்ஸஸம்போத்யஸாஸநம் ||
ஸபூஷாம் ப்ரஸாஸவஸ்துப்ராவஶாஸந்க்ருவாகரः | ப்ரஹ்மாந
நேநிஶ்ஜஸ்ஸஶிஷ்யாஶ்ரஶிஷ்யகாः || ௭௭ || யப்ரஹ்மாநதஶிஷ்ய
ஸ்தேதேவஸக்தாநஸம்ஶயः | இதிஶ்ரோகேஷவிவேகிநப்ரஸ்நமை
ஶிகः || ௭௮ || ஸதமேஸஹவஸ்மைதாஷாவிக்ஷேஜ்ஞாநஸ்ஶாஸயா |
ஸமேஶ்ரோகம்ப்ரதவாநூதைவः ப்ரஹ்மஸமஸம்ஹாஸநிः || ௭௯ ||
நாரஸஸ்வஸ்வாமேதம்ப்ரநாநகாஶிபாஸ்யம் | ஸேத்தஸ்ரஹதே
ஶீஸ்ரம்ஸக்திப்ரஷயாநிரா || ௮௦ || நஸேஸ்தைவதேவேஶநஸேக்ஸகார
ணாகர | நஸேக்ஸஸிதாநஸநஸேக்ஜகதாம்பதே || ௮௧ || நஸேக்
காரணாயீஶநஸக்ஸக்ஷிதாய | நஸேக்பாஸகாஶநஸேக்ப்ரஹ்ம
ஸாவந || ௮௨ || நஸேக்ஸநிஶாதஸமநஸேக்ஸகஸாநஸ | நஸேக்
ப்ரஸாவயேஸஶநஸேக்ஜ்ஞாநவாரப || ௮௩ || நஸேக்ஜ்ஞாநிநாம்ஶ்ரே
ஷ்நஸேக்வேபாயகஸ்ய | ஸவஸாதீந்நேகாநிவேதக்தாணிஸஸதீ
ரயந்து || ௮௪ || ஸகாதேஸஸ்வாமேதம்வாஸவப்ரத்தம்தவோயநः |
யநிஸித்தஸஹப்ராக்தம் தஸகாயபும்ஸஸைஶ்ம்ஸஹமஸஸ் || ௮௫ || ஸத்தாத
ராஸாயாராஸ்வஸித்தாஸ்க்ராநஸம்ஶயः | ஸதாகம்ப்ராக்ருதம் ஸாவம்
ஸஸ்த்ரஜ்வமிஶேஷதः || ௮௬ || ஸ்வஸாநம்ப்ராப்நஸீஶகஸாஶ்ர
ரஜதாவரும் | ஜீவைவப்ராக்யம்ஸஸகண்யுஸோதஹாஸஸஸந்திதः || ௮௭ ||
ஸவபும்ஸஸப்ராயபுநாஸத்ராத்ம்காராவாயுவிஶ்ஹம் | யத்ஸா
வாதீநவண்யிஸாஷண்தா வாரஸம்யாதாநு || ௮௮ || க்ருஸாதேஜ
தஸ்ராவநஸ்ஸஸ்புநம்யதாவாரா | தயாஸஸ்ப்ராயிபுஸவிக்ருதம்
விபிஸஸ்வ || ௮௯ || ஸாம்பவாக்யம் ஸாஸம்ஸ்ரதம் ஸ்வஸாநம்
ப்ராப்வாநுநிः | ப்ரஹ்மாநம்ஷஸ்யம் தேவஃஜீவைவபுராக்யஸ்நஸ்
ரநு || ௯௦ || ஜீவநூக்தஸ்திம்த்ருக்ராநிஶ்ருஃவேவநோயயா | விதேஹ
ஸக்ரஸவஸாவ்வாநீஶ்ரஃவாரः || ௯௧ || ஹகாதிபுஹஞ்ஜநஶீஸாநு
ஸஸ்திதாநாஶ்ருக்ஷணே | ப்ரஹ்மஸவேஸ்ஹாதேவோஶ்ரோகாநம்ப

ஹாகாரக: ॥ ௯௩ ॥ ஶ்ரீமச்சந்த்ரமௌலிவக்த்ரரசநயுதோ ஶ்ரீஶைலவாஸ
ஸிந்துதீர்தாந் ஸுகயந் ஸகலஜநஹிதோ ஶ்ரீநிவாஸோ விபூ
ஷே । ஶ்ரீமச்சங்கரார்யாத் ஸுகவர்ணமயாம் ஶ்ரீதேவதேவப்ரியோ ப்ர
ஹ்மாநந்த தீர்த்ய ஶ்ரீகவயோ மஹாவத்ஸவப்ரஹ: ॥ ௯௩ ॥ ஸர்வ
ஸம்பத்ப்ரதாத்மஜ்ஞாநதா ஜ்ஞேய ஸம்பூர்ணாநி ஸம்பூர்ணி: । ஜகத்ஸந்நயாஸ்தி
ப்ரஹ்மதேஶ்யஸ்வாமிநாந்தாபாஜ: ॥ ௯௪ ॥ தேவதேவோ ஜகந்நாதோ
காருண்யாம்ருதவாரிதி: । ஸர்வபூதாநந்ததாயீ ப்ரஸ்ருதோ ஸம்பூர்ண
நாதவ ॥ ௯௫ ॥ ஸர்வஸம்பத்ப்ரதாநே நிவ்ருத்திஶ்ருதிப்ரதாத: ।
த்ரைலோக்யநிஷ்டஜ்ஞாநஸாக்ஷாத்காரவிஶுத்தம் ॥ ௯௬ ॥ ஶ்ருதிஜ்ஞா
நவிஶேஷஜ்ஞஜ்ஞாநவிஜ்ஞாநவாரதம் । ஸர்வஸம்ஸத்ஸித்திவிதாதஞ்யா
க்ஷிஸாரஸம்ப்ருதம் ॥ ௯௭ ॥ ஸர்வாகர்ஷஸம்பூர்ணஸ்தாவிநாவிஸ
யோக்தம் । ஸந்ததம் ஶுபஸம்பூர்ணாஸ்வஸ்திஸம்ஹ்ருதிஸ்ஸ்ரது ॥ அகூ ॥
ஸர்வம் ஸக்தம் நஶ்யதீதி தத்வம் நிஶ்சித்ய பாவிதாந் । தத்தாரணாயஸ்ம
ரேஷோ விதாதம் ப்ராக்வாநயம் ॥ ௯௯ ॥ ஸுவர்ணகாருண்யாப்தி
ஸம்பூர்ணம் ஶோபமாநஸம்பதி । தயாம்ருதஸம்பூர்ணாயிதம் ஸத்ய
ரோகாருண்யவஶாச ॥ ௧௦௦ ॥ கிஞ்சித்ஸம்ப்ராப்தம் ஸம்பூர்ணம் ப்ர
ஹ்மாநந்தஸ்வஸம்பவம் । ப்ராதஸ்ஸமர்தம் நிராதிவம் மதிஸ்த்ருஜ்ஞேய
யாதேந ॥ ௧௦௧ ॥ ஶ்ரீஶங்கரவிஜயம் ஸம்பூர்ணம் கடவாரகம் । ஶ்ரோ
கேப்யவ்யாதிரோகஶ் ஶமநாயநயாநகாஶ் ॥ ௧௦௨ ॥ ஸர்வஸௌக்ய
வாவஶாச்ஸதிதா ப்ரஹ்மஜ்ஞவித்ருபயே ஸம்பூர்ணாயி காமி
ணாஞ்சநதயே தந்வ்யபிஷ்ட்யணாயச । ஸம்ஸாரார்ணவதார
ணாயதயா ஶ்ரீஶங்கரவிஷ்ணுயே திவ்யம் தத்விதா மதிஶ்சவாரம் நா
ந்யத்ரோகேஸ ॥ ௧௦௩ ॥ ஸம்ஸாரஹந்த்ரீஸதாய ஶ்ரீதேஶதேஶ ஜ்ஞவார
ஸ: । ஶ்ரவணாதிஸம்ஸாதநம் ஶ்ரீவஜ்ஞாநவிஶாரதா: ॥ ௧௦௪ ॥
நிஸ்த்யாதா: ஶ்ரேயஸா ஸமாஹிதா ஸர்வஸாயகா: । ஸதத்ஸ்ரஷ்ட
ஸம்ஹாதாரோ ஸஞ்சேஷ்யஜ்ஞாஸ்ஸாந்தா: ॥ ௧௦௫ ॥ ஸதத்ஸம்ஹாத்ரி
விஶ்வம் பதிம் ஸமர்பயேத: । தஸ்ய ஸத்கீர்த்திமாலா நாத்ருகாயம்வி
ஸாரணா ॥ ௧௦௬ ॥ பாத்ராய பூர்ணா வ்ருதாம் பந்தாய பந்
ஸாந்த்யாய । ஶோக்ஷாய பூர்ணா ப்ரதாரக்ஷா ஸம்பூர்ணம் ஶுபே
ஸ்வம் ॥ ௧௦௭ ॥ மங்களம் ஶங்கரார்யாய ப்ரஹ்மாநந்தாய மங்களம் । மங்களம்
ஸர்வஶாஸ்த்ராய தத்த்வஜ்ஞாய ஸதா மங்களம் ॥ ௧௦௮ ॥ மங்களம் ஜ்ஞாந
தாத்ரே ச ஸர்வப்ரஹ்மண்யாய மங்களம் । மங்களம் ஶ்ரேஷ்டநாதாய ஸர்வ
ஜ்ஞாய மஹாத்மநே ॥ ௧௦௯ ॥ மங்களம் ஶ்ரீஶங்கரார்யாய மஹதே

ஸதா । ஶம்பவே விஶ்வரூபாய ஸர்வப்ரகாஶாய ஶம்பவே ॥ ௧௧௦ ॥
ஶ்ரீசக்ரநாதஶ்லோகம் ராமலிங்கஸ்வரூபிணம் । ப்ரஹ்மஜ்ஞானாத்மகம் த்யாயேத் ஞானப்ரதம் ஸதா ॥ ௧௧௧ ॥

ராமலிங்கவிஜயம் ஸம்பூர்ணம்.

சுயம்பிரகாசரான கணேசனையும், ஸ்ரீ மீனாக்ஷியையும், சுந்தரேசுவரரையும், சுந்தரதாண்டவருனசபாநாயகரையும் நமஸ்கரிக்கிறேன். சகல சம்பத்தும் பொருந்தின மதுவனக்ஷேத்திரமென்னும் கோவிலூரில் வசித்துக்கொண்டிருந்தவராயும், சாதனசதுஷ்டயத்துடன் கூடின மாணாக்கர்களுக்கு எதார்த்தமான பரமாத்தும ஞானத்தை சன்றருளுகின்றவராயும், அசுவத்தநாதர் முதலான சிடகோடிகளா லெப்பொழுதும் பூஜிக்கப்பட்டவராயுமிருக்கிற ஸ்ரீ முத்துராமலிங்க குருசிரேஷ்டனை நான் நமஸ்கரிக்கின்றேன். பரமசிவனுக் கதிகப் பிரியராயும், லக்ஷ்மி சரஸ்வதி முதலானவர்களினால் பூஜிக்கப்படுகிறவராயும், சாந்தமான மனதுடன் கூடினவராயும், எப்பொழுது மானந்த நடனம் புரியு மன்பனிடத்தில் மனதைச் செலுத்தி பிர்மானந்தத் திருப்தி யுடையவராயும், ஞானக்கடலாயும், சர்வவியாபகராயுமிருக்கிற அசுவத்தேச யதீந்திரருக்கு வந்தனம் புரிகின்றேன். அழியாதவராயும், மும்மலங்களற்றவராயும், இரண்டற்றவராயும், மூப்பற்றவராயும், அறிவுரூபராயும், மாயாகாரியமற்றவராயும், சிவனும், நாசமற்ற பதத்தி லிருப்பவராயும், கோபமற்றவராயும், மூன்றுகாலங்களிலுமிருப்பவராயும், அறிவுக்கட்டிபாயும், இம்மாம்சக் கண்ணா லறியத்தகாதவராயும், மாயைக் கப்புறப்பட்டவராயும், ஸ்ரீ ராமலிங்கமென்ற பெயரையுடையவராயும், சரணாகதியடைய யோக்கியராயுமிருக்கிற பிர்மானந்தகுருவை அடிக்கடி நான் எப்பொழுதும்பூஜிக்கின்றேன். உலகத்திலுள்ள குருக்களுக்குக் குருவாயும், சுரர்களால் துதிக்கப்படுகிறவராயும், மாலால் பூஜிக்கப்பட்டவராயும், தன்னையடைந்த நண்பர்களுக்கிருப்பிடராயும், வேண்டும் வரத்தை அளிக்கிறவராயும், சிரேஷ்டராயும், அழிவில்லாதவராயும், சகலகலைகளையும், சாஸ்திரங்களையு மறியும் புத்தியைக் கொடுப்பவராயும், ரகசியார்த்தங்களைத் தெரிவிக்கிறவராயும், பாபத்தைப் போக்க வல்லமை யுடையவராயும், தேவகுருவாயும், விசாலமான நேத்திர வீக்ஷண்ணியமுடையவராயுமிருக்கிற குருவை அடிக்கடி வணங்குகின்றேன். சச்சிதானந்தரூபராயும், உலகத்திலுள்ள சூரியாதி அஷ்டப்பிரகாசங்களுக் கப்புறப்பட்ட சுயம்பிரகாசராயும், அநேகவிதலக்ஷியராயுமிருக்கிற பிர்மானந்த குருவின் பொருட்டு ஸ்துதி செய்கின்றேன். சகல நீர்வளமும், நிலவளமும், அஷ்டைசுவரியங்களும் பொருந்திய கைலயங்கிரியின்கண் வேதாந்தமாகிற நவரத்தின

பீடத்தில் எழுந்தருளியிருக்கின்றவராயும், விஷ்ணுமுதலான தேவக்கூட்டங்கள் வணங்கும் பாதகமலங்களை யுடையவராயும், சுவப்பிரகாசராயு மிருக்கிற பரமசிவனை வணங்கியும், பரமகுருவான அசுவத்தேச யதீந்திரரையும் நமஸ்கரித்து சர்வவியாபியான ஈசனனுக்கிரகத்தினால் பிர்மானந்த சரித்திரத்தை பாலனாகிய நான் தெரிந்தமட்டி லுரைக்கின்றேன். பூர்வத்திலொருக்கால் நாரத மகா முனிவர் சகல லோகங்களிலும் தெய்வானுக்கிரகத்தால் சஞ்சரித்துக்கொண்டு, இக்கலியுகத்தில் பூலோகமடைந்து, இப்புவியில் சம்சார துன்பத்தால் வருந்துகின்ற தன் சகோதரர்களான பிராணிகளின் துக்கத்தைக்கண்டு சகிக்கமாட்டாதவராய் வெள்ளியங்கிரியில் விளங்குகிற பரமசிவனை யடைந்து தன்னுறவினர்கள் படுந் துயரத்தை வெளிப்படுத்தினார். ஏ தேவா எவ்வித உபாயத்தால் என்னுடன் பிறந்தோர் சம்சாரபந்தத்திலிருந்து விடுபடுவார்களோ, அவ்வித உபாயத்தை அனுக்கிரகிக்கவேண்டுமென்றுகேட்ட பிர்மகுமாரனுக்கு விடை அளிக்கின்றார். ஏ நாரதா அச்சீவர்கள் உய்யும்வண்ணம் யானவதரித்து இரக்ஷிக்கின்றேன், இதில் கிஞ்சிற்றேனும் சந்தேகமில்லையென்று சொன்ன ஈசன் வார்த்தையைச் செவியுற்ற நாரதர் தாமவதரிக்கின்ற ஸ்தானத்தை வினவ, பரமசிவன் யான் ஜீவன்முக்திபுரமென்கிற மதுரைமாநகரின்கண் மறையவர்குலத்தில் ஆத்திரேய கோத்திரமாகிற சமுத்திரத்திற்கு கவுஸ்துபரத்தினமாய் நல்லோர்களுக்கு முக்தி சித்திக்கும்பொருட்டு இந்த சுவயம்புவான ஜோதிர்லிங்கத்திலிருந்து ஆவிர்பாவமாய் திரும்பவும் ஜடிதியில் இதில் லீனத்தையடைகிறேனென்ற சிவவாக்கியத்தை செவியுறக்கேட்ட அம்முனியானவர் அனேகவிதமான வேதஸ்தோத்திரங்களினால், பக்திபரவசத்தால் அரனைத் துதித்து மகரிஷிகளால் வணங்கப்பெற்ற நாரதரானவர் நாம் வந்த காரியம் முடிவுபெற்றதென்ற சந்தோஷத்தினால் அத்தருணமே சத்தியலோகஞ் சார்ந்தனர். பிறகு சிலநாட்சென்று தயாளுவானதேவன் தன்னன்பனான நாரதவாக்கியத்தை யுணர்ந்து, விகாரிவருஷம் தைமாதம் குருசந்திரர்கள் நல்லராசியில் சஞ்சாரகாலமான சுவாதிநக்ஷத்திரமும்கூடின சோமவாரத்தில் சுபலக்கினத்தில் பிராமணகுலத்தில் பிர்மசாக்ஷாத்காரத்தை யடைந்த ராமசுவாமிசாஸ்திரிகளின்மனைவி மீனாக்ஷியினுடைய கருப்பகோளத்தில் ஜகன்னாதராயும், மனிதர்களா லெளிதிலறியக்கூடாதவராயும், சந்திரகலையை தரித்தவராயு மிருக்கிற பகவான் மாயாமானுஷ விக்கிரகத்துட னாவிர்ப்பாவமானார். அது எதுபோலவென்றால், நீரே ஆலங்கட்டியாய் தரித்ததுபோலும், உருக்கின நெய்யே கடின நெய்யானதுபோலவும், சமஸ்தமான ஐசுவரியங்களுக்கும், பராக்கிரமங்களுக்கும், கீர்த்திகளுக்கும், அஷ்டலக்ஷ்மிகளுக்கும், ஞானத்திற்கும், வைராக்கியத்திற்கும் காரணராய் விளங்குகிற யாதொருபகவானுண்டோ அவரே மூடஜனங்க ளெளிதில் ஞானத்தைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு மானைக்காட்டி மானைப்பிடிப்பதுபோல், மானிடதேகத்தை விளை

யாட்டினுலந்த பரமசிவனடைந்தார். அப்பரமசிவன் பாலபாவத்தையடைந்து பாலகிரீடையுடன் கூடினவராயிருந்து ஐந்துவயதுசென்றபின்னர் வித்தியாப்பியாசம் செய்து, பிறகு பிர்மசரியாச்சிரமமான முதலாவதாச்சிரமம்வகித்து அதின்பின்னர் வேதாத்தியயனங்களின் கரையை யடைந்தவராயும், சகலமான சாஸ்திரங்களையு மதினுண்மையையும் கற்றவராயும், உலகவிவகார ஞானங்களுணர்ந்தவராயும், வைதீக ஆசாரத்தையுடையவராயும், எப்பொழுதும் சந்தோஷமான மனதுடையவராயும், பிறருக்குப் போதிக்கிறதில் சமர்த்தராயும், ஆத்துமாராமராயும், அனவரதம் மௌனியாயும், குருவிசுவாசத்துடன்கூடிக் கொண்டிருக்கிற அந்த சிவனுனவர் இரண்டாவதான கிரகஸ்தாசிரமபாவத்தையடைந்து மூடர்கள்போல் இல்வாழ்க்கையிலிருந்து ராமலிங்கசாஸ்திரியென்னும் நாமகரணம்பூண்டு புத்திரர்களையுண்டுபண்ணியும், வேதத்தினர்த்தத்தை யுணர்ந்தவர்களாயும், லோககுருவாயுமிருக்கிற பகவத்பூச்சிய பாதாளான சங்கரதேசிகர்களால் செய்யப்பட்டிருக்கிற விவேகசூடாமணியென்கிற கிரந்தத்திற்கு தமிழ் மொழிபெயர்ப்பும், ஷை குருவா லியற்றப்பட்டிருக்கிற சர்வ வேதாந்த சித்தாந்த சாரசங்கிரகமென்கிற கிரந்தத்திற்குத் தமிழ் மொழிபெயர்ப்பும், வாஸுதேவயதியினுற்செய்யப்பட்டிருக்கிற தெக்ஷிணுமூர்த்தி வீக்ஷா விலாசமென்கிற கிரந்தத்திற்கு தமிழ் மொழிபெயர்ப்பும், வித்தியாரண்ணிய மாமுனியினுற் செய்யப்பட்ட பஞ்சதசியென்கிற கிரந்தத்திற்குப் பதயோஜனி யென்கிற தமிழர்த்தமொழிபெயர்ப்பும், ஸ்ரீராமலிங்கசாஸ்திரியளென்கிற குருவானவருண்டுபண்ணி சுந்தரமுமனுன் தன்மூத்தமைந்தனுக்கு தன்பிர்மகுலம் விருத்தி யடையவேண்டி மேற்கூறிய புஸ்தகங்களைக் கொடுத்து, சுந்தரம் முதலான அனேகசிஷியகோடிகளுடன் தன்குடும்பத்திலெப்பொழுதும் பிர்மவிசாரம் செய்து அச்சிவனுன நம்மாசான் காலம்கழித்து நாடகத்தில் வேஷதாரிபோல் குடும்ப பாரத்தைவகித்து யெதார்த்தத்தில் சம்பந்தமற்றவராய் விளங்கினுர். மற்றிதர மானுக்கர்களுய்யும்வண்ணம் தான்தானே வைராக்கியம் நிறைந்தவராயும், சாஸ்திரத்திற் சொன்ன சற்குணங்களுள்ளவராயுமிருக்கிற அசுவத்த யதீந்திர குருவை இத்துவாதசாந்த க்ஷேத்திரத்தில் குருவாய் தானே பாவனைசெய்தனர். அனேகசீடவர்க்கத்துடன் பிர்மநிஷ்டசிரேஷ்டரான அம்மகான் சிறிதுகாலம் சென்றபின்னர், (3) வதான வானப்பிரஸ்தாசிரமத்தை யடைந்து அனேகதேசங்களில் சஞ்சரித்து அங்கங்கிருக்கும் பக்தஜனங்களுக்கு தன்னுத்துமஞானத்தையருளி, அக்குருவானவர் நடேசன் விசுவனுதனென்ற பதஞ்சலி வியாக்கிரபாதமகரிஷிகளுக்குச் சமானமான யிந்த (2) சிஷியர்களுடனும் வேலைக்காரனுன சங்கரன் முதலானவர்களையும் கூட்டிக்கொண்டு மோக்ஷபூமியான வாரணுசியை யடைந்து விசுவனுதனையும், விசாலாக்ஷியையும், விஷ்ணுவையும், டுண்டி விநாயகனையும், தெண்டபாணியையும், பைரவனையும், பாபநாசம்செய்கிற மகேசுவரனையும், காசியை

யும், சுத்தகங்கையையும், குகையையும், மணிகர்ணிகையும் விதிப்படி பூஜை செய்து, மறுபடியும் பிரயாகையை யடைந்து பிதிர்க்கள் முதலானவர்களுக்கு தர்ப்பணம் செய்து சந்தோஷ சித்தராய் சிறிதுகாலம் அவ்விடத்தில் வாசம் செய்தனர். மத்தியிலிருக்கிற அநேகக்ஷேத்திரங்களைத் தெரிசித்தும், தீர்த்தங்களாடியும், அங்கங்குள்ள மாணாக்கர்களுக் கனுக்கிரகம்செய்து அத்துவைதமார்க்கத்தையும் நிலை நிறுத்தி ஹாலாசிய க்ஷேத்திரம் வந்தடைந்தார். வைராக்கியத்துடன் நிறைந்தவராகி (4) நான்காவதான பரமஹம்சாசிரமம் பூண்டு பிர்மானந்தாசிரமி யென்னும் மகிமையான கீர்த்தியைப் பெற்று மதுராதேசத்திலிருக்கிற சிஷியவர்க்கங்களுடன்கூடி யம்முனிசிரேஷ்டர் நித்தியானித்தியவிவேகம் முதலான நான்குசாதனங்களின் சுவரூபத்தையும், சம்பந்தம், விஷயம், பிரயோசனம், அதிகாரிகளுடைய விவரணங்களையும், பழுதையிற் பாம்புபோல் ஜீவேசுவர ஜகத்து கற்பனையாய்த் தோன்றியிருக்கிற வத்தியாரோபக் கிரமத்தையும், அதினபவாதத்தையும், ஜாக்கிர சொப்பன சுழுப்திகளின் சுவரூபத்தையும், அவைகளில் ஆத்துமசாக்ஷியாய் விளங்குந்தன்மையையும், மாயிகமலம், ஆணவமலம், காமியமலங்களின் லக்ஷணங்களையும், அவைகளின்நாசத்தையும், ஈச ஜீவ ஜகத்பேதங்களின்சம்சாரத்தையும், காண்பான் காக்ஷி பொருளிவைகளின் லக்ஷணங்களையும், சஞ்சித, ஆகாமி, பிராரப்த கர்மங்களின் விசாரத்தையும், முக்தியடையு முபாயத்தையும், சுவர்க்கம், அந்தரிக்ஷம், பாதாளமென்கிற லோகங்களி லுண்டாகிற துக்கங்களையும், ரேசக பூரக கும்பகங்களி னப்பியாசத்தையும், ஜீவன் சம்சாரத்திற்கட்டுண்டு பெண், பணம், மைந்தன் முதலான விஷயங்களில் திரியும் விசேஷத்தையும், பூதப்பிரதிபந்தம், பவிஷியத்பிரதிபந்தம், வர்த்தமானப்பிரதிபந்தங்களின் குணங்களையும், சமஷ்டி வியஷ்டி பாவங்களையும், காரியகாரணங்களின் சுவரூபத்தையும், சென்றகாலம் நிகழ்காலம் வருங்காலங்களின் தன்மையும், மன்மதன் வல்லமையும், காலங்களுக் கப்புறப்பட்ட வஸ்துவின் லக்ஷணத்தையும், காமிகம் முதலிய ஆகமபேதங்களையும், ஸச்சிதானந்தலக்ஷணத்தையும், அஞ்ஞானம், ஆவரணம், விக்ஷேபம், பரோக்ஷம், அபரோக்ஷம், துக்கநிவர்த்தி, ஆனந்தாவாப்திகளின் விசேஷத்தையும், ஜீவத்தோற்றத்தையும், ஸ்தூல சூக்ஷும காரணசரீர லக்ஷணங்களையும், ஆப்தம், அங்கம், ஸ்தானம், சத்பாவங்களென்ற நான்குவிதபணிவிடையின் விசேஷத்தையும், அன்பனுசான் சுவரூபங்களையும், அன்னமயப் பிராணமய மனோமய விஞ்ஞானமய ஆனந்தமய கோசங்களின் லக்ஷணத்தையும், அவைகளிலாத்துமா சாக்ஷியாய்ப் பிரகாசிக்குந்தன்மையையும், அறியாமை நான் எனது காமம் குரோதம் இவைகளான பஞ்சக்கிலேச சுவரூபங்களையும், தேகவாசனை, லோகவாசனை, சாஸ்திரவாசனைகளின் குணங்களையும், அவைகளின் நிவர்த்திரூபமான தத்துவஞான வாசனாக்ஷய மனோநாசங்களின் சுவரூபத்தையும், உபக்கிரம உபசம்மாரம் அப்பியா

சம் அபூர்வதை பலம் அர்த்தவாதம் திருஷ்டாந்தம் சொல்வது முதலான ஆ
றுவிதத்துடன் குருமுகமாய் விசாரம்செய்கிறதே சிரவணமென்றும், அதின்
பின்னர் அச்சிரவணத்தையே தனித்திருந்துச் சிந்திப்பதே மனனமென்றும்,
அச்சிரவண மனனங்களினால் நிராபேக்ஷயா யிருக்கிற பிர்மவஸ்துவில் த
டையில்லாத சுவானுபவ பிரவாஹரூபமே நிதித்தியாசனமென்றும், தியானம்
செய்தவன் தியானம்செய்த விருத்தி இந்த இரண்டுமற்று தியேயமாத்திர
மான வஸ்துவில், காற்றில்லாதவிடத்தில் வைத்திருக்கிற தீபம்போல் சித்த
மசைவற்றிருப்பதே சமாதியென்றும், பரோக்ஷ ஞானலக்ஷணமும், அபரோ
க்ஷ ஞானலக்ஷணமும், ருக்குவேதசம்பந்தமான ஐதரேயோபநிஷத்தின் முடி
வான பிரஞ்ஞானம் பிர்மமென்றப்பியாசமகாவாக்கியார்த்தத்தையும், எஜுர்
வேத சம்பந்தமான பிரஹதாரண்ணியோபநிஷத்தின முடிவான அஹம் பிர்
மாஸ்மி என்றனுபவ மகாவாக்கியார்த்தத்தையும், சாமவேத சம்பந்தமான
சாந்தோக்கியோபநிஷத்தின் முடிவான தத்துவமஸி யென்ற உபதேச மகா
வாக்கியார்த்தத்தையும், அதர்வணவேதசம்பந்தமான நிருசிம்ம உத்தரதாப
னீய உபநிஷத்தின் முடிவான அயமாத்துமா பிர்ம என்கிற சாக்ஷாத்கார
மகாவாக்கியத்தி னர்த்தத்தையும், விட்ட லக்ஷணையும், விடாத லக்ஷணையும்,
விட்டுவிடாதலக்ஷணையினால் மாயாவித்தியாஜீவேசுவர வாச்சியங்களைத்தள்ளி
லக்ஷியார்த்தமான பிர்மகூடஸ்தர்களுக்கு யேகபாவத்தையும், மகான்களால்
சொல்லப்பட்டிருக்கிற அந்தர் திருசியானுவித்தம், அந்தர் சப்தானுவித்தம்,
பகிர் திருசியானுவித்தம், பகிர் சப்தானுவித்தம், சவிகற்பம், நிர்விகற்பம்,
இவ்வித ஆறுவித சமாதிகளின் லக்ஷணத்தையும், அவைகளின் சுவானுபவத்
தையும், பிந்து, பிந்துஜாக்கிரம், மகாஜாக்கிரம், ஜாக்கிரசொப்பனம், சொப்ப
னம், சொப்பனஜாக்கிரம், சுஷுப்தியென்றஞ்ஞானபூமிகளின் லக்ஷணத்தை
யும், சுபேச்சை, விசாரணை, தனுமானசி, சத்துவாபத்தி, அசம்சத்தி, பதார்த்
தாபாவனை, துரீயமென்ற ஞானபூமிகளின் மகிமையும், அவைகளின் விசேஷ
ணங்களையும், கடாகாச மகாகாச ஜலாகாச மேகாகாச சுவரூபங்களையும், அ
வைகளின் தன்மையான கூடஸ்த பிர்ம ஜீவ ஈசுவரபாவங்களையும், துவைத
விருத்தி, சாக்ஷிவிருத்தி, அகண்டாகாரவிருத்தி, (அகண்டைகரசவிருத்தி,) இ
வைகளின் தர்மங்களையும், அஞ்ஞான சந்தேக விபரீதபாவங்களின் லக்ஷ
ணத்தையும், அவைகளின் நிவர்த்திக் குபாயத்தையும், மகாகர்த்தா, மகா
போக்தா, மகாத்தியாகியான ஜீவன்முக்தர்களின் விசேஷணங்களையும், மாயா
வித்தியாசுவரூபத்தையும், ஆகாசாதி பஞ்சபூதசுவரூபத்தையும், ஜீவன்முக்தி
லக்ஷணத்தையும், விதேகமுக்தி லக்ஷணத்தையும், ரூபநாசத்தையும், அரூப
நாசத்தையும், பாதாதிருஷ்டியும், (சொப்பன திருஷ்டியும்,) மித்தியாதிருஷ்டி
யும், தன்மயதிருஷ்டியும், லக்ஷணவாக்கியத்தையும், சுவானுபூதிவர்க்கியத்தை
யும், குருவால் சொல்லப்படுகிற உபதேசவாக்கியத்தையும், சாக்ஷாத்காரவாக்

கிபத்தையும், பிரத்தியக்ஷம் முதலிய எண்விதப்பிரமாணங்களையும், பிரத்திய காத்தும பரமாத்தும ஐக்கியத்தையும், பிரவர்த்தியின் மகிமையும், ஜாபாலம் முதலான உபநிஷத்தில்சொல்லும் குடீசகாதி நான்குவித சன்னியாசத்தை யும், ரிபுமுதலான பரமஹம்சர்களின் வைபவங்களையும், லோகாயதன் முத ல் சாங்கியனீறா யிருக்கிற ஜீவப்பிராந்தர்களின் லக்ஷணத்தையும் துரும்பை பூஜிக்கிறவன் முதல் ஈசுவர பூஜகனீறாயிருக்கிற ஈசுவரப்பிராந்தர்களையும், கா மிகாதி ஆசிருதர்களையும், சம்சார சக்கரத்தின் மயக்கத்தையும், அதின் நிவிர் த்தியைச்செய்யும் மேலான ஞானோபாயத்தையும், இவை முதலான அனேக கிரமங்களையும், தூங்கி விழித்தது முதல் மறுபடியும் தூங்கும் வரை அடிக்க டி நம் குருவானவர் தினந்தோறும் அன்பான சிடருக்கு அனுக்கிரகம்செய் துப தேசித்து வந்தனர். கந்தர்வ நகர் போலவும், கிளிஞ்சி வெள்ளி போலவும், கானல் நீர் போலவும், கனவூர் போலவும், வானமை போலவும், கயிற்றிற் பா ம்பு போலவும், மலடிசேய் போலவும், தரிபு மான் போலவும், முயலின் கோ டு போலவும், மனிதக் கொம்பு போலவும், பிச்சகந்தானது சுத்தப் பொய்யெ ன்று இவை முதலிய திஷ்டாந்தங்களாலே அனுதினமும், அய்யனருளிச் செ ய்தனர், மாணக்கர்களுக்கு பக்தி விர்க்தியின் நிமித்தம் தானும் தன் குரு வான அசுவத்தேசயதீந்திரரை பூஜை செய்து, தன் சுபானுபவ நிச்சயத்தால் லோகோபகாரமாய், துரீயாதீதா சிரமமடைந்து வேத முடிவின் ரகசியார்த்த ங்களை வஞ்சனையற்று சுவானுபூதியையும், சொப்பன திருஷ்டியும், அனைவர தம் அன்புடனறைந்தனர், சரீரத்துடன் கூடினவராயிருந்தாலும், அசரீர ராயும், விகாரியாய்த் தோற்றினாலும், நிர்விகாரியாயும், சாக்ஷியாயிருக்கிற சி வத்தில் அமைதி பெற்றனர். கணக்கற்ற மாணக்கர்களுடன் கூடியவர்களுக் கு குருபாவத்தையும், தானடைந்து பிர்மானந்தத்தில் மூழ்கி பேச்சற்ற நிலை யில், அவ்வன்பர்களையும் அமைந்திருக்கும்படி செய்து எவர்கள் பிர்மானந்த சிடர்களோ அவர்களை ஜீவன் முக்தர்களாகச் செய்து மிவ்வுலகில் மேலான கீர்த்தியை நம்மாசானடைந்தனர். அவ்வைபவத்தை, ஞானநோக்காலுணர் ந்த நாரதமுனிவர் பூலோகமடைந்து நமதய்யனை யீசனை வணங்கி துதிக்கி ன்றனர். தேவாதி தேவனே போற்றி, கருணாகரனே போற்றி, ஸச்சிதானந் த ரூபனே போற்றி, பூர்ணவானே போற்றி, பிர்மபாவனனே போற்றி, முனி கள் பூஜிதனே போற்றி, அன்பர்கள் மனவாசனே போற்றி, குருநாதனேபோ ற்றி; ஞானபாரகனே போற்றி, போதகப்பிரியனே போற்றி, ஞானிகள்வரனே போற்றி, யென்றிவ்விதம் வேதஸ்தோத்திரங்களினால் முறையிட்டனர். பின் னர் அக்குருவினேகாந்தஞ் சென்று தபோதனரான நாரதமகாரிஷியானவர்; ஏ, அய்யனே யாதுபற்றி யிவ்விடம் யெழுந்தருளினீரோ, அக்காரியம் முடி வு பெற்றது, துவாதசாந்த வாசிகளான என்னுடன் பிறந்தோர், தங்களனுக் கிரகத்தால் ஜீவன் முக்தர்களானோர்களிதிற் சற்றேனுமையமில்லை அண்ணலே,

இனி இம்மானிடவேடம் விடுத்து தங்கள் வாசஸ்தலமான கைலாசகிரிமே
வி பூர்வ ரூபமான ஈசுவரவடிவத்தை யடைவீராகவென யிவ்வாறோதினர்.
இம்முறையைக் கேட்ட அவ்வீசன்புன் சிரிப்புடன் கூடினவராகி, முன்னிந்த
கலியுகத்தில் உன்வேண்டுகோளின்படி சங்கராசாரியரென்றும் நாமம்பூண்டு
காணுபத்தியம்முதலான ஆறுமதவாதிகளையுங்கண்டித்து, இக்கலியில், அத்து
வைதமதஸ்தாபனம்செய்து, முன்னிந்த நீலகண்டபரமேசுவரனென்னு மா
த்துமலிங்கத்தில்யான் முன்னெப்படி அந்தர்த்தானம் செய்தேனோ, அவ்விதமி
னிச்செய்கின்றேனென்று, பிரமகுமாரனான நாரதரைநோக்கிக்கூறினர். இம்
மொழியை யுணர்ந்த விதிமைந்தனும் தனதிருப்பிடமேகினர். நமதாசான் பிர்
மானந்ததேசிகன் நாரதனுக்குரைத்தவாக்கிய முணர்ந்து சலனமற்றபவனன்
போல் ஜீவன்முக்திவிரதத்தைவிட்டு, அத்தேவன் விதேகமுக்தி பாவமடைந்த
னர். பக்தர்களின் பீடைகளைப்போக்கடிக்கத்தக்கவராயும், ஸச்சிதானந்தரூப
னாயும் பிர்மரூபனாயும் லோகானுக்கிரகமூர்த்தியாயும், லக்ஷ்மிநாயகனுக்கு தி
கப்பியராயும், சுவயம் பிரகாசராயுமிருக்கிற அம்மகாதேவரான பிர்மானந்த
தேசிகன் துன்முகிவருடம் சித்திரைமாதம் சுக்கிலபக்ஷத்துவாதசிசுக்கிரவாரம்
உத்திர நக்ஷத்திரமும்கூடின சுபதினத்தில் பிர்ம முகூர்த்தத்தில் விதேககை
வல்லியமேகினர். இந்திரன் தேவகோடிகள் நாரதர்முதலான ரிஷிக்கூட்டங்க
ளால் ஸ்தோத்திரிக்கப்பட்ட பாதாரவிந்தங்களுடன்கூடின அக்கருணைக்கட
லானவீசன் மேற்கூறிய ஜோதிர் லிங்கத்தில் சமுத்திரத்தில் அலை லீனமாவது
போல் லீனமடைந்தனர், கர்பூரஜோதிபோல் நிர்விகற்பவஸ்துவில் ஐக்கியமா
யினர். உலையிரும்புண்டநீர்போல் அச்சூக்ஷ்மதேகம் சிவசுவரூபத்தில் அடங்
கிற்று. அம்மகாத்துமாவினுடைய ஆத்தும ஞானவிசேஷத்தையும், சிரேஷ்ட
மான அபரோக்ஷ ஞானசாமர்த்தியத்தையும் யுக்திசாரங்களுடன் நிறைந்தசுவா
னுபவவினோதத்தையும் தேவசிரேஷ்டனான ஆதிசேடனைத்தவிர யெவன்சொ
ல்ல இவ்வுலகில் வல்லவனுவன் அவ்வாதிசேடனும் பிர்மானந்த மகாமௌ
னிவைபவத்தை முன்ஞானநோக்காலுணர்ந்ததினாலன்றோ இரண்டாயிரம்நா
வையுடைய நம்மால்சொல்ல முடியாதென்று கருதியன்னிமித்தமே பாதாள
லோகமப்பவேயடைந்தனன். அவ்வபாரகருணாமூர்த்தியின் வைபவத்தையிப்பு
வியில் யாதுவுரைக்கத்தகமையுளனோ அப்படியாயினும் பிர்மானந்தாவிர்ப்பாவ
முதலைக்கிய மீருயுள்ள திவ்வியயிர்சரித்திரத்தை யக்குருநாதன் கிருபாவச
த்தால்அற்பபுத்தியுடன்கூடியயான் ஒருவாறுறைய லுற்றேன். சர்வசங்கடங்களை
யும் போக்கடிக்கக் கூடியதாயுமிருக்கிற அத்திவ்விய சரித்திரம் ஸ்ரீராமலிங்
கவிஜயமென்றும், நாமகரணம் பூண்டு இப்பாரில் குருநாதன் தயாநோக்கால்
ஸர்வோத்கருஷ்மான கீர்த்தியை யடைபட்டும். அசுவத்தயதீந்திர தேசிககு
ருகிருபாவசத்தால் பிர்மஞானிகள் திருப்தியையடையும் பொருட்டும், சகல
மான அதிகாரிகள் துதிக்கும் பொருட்டும்சம்சாரசாகரத்தில் மூழ்கினவரை

கரையேற்றிவைக்கும் பொருட்டும், நம்குருப்பிரீதியின் பொருட்டும், இத்திவ்விய ராமலிங்கவிஜய சரித்திரமானது அவர்முக்கிய சீடனாயென்னால் நன்றாயுரைக்கப்பட்டது. அச்சரிதைக் கொப்புயர்வு இவ்வுலகிலில்லை அதிற் சற்றேனுமையமுறற்க. குருபத்தியுடன் கூடினவர்களாயும் வேதவேதாங்களின்கறை கண்டவர்களாயும், சிரவணாதிதர்மங்கள் பூர்ணமாயடைந்தவர்களாயும், பிர்மஞான முணர்ந்தவர்களாயும், கோபமாகிற வியாதியற்றவர்களாயும், நமக்கு சமானமாயிருக்கக் கூடாதென்ற மாத்ஸரியகுணங்களற்றவர்களாயும், தன்பிர்ம பிரயோஜனமே மேலென்று கருதினவர்களாயு மிருக்கிறமகாங்களான வர்கள் இந்த திவ்விய விஜயத்தை பார்வையிட்டுச்சந்தோஷிக்கக்கடவர்கள். இச்சரிதையையன்புடன் படித்தவர்களும் கேட்டவர்களும் மோக்ஷமடைவதற் கையமில்லை. குருமுதலியயனைவருக்கும் மங்களம் செய்து சாஸ்திரத்தை முடித்தனம்.

ஸ்ரீராமலிங்கவிஜயம் முற்றிற்று.

ஶ்ரீப்³ரஹ்மாநந்த³பஞ்சரத்நம் ॥

[illegible] ॥ க ॥ [illegible] ॥ உ ॥ [illegible] ॥ ந ॥ [illegible] ॥ ச ॥ [illegible] ॥

பஞ்சரத்நம் ஸம்பூர்ணம்.

இந்நூலாசிரியராகிய வித்தியாரண்ணியமுனீசுவரர்கள், வேதார்த்தங்களையும், உபநிஷதர்த்தங்களையும், வெளியிடவிரும்பி, தாபனீய உபநிஷத்தில் தெரிவித்திருக்கிற சச்சிதானந்தபதங்களின், தாற்பரியத்தை அனைவரும் எளிதில் அறிந்து, சம்சாரசமுத்திரத்திலிருந்து கரையேறி, நித்தியதிருப்தர்களாய் வாழக்கடவர்களென்று, அறிந்த அம்மகாத்துமா (சத்) என்ற சப்தார்த்தத்திற்கு, விவேகபஞ்சகத்தையும், (சித்து) என்ற பதத்தினர்த்தத்திற்கு, தீபிகாபஞ்சகத்தையும், (ஆனந்தம்) என்ற பதத்தினர்த்தத்திற்கு, ஆனந்தபஞ்சகத்தையும், ஒன்றுசேர்த்து (பஞ்சதசி) என்கிற (15)ந்து பிரகரணத்தில், (1) வது பிரகரணமான பிரத்தியக் தத்துவவிவேகத்தை உரைக்கின்றார்.

இந்தப் பிரகரணமானது, வேதாந்தப் பிரகரணமானபடியினால், முதல் முதல் அநுபந்தசதுஷ்டயமென்கிற, நான்குலட்சணம் தெரிவித்ததின்பிறகே சாஸ்திரம் ஆரம்பிக்கவேண்டியதென்று பெரியோர்களின் சம்மதப்பிரகாரம், அந்நான்கையும் இந்நூலாசிரியர் (1-2) சுலோகங்களினால் வெளியிட்டனர். எவ்விதம் வெளியிட்டனரெனில், முதல் சுலோகம் பூர்வார்த்த உத்தரார்த்தத்தால் குருவணக்கம் தெரிவித்ததின்மேல் முறையிட்ட அநுபந்தசதுஷ்டயத்தில், துக்கநிவர்த்தி, ஆனந்தாவாப்திரூபமான பிரயோசனமென்ற (1) வது லட்சணமும், கூடஸ்தபிரமைக்கியரூபமான விஷயமென்கிற (2) வது லட்சணமும், (2) வது சுலோகம் பூர்வார்த்தத்தில் குருவுக்கும், சிஷியனுக்கும், சாஸ்திரத்திற்கும், பிரமத்திற்கும், ஐக்கியரூபமான (3) வது லட்சணமும், நித்தியாநித்தியவிவேகம், இகாமுத்திரார்த்தபலபோகவிராகம், சமாதிஷட்கம், முமுட்சுத்துவமென்கிற, அதிகாரரூபமான (4) வது லட்சணமும் சொன்னதாய்க் கருதி, தன் குருவான சங்கரானந்தசுவாமிகளின் பாதகமலங்கள், ஜீவேசுவர ஜகத் காரியங்களோடே கூடிக்கொண்டிருக்கிற மகா மோகரூபமான மூலாஞானமாகிற முதலையை விழுங்குகிறதில் முக்கியமான வியாபாரத்தையுடையதாயும், சகலசம்பத்துக்கள் நிறைந்த ஸ்ரீ சங்கரானந்தகுரு பாதகமலங்களின் பொருட்டு வந்தனம்கூறி, அக்கமலங்களைப் பூஜித்து, நிர்மலமான மனதையுடையவர்களுக்கு, இப் பிரத்தியக் தத்துவவிவேகமென்கிற முதலாவது பிரகரணம் கூறுகின்றனர். (35)ந்து தத்துவத்தோடே கூடியிருக்கின்ற ஜாக்கிராவஸ்தையில் சப்தாதிவிஷயங்கள் நானாவாயும், அவைகளையறிந்த அறிவு ஒன்றாயும், அவ்விதமே (24) தத்துவத்துடன் கலந்த சொப்பனாவஸ்தைகள் பலவாயும், அதை யறிந்த அறிவு ஒன்றாயும், ஜாக்கிர சொப்பனங்கள் ஸ்திரா ஸ்திர பேதங்களுடன் கலந்தனவன்றி, வேறு விசேஷமொன்றில்லையென்று விரித்துக் காட்டினர். அவ்வொழுங்காய் (4) தத்துவங்களுடன் கூடின சுஷுப்தியவஸ்தையில், அஞ்ஞானவிஷயத்தையும் அறிந்த அறிவு ஏகமாயும், அஞ்ஞானவிஷயத்தால், தானான அறிவு, அறியப்படாததாயும், சுஷுப்திகாலத்திலிருந்த அறிவினனுபவம், அச்சுஷுப்திவிட் டெழுந்தோ

னுக்கு, இதுகாலம்வரையில் ஒன்றும் தெரியாமற் சுகமாய்த் தூங்கினேனென்கிற அஞ்ஞானனுபவமும், அறிவின் ஏகத்தன்மையும், தினம் ஓரேபடித்தாய் எல்லாஜீவர்களுக்கும் அபேதமாய் அறியப்படுகிறபடியால், மூன்றவஸ்தைகளிலும் காண்கின்ற அறிவு ஒன்றென்று தீர்மானம் செய்யப்பட்டது. அம்முறையே மறு தினத்திலும், மறு பக்ஷங்களிலும், மறு மாசங்களிலும், மறு வருஷங்களிலும், மறுயுகங்களிலும், மறுகற்பங்களிலும் அறிவு ஒன்றென்று யுக்தியினுல் சத்வஸ்துவின் சொரூபம் சாதித்தனர். அவ்வாறு எந்த அறிவானது உதயமும், நாசமுமற்ற சுவப்பிரகாசவடிவமோ, அதுவே சித்வஸ்துவின் சுவரூபம். லோகத்தில் மனைவிமுதலான சகலமானவஸ்துக்களில் வைக்கும் பிரியம் யாதோ, அதுவே ஆனந்தவஸ்துவின்சொரூபம். ஒருபிராணிக்காவது நாமெப்போதும் மறிக்கக்கூடாது, சிரஞ்சீவியாயிருக்கவேண்டுமென்கிற அதிகப் பிரியமானது தானுன அறிவினிடத்தில், எக்காலும் பார்க்கப்பட்டு தன் சுகத்திற் கனுகுணமாயிருக்கிற பதார்த்தத்தில் பிரியமும், அதற்கு விருத்தம் செய்கிற ஜீவர்களிடத்தில் கோபமு முண்டாய், சர்வானுபவசித்தமான அதிகப் பிரியமானது இந்த அறிவினிடத்தில் பார்க்கப்படுகின்றது. அவ்வித வேதுவால், தானே, ஆனந்தசொரூபனென்று அறைந்தனர். இவ்விதமுரைத்த ஆசானை வணங்கி, என் அண்ணலே, தாம், சச்சிதானந்தபதங்களுக்கு ஒன்ருயிருக்கும் தன்மையை தன்னுவினுல் யுக்தியாலுரைத்ததன்றி, வேறு சுருதி பிரமாணம் யான் கண்டிலேன். அஃது யானறியும்வண்ணம் அன்புடனருள்வாயாகவென, ஆனந்தபாஷ்பமலரினலருச்சித்த அன்பனைநோக்கி யையனருளின்றனர். எமதன்புடை மைந்தா கேளாய், நீகேட்டவினுவுக்கு சகல உபநிடதமும், வேதங்களும் கூறினதையாணிங்கருளிச்செய்கின்றனம், சாந்தோக்கிய உபநிஷத்திலும், கைவல்லியோபநிஷத்திலும், இன்னும் மற்றுமுள்ள சுருதிகளிலும் தத்துவம் பதார்த்தரான கூடஸ்தரோ லக்ஷியார்த்தரொன்றும், சச்சிதானந்தரூபரொன்றும், அவரே நித்தியரொன்றும் கூறுகின்ற சுருதியினர்த்தத்தை மனதில் நிச்சயித்தும் மேல் அனேகவிடங்களில் சுருதியின் தாற்பரியத்தையே நன்ருய் வெளியிடப்போகிறபடியால், இங்கு சுருக்கிக் கூறினம். நீர்சொன்னபடியிருக்கட்டும், ஆத்துமா பரமானந்தரூபரொன்று கூறினதில் நான் ஆக்ஷேபணைசெய்கிறேன், அதாவது, தங்களால் சொல்லப்பட்ட ஆத்துமா விளங்குகிருரா, அல்லது, விளங்கவில்லையாவென்று ஆக்ஷேபணைசெய்து விளங்கும்பட்சத்தில், அழிந்துபோகிறதாயும், அற்பமாயு மிருக்கிற விஷய சுகத்திலாசைவரமாட்டாதே, விளங்காததாயிருக்கும்பட்சத்தில் பரமானந்த சொரூபம்கெட்டுப்போய்விடுமே, இதற்கென்னசமாதானம்கூறுகின்றீரெனக் கேட்ட அன்பனுக் கனுக்கிரகம் செய்கின்றனர். ஏ அன்பா, இவ்வாத்தும சொரூபம் விளங்கியும் விளங்காமையுமா யிருக்கின்றது. அக்காரணத்தால் பரமானந்தரூபம் விளங்கவில்லை. அது எதுபோலவெனில், தன்பிள்ளையும்,

அத்தியயனம் செய்கிற அனேகம் பிள்ளைகளுடைய கூட்டத்திலிருந்து வேதாத்தியயனம் செய்கிற குரல் விளங்கியும் விளங்காமையா யிருப்பதுபோல இவ்வறிவும் விளங்கியும், விளங்காமையாயு மிருக்கின்றது. அவ்வேதுபற்றி யாம் பரமானந்தசொரூபமெனக் கூறினம். அதை விரித்துரைக்கின்றனர், திருஷ்டாந்தத்தில் மைந்தன் குரலறியாமைக்கு அம்மாணுக்கர்கள் பிரதிபந்தமாயிருப்பதுபோ லிவ்விடத்தில் வஸ்துவில்லை, வஸ்துவிளங்கவில்லையென்கிற ரூபமாயிருக்கிற ஆவரணசக்தியே பிரதிபந்தகமாயிருந்து வஸ்துவில்லை வஸ்து விளங்கவில்லையென்ற அனுபவரூபமாய் மறைப்பதே மேலான பிரதிபந்தகமென்று இங்ஙனம் முறையிட்டனம். அவ்வாவரணசக்திக்குக் காரணமான மூலப்பிரகிருதியைத் தெரிவிக்கின்றனர். இவ்விடத்தில், அனாதியா யிருக்கிற மகாமாயையே மூலப் பிரகிருதியென்றும், அது பிரம பிரதிபலனத்துடன் கூடியிருக்கிறதென்றும், சத்துவ ரஜஸ்தமோகுணங்களுடன்சேர்ந்திருக்கின்றனவென்றும், சுத்தசத்துவகுணமான மாயையிற் பிரதிபிம்பித்த ஈசுவரன் அம்மாயையைச் சுவாதீனம்செய்து சர்வஞ்ஞனும், சர்வேசுவரனும், சர்வசக்திமானும், அதைத்தானே சமஷ்டிகாரணசரீரமாய் அபிமானித்து விளங்குகின்றனர். அவ்விரஜோகுணமான மலினசத்துவ அவித்தையில் பிரதிபலித்து, அவ்வவித்தை வெகுவிதமாயிருப்பதால் அதிற்பிரதிபலித்த ஜீவர்கள் அனேகர்களாகவிருந்து அவ்வவித்தியாசுவாதீனர்களாய் வியஷ்டியான அக்காரணசரீரத்திலேயே அபிமானியாய், பிராஞ்ஞன் என்ற நாமம்பூண்டு விளங்குகின்றனர். மீதியான அத்தமோகுணத்தை பிராஞ்ஞர்களின் போகானுபவத்திற்காக அவ்வீசன், ஆகாசம், வாயு, அக்கினி, ஜலம், பூமி, இப்பஞ்சபூதங்களைச் சிருஷ்டித்தனர். அக்காரணகுணம் ஐம்பூதங்களிலும் கலந்திருத்தல்பற்றி, சத்துவகுணவியஷ்டியில் சுரோத்திராதி ஞானகருவிகளைந்தும், சத்துவகுணசமஷ்டியில் மனம் புத்தி யிரண்டும், ரஜோகுணவியஷ்டியில் வாக்காதி தொழிற்கருவிகளைந்தும், ரஜோகுணசமஷ்டியில் பிராணாதிபஞ்சவாயுக்களுமுண்டாய் இப்பதினேழும் சேர்ந்து சூக்ஷுமசரீரமென்றும், அவ்வியஷ்டி சூக்ஷுமசரீரத்தில் அப்பிராஞ்ஞனை ஜீவன் தைஜசனென்றும் பேசைவகித்தும், அவ்வீசன் அச்சமஷ்டி சூக்ஷுமசரீரத்தில் இரணியகருப்பனென்றும் நாமம்பூண்டு விளங்குகின்றனர். அச்சீவர்களின் போகபலானுபவத்திற்கேதுவாய் அவ்வீசன் அவ்வைம்பூதங்களையும் மீதியான தமோகுணத்தால் பஞ்சீகரணம் செய்தனர். பஞ்சீகரணமாவன, அவ்வாகாசாதி யைம்பூதங்களை ஒவ்வொன்றையும் இரண்டாகச் செய்து அவ்வொவ்வொன்றை நான்காக்கி, அந்நான்கை அவ்விதரபூதங்களுடன் சேர்த்து ஒருமித்து (இத்தூலசரீரத்தை யிவ்விதம்) பஞ்சீகரணம் செய்தனர், அதின்பின்னர் அச்சமஷ்டி ஸ்தூலவுடலில் அவ்விரணியகர்ப்பர், அபிமானிக்குங்காலையில் விராட்டென்ற நாமம்பூண்டனர். இவ்வியஷ்டி ஸ்தூலவுடலில் அத் தைஜசன் அபிமானிக்

குஞ்சமயத்தில் விசுவனென்றும் பேரையடைந்து விளங்குகின்றனன். அவை
களிலிருந்து அண்டமும், ஈரேழுலோகங்களும் போக்கியவஸ்துக்களும் போ
கலட்சணங்களும், ஜராயு ஜாதி நான்குவிதசரீரங்களும், அவைகளுணவும்
ஈசன் உண்டுபண்ணினுர். அச்சீவர்கள் புண்ணியமிசிரபாபகர்மத்தால் தேவ
மனிதத் திரியக்காதி சரீரங்களையடைந்து வெளிதிருஷ்டியான விஷயநோக்க
முள்ளவர்களாய், அந்தரங்கமான ஆத்துமதத்துவஞானத்தை ஒருக்காலு
மறியாதவர்களாய், உண்டதே உறுதி, கண்டதே காக்ஷியென்றுநினைத்து சதா
துக்கிகளாய் கர்மஞ்செய்து போகமருந்தி காமிகளாய் மூடர்கள் விளங்குகின்
றனர். நதியிற் சுழியில்விழுந்து அவஸ்தையுறும் புழுப்போல சுகமற்றதா
யிருக்குங்காலை முன்ஜனனத்திற்செய்த தவத்தால் தயாளுவான புருஷன்
அந்நதிக்கரையை யடைந்து, அப்புழுவையெடுத்து அத்தீர மரத்தினடியில்
வைத்து, அதுசுகிப்பதுபோல், இச்சீவர்களும் பிரவிக்கடலிலமிழ்ந்து, அனே
கசரீரங்களாகிற சுழியில்வீழ்ந்து துக்கிகளாய் வருந்துங்காலை யிச்சீவர்கள்
முற்பிறப்பிற்செய்த சற்கருமபுண்ணியவிசேஷத்தால் மகாதயாளுவாயும், வே
தசாஸ்திரங் கற்றவராயும், தத்துவசொரூபத்தை நன்றாய்க் கரைகண்டவரா
யும், பிர்மவித்தாயுமிருக்கிற ஆசாரியரால் இம்மாணுக்கர்கள் பஞ்சகோச வி
வேகத்தால் மேலான மோக்ஷசுகத்தை அடையவேண்டியதுதான் ஜன்மமெ
டுத்தபலனென்று கூறினர். இவ்விதமறைந்த அம்மொழியைக் கேட்டவன்
பின், இருதாள்வணங்கி, என்தெய்வமே, பஞ்சகோசத்தின் ஸ்வரூபத்தையும்,
அதையடைந்து அதின்வழியாய் ஜீவாத்துமா பந்தப்பட்டிருப்பதையும் அநி
னிவர்த்தியும் அனுக்கிரகிக்கவேண்டுமென்று சொன்ன மொழியைச் செவி
யுற்ற ஆசானவர் மறுபடியும் கூறுகின்றனர். பஞ்சீகரணபூதத்திலுண்டான
அன்னமயரூபமென்ன, வாக்காதீந்திரியமும், பிராணனும்சேர்ந்த பிராணமய
ரூபமென்ன, ஞானேந்திரியத்தோடேகூடின மனோமயரூபமென்ன, அவ்விந்
திரியங்களுடன்கூடின விஞ்ஞானமயரூபமென்ன, பிரிய, மோத, பிரமோதா
திவிருத்தியுடன்கூடின ஆனந்தமயரூபமென்ன, இவ்வைங்கோசங்களில் ஆத்
துமா, அத்தியாசத்தையடைந்து அந்தந்தகோசங்களின் தன்மையில் மூழ்
கித் தன்னுடைய சச்சிதானந்த ஸ்வரூபத்தை மறந்தவராய், பெருத்தே னி
ளைத்தேனென்று அன்னமயகோசாத்தியாசத்தையும், பசிதாகத்துடன் கூடி
னபிராணமயகோசாத்தியாசத்தையும், சங்கற்பா் விகற்பம் செய்தேனென்ற
மனோமயகோசாத்தியாசத்தையும், கருத்தாவான விஞ்ஞானமயகோசாத்தி
யாசத்தையும், நான் போக்தாவென்ற ஆனந்தமயாத்தியாசத்தையும் அடைந்
து அந்தந்த கோசரூபனாய் சம்சாரத்தில் மூழ்கிக் கிடக்கின்றார். இவரை அன்
வய் வியதிரேகயுக்தியான பஞ்சகோசவிவேகத்தால் பிரித்தறிந்து சம்சார ச
முத்திரத்திலிருந்து கரையேற்றி மேலான பிரமஸ்வரூபத்தை அடையும்படி
செய்யவேண்டியது. அன்வயவியதிரேகலட்சணங்கூறல், ஸ்தூலசரீரந்தோன்

றாத சொப்பனாவஸ்தையில் ஆத்துமாவாகிய தான் தோன்றுகிறதே அன்வயம் இத்தூலவுடல் தோன்றாமையே வியதிரேகம். அவ்வாறு சூக்குமசரீரம் தோன்றாத சுஷுப்தியில் தான் தோன்றுகிறதே அன்வயம். இச்சூக்குமவுடல்தோன்றாமையே வியதிரேகம். இது வியதிரேகத்தால் பிராணாதி மூன்று கோசங்களும் நேதிசெய்ததாய் ஆய்விட்டது. அவ்விதமாய் சுழுப்திதோன்றாத நிர்விகற்பசமாதியில் தான் தோன்றுகிறதே அன்வயம். தான் தோன்றினும் இக்காரணவுடல் தோன்றாமையே வியதிரேகம். ஆற்றங்கரையிலிருக்கிற நாணலின் மேல் இதழ்களைக் களைந்து, நடுக்கதிரைக் கொள்வதுபோல், இப் பஞ்சகோசங்களாகிற மேல் இதழ்களை மேற்சொன்ன அன்வய வியதிரேக யுக்தியால் அத்தியாசத்தைக் களைந்து, ஹிருதயமாயிருக்கிற நடுவில் விளங்குகின்ற சச்சிதானந்தஸ்வரூபமான தத்துவம்பதலக்ஷியார்த்த பிரம ஸ்வரூபத்தை பிரித்தறிந்தவன் பிர்மமாயாவன். இம்மொழியினாலே கூடஸ்த பிரமங்களுக்கைக்கியமானது யுக்தியால் சம்பவித்திருக்கிறது. அவ்விதமே சாந்தோக்கிய உபநிஷத்து ஆறாவதத்தியாயத்தில் சுவேதகேதுவான தன்மைந்தனுக்கு, உத்தாலகமகரிஷியானவர் உபதேசவாக்கியமென்கிற (3) வதான (தத்துவமசி) மகாவாக்கியத்தால் அனுக்கிரகம்செய்து, விட்டுவிடாதலட்சணையினால் லக்ஷியார்த்தத்தைக் காண்பித்திருக்கிற மகாவாக்கியார்த்தத்தின் தாற்பரியத்தை யிந்நூலாசான் இங்கு விரித்துரைக்கின்றனர். யாதொரு பிர்மமானது தமோகுணமான மாயையைக் கிரகித்து ஜகத்துக் குபாதானமாயும், சுத்தசத்துவமான மாயையைக் கிரகித்து, ஜகத்திற்கு நிமித்தகாரணமாயுமிருக்கிற பிரமம் (தத்) என்கிறபதத்தினால் சொல்லப்படுகின்றது. அப்பிரமமே எப்போ, காமகர்மாதிகளுடன்கூடின ரஜோகுணமான மலினசத்துவத்தை கிரகிந்தாரோ அப்போ (துவம்) என்ற பதத்தினால் சொல்லப்படுகின்றது. மூன்றுகளும் ஒன்றுக்கொன்று விரோதங்களாயிருப்பதால் அவைகளைத் தள்ளி, பூரணமாயும், சச்சிதானந்தமாயுமிருக்கிற பிரமத்தை (தத்துவமசி) மகாவாக்கியத்தினால் லக்ஷியார்த்தமாக விளக்கிவைக்கின்றார். அவனே இந்த (தேவதத்தன்) என்கிற வாக்கியத்தில் அவனிவன் என்கிற வாக்கியத்தைத் தள்ளி, விட்டுவிடாத லக்ஷணையால் தேவதத்தன் ஒருவனென்று அறிவதுபோல, இங்கும், ஜீவேசுவரர்களுக் குபாதியான, அவித்தியா மாயைகளைத் தள்ளி, அகண்டசச்சிதானந்த தத்பத லக்ஷியார்த்தமான பிரமத்திற்கும், சச்சிதானந்தத் துவம்பத கூடஸ்தருக்கும், பாகத்தியாகலக்ஷணையினால் (அசி) என்றபதம் ஐக்கியம் செய்கின்றது. நீர்சொன்ன லக்ஷியத்தன்மை, சவிகற்பவஸ்துவிற்கா, அல்லது, நிர்விகற்பவஸ்துவிற்காவென்று சீடன் ஆக்ஷேபணைசெய்து, இரண்டாவதாகேஷபரூபமான நிர்விகற்பவஸ்துவுக்கு லக்ஷியத்தன்மை யொருக்காலும் பார்க்கமுடியாது, ஓரிடத்திலும் சம்பவிக்கவுமாட்டாதென் றிவ்வித முறைத்த சிஷியனை நோக்கி, குரு அவனையே கேட்கிறார். நீசெய்த இந்த

ஆக்ஷேபணையானது, நிர்விகற்பவஸ்துவிற்கா, அல்லது, சவிகற்பவஸ்துவிற்கா, சொல், முதல்பக்ஷத்திற்கு, உன்னாலே, கூடாதென்றாக்ஷேபணை சொல்லிவிட்டாய், இரண்டாவதுபக்ஷத்திற்கென் றுரைப்பையேயானால், விவஸ்தையில்லாத அனவஸ்தாதோஷமும், அனேகாந்துமாகாரணமென்ற ஆத்துமாசிரயதோஷமும், வண்டிச்சக்கிரம்போல், எப்போதும் சுற்றிக்கொண்டிருக்கிற சக்கிரகாப்திமுதலான இன்னுமனேகதோஷங்கள்வந்துசேரும். இவ் விசேஷங்கள் இதரசாஸ்திரங்களில் விரிவாய் காணப்படுகின்றன. அவ்வேதுவைப்பற்றியும், கிரந்தம் விரிவாகுமென்றகருத்தைப்பற்றியும், இந்நூலாசான் சுருக்கியுரைத்தனர். நீசெய்தவிகற்பங்களிலும், அவைகளினபாவங்களிலும் சம்பந்தப்படாத, ஆத்துமவஸ்துவில் விகற்பத்தன்மையும், லக்ஷியத்தன்மையும், இவைமுதலான சகலசம்பந்தங்களும் சுத்தகற்பிதம், இதிற் சற்றேனுமையமுறாமல் ஆறுவிதலிங்கத்தோடும், குருமுகமாய் அதின் தாற்பரியத்தை விசாரிப்பது சிரவணமெனப்படும். தான் சிரவணம்பண்ணின அர்த்தத்தை மறவாமல் தனித்திருந்து அனுசந்தானம்செய்கிறது மனனமென்றுகூறப்படும். சிரவணத்தினாலும், மனனத்தினாலுமுண்டாயிருக்கிற திடவிருத்தியினாலே நான் அகண்டன், சின்மாத்திரன் என்றபாவனை இடைவிடாத அனுசந்தானமே நிதித்தியாசனமெனப்படும். தியானம்பண்ணின, சுத்தஜீவனும், சுத்தவிருத்தியும், தியேயமாத்திரமாயிருக்கிற பிரமவஸ்துமாத்திரமே மீதமாகி, காற்றற்றவிடத்திலிருக்கிற தீபம்போல் அச்சுத்தவிருத்தி அப்பிரமவஸ்துவில், இதரதுவைதசலனமின்றி சமமாயிருப்பதே சமாதியெனக் கூறினர். அந்நிர்விகற்பசமாதியில் ஆத்துமாவையே யனுசரித்த அச்சுத்தவிருத்தி யிருக்கிறதென்று அச்சமயம் தெரியாவிடினும், அந்நிர்விகற்பசமாதியிலிருந்து எழுந்தோனுக்கு நானிதுகாலபரியந்தம் சுகமாய்ப் பிரமானுபவம் செய்தேனென்ற ஸ்மரணம் வருவதால், அச்சமயத்தில் அச்சுத்தவிருத்தி இருந்ததென அறிந்துகொள்ளக்கடவது. அச்சமாதியில் அச்சுத்தவிருத்தி இருப்பானேனெனில், இவன் நிர்விகற்பசமாதிக்குப் போகுமுன் செய்த பிரயத்தினத்தாலும், பார்க்கப்படாத புண்ணியவிசேஷத்தாலும் முன் அடிக்கடிசெய்த பிரமாப்பியாசவிசேஷபழக்கத்தாலும், அச்சத்துவவிருத்தி யிருந்ததென அங்கீகரிக்கத்தக்கது. காற்றற்றவிடத்திலிருக்கிற தீபம்போல் நிர்விகற்பசமாதியில் விருத்தியிருந்ததென, சர்வலோகசரணியரான கிருஷ்ணபகவான் கீதையில் அருச்சுனனுக்கு இவ்விதமே உரைத்திருக்கின்றனர். இச்சமாதியே தர்மமேகமென்றுமேலோர் வெளியிட்டனர். இவ்விதம் குருமுகமாய் தெரிந்துகொண்ட பரோக்ஷ ஞானாக்கினியானது மனதறிந்த பாபத்தையும் தகிக்கிறது. சம்சாரகாரணமான அஞ்ஞானமாகிற இருட்டுக்கு மத்தியான்ன சூரியன்போ லெரிப்பது அபரோக்ஷஞானமென்று கூறி முடித்தனர்.

முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑍀𑌗𑌣𑍇𑌶𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌾𑌮𑌲𑌿𑌂𑌗𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌗𑍁𑌰𑌵𑍇 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑍁𑌨𑌿𑌕𑍃𑌤 𑌪𑌞𑍍𑌚𑌦𑌶𑍀𑌪𑌦𑌯𑍋𑌜𑌿𑌨𑍀
𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑌭𑌾𑌷𑌾𑌯𑌦𑍀𑌪𑌿𑌕𑌾 𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑍇.

𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑍇𑌕𑌃.

नत्वा श्री भारतीतीर्थ विद्यारण्य मुनीश्वरौ ।
प्रत्यक्तत्वविवेकस्य क्रियते पददीपिका ॥

𑌨𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌰𑌤𑍀𑌤𑍀𑌰𑍍𑌥 𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯 𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍌 ।
𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌕𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌯 𑌕𑍍𑌰𑌿𑌯𑌤𑍇 𑌪𑌦𑌦𑍀𑌪𑌿𑌕𑌾 ॥

ஸ்ரீபாரதீதீர்த்த வித்தியாரண்ணிய முனீசுவரர்களை வந்தனம்பண்ணி பிரத்தியக் தத்துவவிவேகத்திற்கு பததீபிகை செய்யப்படுகிறது.

அவதாரிகை. ஆரம்பிவிக்கப்படுகிற கிரந்தமானது விக்கினமன்றி முடியும் பொருட்டும், விருத்தியடையும்பொருட்டும், பெரியவாளுடைய ஆசரணையினால் அடையப்பட்டதாயிருக்கிற இஷ்டதேவதாரூபமான தன்குருவின் நமஸ்காரலக்ஷண மங்களாசரணமானது தன்னால் செய்யப்பட்டதை சிஷ்ய சிக்ஷார்த்தமாக சுலோகமாகவே செய்கிறார். அதின் அர்த்தத்தினால் விஷயப் பிரயோஜனங்களையும் குறிப்பிக்கிறார்.

𑌗𑍍𑌰𑌨𑍍𑌥𑌾𑌰𑌮𑍍𑌭𑌶𑍍𑌲𑍋𑌕𑌃.

नमः श्रीशङ्करानन्दगुरुपादांबुजन्मने ।
सविलासमहामोहग्राहग्रासैककर्मणे ॥

𑌨𑌮𑌃𑌶𑍍𑌰𑍀𑌶𑌂𑌕𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌨𑍍𑌮𑌨𑍇 ।
𑌸𑌵𑌿𑌲𑌾𑌸𑌮𑌹𑌾𑌮𑍋𑌹𑌗𑍍𑌰𑌾𑌹𑌗𑍍𑌰𑌾𑌸𑍈𑌕𑌕𑌰𑍍𑌮𑌣𑍇 ॥ 𑍧 ॥

𑌸𑌵𑌿𑌲𑌾𑌸𑌮𑌹𑌾𑌮𑍋𑌹 𑌗𑍍𑌰𑌾𑌹𑌗𑍍𑌰𑌾𑌸𑍈𑌕𑌕𑌰𑍍𑌮𑌣𑍇	காரியசமுகத்தோடே கூடியிருக்கிற மூலாஞ்ஞானமான முதலையை விழுங்குகிறதே முக்கியவேலையாயிருக்கிற
𑌶𑍍𑌰𑍀𑌶𑌂𑌕𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌗𑍁𑌰𑍁𑌪𑌾𑌦𑌾𑌂𑌬𑍁𑌜𑌨𑍍𑌮𑌨𑍇	சர்வசம்பத்தினாலே சிஷ்யாளுக்கும் உலகத்திற்கும் ஆனந்தத்தை கொடுக்கிறசங்கரானந்த குருவின் பாதகமலத்தின்பொருட்டு
𑌨𑌮𑌃 (𑌅𑌸𑍍𑌤𑍁)	நமஸ்காரம் செய்யக்கடவது.

பதசாரம். சுகத்தைச் செய்கிறவர் சங்கரர் சகல ஜகத்திற்கும் ஆனந்தத்தைச் செய்கிறவரான பரமாத்மா, இவரே ஆனந்தத்தை பண்ணிவிக்கிறுரென்கிற சுருதியாலறிக. ஆனந்தரென்கிற சொல்லுக்கு பிரதிசயமான பிரீதிக்கு இருப்பிடரென்று அர்த்தமானதால் பரமானந்தரூபரான பிரத்யகாத்மா, சங்கரானந்தரென்பதற்கு பிரத்யகபின்னபரமாத்மா, அவரேகுரு, இதற்குதாரணம். யாதொருபுருடனுக்கு பரிபக்குவமாய் சித்தம் நிர்மலமாயிருக்கிறதோ அவனுக்கு பந்தரூபமான பாபத்தை நிவர்த்திக்கிறதற்கு ஹேதுவாயிருக்கிற குருநாதனுடையகடாக்ஷவீக்ஷண்யரூபமான தீக்ஷையால் சக்திபாதம்வந்து, மாயை நஷ்டமானவுடன் பாதத்வத்தில் இவர்களை யெவர் சேர்த்துவைக்கிருரோ அவரே குருவென்று ஆகமத்தில் சொல்லியிருப்பதாலும், ஸ்ரீமானென்பதற்கு அணிமாதி அஷ்டைசுவரியத்வமும் குருவுக்கு இருக்கிறதாக குறிப்பிவிக்கப்பட்டது. இன்னும், ஸ்ரீயினுலே ஆனந்தத்தைச்செய்விக்கிறுரென்றும், அந்தரங்க இஷ்டராயிருக்கிற குருவே வள்ளலென்றும், மேலானமோக்ஷரூபியென்றும் சொல்லாநின்ற சுருதிவாக்கியத்தால் சிஷியர்களுடைய இஷ்டத்தை நிறைவேற்றுவதில் குருவுக்கு வல்லமையிருக்கிறதென்பதும் குறிப்பிவிக்கப்பட்டது. அக்குருவின்பாதங்களே கமலம், அதின்பொருட்டு வணக்கம், அப்பாதம் எவ்விதமாயிருக்கிறதென்றுல், நாமரூபாத்மகமான காரிய சமுகத்தோடே கூடிக்கொண்டிருக்கிற மஹாமோஹமென்கிற மூலாஞ்ஞானமாகிற முதலையானது தன்கையிலகப்பட்டவர்களை மிகவும் பிடிப்பதால், இது மகாகெட்டதென்று நினைத்து அதை விழுங்குகிறதே முக்கியவேலையாயிருக்கிறது. (இதின்விசேஷம்) இதில் சங்கரானந்தரென்கிற இரண்டுபதங்களின் சமானுதிகரணத்தால் கூடஸ்தபிரமத்திற்கு ஏகத்துவமே விஷயம். கூடஸ்தருக்குப் பூரணபிரமரூபமான அபரிச்சின்னசுகோதயமே பிரயோஜனம். மாயையை விழுங்குகிறதென்பதால், அத்தியந்ததுக்கநிவர்த்திரூபமான பிரயோஜனம் வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

இதற்குயுக்தி. இருளுக்குச் சூரியனும், கள்ளனுக்குக் காவலனும், வியாதிக்கிச் சித்தனும், தரித்திரத்திற்குச் சிந்தாமணியும், பேய்க்கு மந்திரவாதியும் போல குருவின்பாதம் அஞ்ஞானத்தைப் போக்குமென்றறி.

அ-கை. இப்போ அவாந்திர பிரயோஜனத்தோடே கிரந்தாரம்பம் செய்கிறுர்.

तत्पादांबुरुहद्वन्द्वसेवानिर्मलचेतसाम् ।
सुखबोधायतत्वस्याविवेकोयं विधीयते ॥

தத்பாதாம்புருஹத்வந்த்வஸேவாநிர்மலசேதஸாம் |
ஸுகபோதாயதத்வஸ்ய விவேகோயம் விதீயதே || ௨ ||

தந்தாதாவ்யாஸ ஸஜ்ஜ மலைவா நிஜ்ஜ ஒமெவ தவலா — அந்தகுருவின் பாதங்களாகிற உபயகமலங்களுடைய நமஸ்காரஸ்துதி முதலான பணிவிடையினாலேயே இராகத்வேஷாதி மலரகிதமனதோடேகூடியிருக்கிறபேர்களுக்கு

ஸுவவெபாயாய=அனுயாசமாக தத்துவஞ்ஞான முண்டாகிறதின்பொருட்டு தகவஸ்ய=சொல்லப்போகிற அனுரோபிதமாயிருக்கிற, தத்துவத்தினுடைய கயம=இந்த, விவெகஃ=விவேகமானது, வியியதெ=விதிக்கப்படுகிறது.

ப-ம். தத்துவவிவேகமென்பதற்கு அர்த்தம். ஆரோபமான பஞ்சகோசாதிஜெகத்தில்நின்றும், ஆத்மாவுக்கு பிரித்தல் சொல்லப்படுகிறது.

இ-தி. வெள்ளாவியில்வைக்கப்பட்ட வஸ்திரத்திற்கு குசும்பாச்சாயமேற்றுவதுபோலும், உரம்வைத்த நிலம் நன்றாய் விளைவதுபோலும், சுத்தகண்ணாடியில் முகம் நன்றாய் விளங்குவதுபோலும், வாழைமரத்திலிருக்கிற மேல்மட்டையைப் பிரித்துத் தண்டையெடுப்பதுபோலுமென்றறியத்தக்கது.

அ-கை. ஜீவப்பிரம்மைக்கியமாகிறவிஷயம் சம்பவிக்கிறதின்பொருட்டு ஜீவனுக்கு தன்னுடைய சச்சிதானந்தம் முதலான லக்ஷணத்தை காண்பிவிக்கிறதில் வாஞ்சையுடையவராயுமிருக்கிற இவர் ஆதியில் அவஸ்தாத்திரயத்திலும் அறிவினபேதச்சொல்லால், நித்தியத்துவத்தைச் சாதிக்கிறார். அதில் ஜாக்கிரத்தில் அறிவு ஒன்றாயிருப்பதைக்காண்பிவிக்கிறார்.

शब्दस्पर्शादयोवेद्या वैचित्र्याज्जागरेपृथक् ।
ततोविभक्तातत्संविदैकरूप्यान्नभिद्यते ॥

ஶப்தஸ்பர்ஶாதயோவெத்யா வைசித்ர்யாஜ்ஜாகரெப்ருதக் ।
ததொவிபக்தாதத்ஸம்விதைகரூப்யான்னபித்யதெ ॥ ௩ ॥

ஜாகரெ (சகலேந்திரியங்களினாலேயும் சகலவிஷயஞானமுடைய) ஜாக்கிரத்தில்
வெத்யாஃ அறியயோக்கியங்களாயிருக்கிற
ஶப்தஸ்பர்ஶாதயஃ சப்தஸ்பரிசரூபரசகந்தங்கள்
வைசித்ர்யாத் = (பசு, குதிரைமுதலானவைபோல) விசித்திரமாயிருப்பதால்
ப்ருதக் வேறுவேறாயிருக்கின்றன ததஃ அவைகளினின்று
விபக்தா வேறாயும் தத்ஸம்வித்=அவைகளறியுமறிவானது
ஐகரூப்யாத்=ஒன்றாயிருப்பதால் நபித்யதெ பேதமடையவில்லை.

ப-ம். சப்தஸ்பரிசாதிகளென்றதால் அந்தகுணங்களுக் காதாரமான ஆகாசாதிபூதங்களும் வேறுவேறென்று சொன்னதாயிற்று. இதில் ஒரு அனுமானம் காண்பிவிக்கிறார். விவாதத்திலிருக்கிற அறிவானது ஸ்வபாவபேதசூன்

ன்னியமாய் இருந்தற்கு போக்கியமாய் இருக்கத்தக்கது, அதுவே பிரதிக்ஞை. உபாதி அன்றியில் பேதம் சம்பவியாமையே ஹேது, ஆகாசம்போலென்பது திருஷ்டாந்தம். சப்தத்தை அறிகிற அறிவானது ஸ்பரிசத்தை அறிகிற அறிவைக்காட்டிலும் அறிவு அன்னியமற்றிருப்பதால் வேறன்று. ஸ்பரிசத்தை அறிகிற அறிவுபோலே ஒன்றாயிருக்கிற அறிவுக்கு ஆகாசத்தைப்போல உபாதிபேதத்தினலேயே பேதவிவகாரம் கூடுமாகையால் வாஸ்தவமாக பேதம் கற்பிக்கும்பக்ஷத்தில் பெரிதானவிரோதம் ஊஹிக்கத்தக்கதாய்வரும்.

இ-தி. இராஜன் ஒருவனாயும் படைகள் அநேகமாயும் யுத்தத்தில் காணப்படுவதுபோலும், பஞ்சவர்ணங்களோடேகூடின கண்ணாடிவீட்டுக்குள்ளிருக்கிற புருஷனொருவனாயும், பிரதிபலிக்கிற்தோற்றங்களநேகமாயும் தோற்றுவது போலும், சுவர் ஒன்றாயும் சித்திரம் பலவாயும், கண் ஒன்றாயும் ரூபம் பலவாயும் தோற்றுவதுபோலுமென்றறி.

அ-கை. இப்போதுசொன்னநியாயத்தை ஸ்வப்பனத்திலுமறிவிக்கிறார்.

तथास्वप्नेत्रवेद्यन्तु नस्थिरं जागरेस्थिरम् ।
तद्भेदोतस्तयोस्संविदेकरूपानभिद्यते ॥

𑌤𑌥𑌾𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇𑌽𑌤𑍍𑌰𑌵𑍇𑌦𑍍𑌯𑌨𑍍𑌤𑍁 𑌨𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 𑌜𑌾𑌗𑌰𑍇𑌸𑍍𑌥𑌿𑌰𑌂 ।
𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑍋𑌽𑌤𑌸𑍍𑌤𑌯𑍋𑌸𑍍𑌸𑌂𑌵𑌿𑌦𑍇𑌕𑌰𑍂𑌪𑌾 𑌨𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ॥ ௪ ॥

𑌸𑍍𑌵𑌪𑍍𑌨𑍇	ஸ்வப்னாவஸ்தையிலும்
𑌤𑌥𑌾	அப்படியே
𑌅𑌤𑍍𑌰	இந்தஸ்வப்பனத்தில்
𑌵𑍇𑌦𑍍𑌯𑌂	அறியப்படுகிறவிஷயமானது
𑌨 𑌸𑍍𑌥𑌿𑌰𑌂	ஸ்திரமன்றியிலிருக்கிறது
𑌜𑌾𑌗𑌰𑍇	ஜாக்கிரத்தில்
(𑌵𑍇𑌦𑍍𑌯𑌂)	காண்கிறவிஷயமானது
𑌸𑍍𑌥𑌿𑌰𑌂	(காலாந்திரத்திலும்) பார்க்க யோக்கியமாயிருக்கிறது
𑌤𑌦𑍍𑌭𑍇𑌦𑌃	அவைகளின்பேதமிவளவே
𑌅𑌤𑌃	ஆகையினாலே
𑌤𑌯𑍋𑌃	அந்தஜாக்கிரஸ்வப்னங்களை
𑌸𑌂𑌵𑌿𑌤𑍍	அறிகிற அறிவானது
𑌏𑌕𑌰𑍂𑌪𑌾 (𑌸𑌤𑍀)	ஏகரூபமானதால்
𑌨 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇	பேதமன்றியிலிருக்கிறது.

ப-ம். ஜாக்கிரத்தில் விசித்திரஸ்வபாவமாயிருப்பதால் விஷயங்களுக்கு பேதமும் ஒன்றாயிருப்பதால் அறிவு பேதமில்லாமையும் எப்படியிருக்கின்றனவோ அப்பிரகாரமே கரணவியாபாரமற்ற ஸ்வப்பனத்தில், ஜாக்கிரத்தில் இடைவிடாது பழகினதினாலுண்டானவிஷயமானது ஸ்வப்பனமென்று சொல்லப்படும். இப்போதுசொன்ன ஸ்வப்பனாவஸ்தையிலும் விஷயங்கள் பேதமுள்ளவையாயும், அறிவு ஒன்றாயுமிருக்கிறது.

சங்கை. ஜாக்கிரஸ்வப்பனங்கள் இரண்டிலும் அறிவு அபேதமாயும் விஷயங்கள் பேதமாயும் இருக்குமேயானால் அப்போது இது ஸ்வப்பனமென்றும், இது ஜாக்கிரமென்றும் பேதம் வரக்காரணமென்னவென்கிற சங்கைக்கு இந்

த ஸ்வப்பனத்தில் காணப்பட்ட விஷயங்களானவை தோற்றமாத்திரமாயிருப்பதால் ஸ்திரமில்லாமலிருக்கின்றன, ஜாக்கிரத்திலேயோ என்றால் காணப்படுகிற விஷயங்களானவை காலாந்திரத்திலும் பார்க்க யோக்கியமாயிருப்பதால் ஸ்திரம். ஆகையால் இவைகளுக்கு ஸ்திராஸ்திரங்களாயிருக்கிறதே பேதமென்றுத்தரம்

இ-தி. வெண்ணெய்ப்பிள்ளையாரும், வெங்கலப்பிள்ளையாரும்போலும், மணலால் கட்டுகிறவீடும், சாமான் சேர்த்துக்கட்டுகிற வீடும்போலும், குழந்தைகள் கரியால் எழுதுவதும், பெரியவர்கள்சரக்கைச்சேர்த்து சித்திரம் எழுதுவதும், வேர்ச்சாயமும், பவுடர் சாயமும்போலவறி, ஸ்வப்பன ஜாக்கிரங்களுக்கு பேதம் சாதிக்கப்பட்டதால் அவைகளிலிருக்கிற அறிவுக்கும் பேதம் சொல்லப்படாதோவெனில், அவ்விரண்டிலும் இருக்கிற அறிவானது ஒன்றாகவேயிருப்பதால் பேதமில்லை. (இ-தி.) கோட்டைக்குவெளியில் படைகளோடு சேர்ந்து யுத்தம்பண்ணின அரசனே மந்திரி முதலானவர்கள் வீட்டுக்குப்போன பிற்பாடு அந்தஅரசனே கோட்டைக்குள் வந்து தான் ஒருவனாக கத்திவீசி காலம்போக்கிறவன் ஒருவனாயிருப்பதுபோலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் ஜாக்கிர ஸ்வப்பனங்களில் அறிவுக்கு அபேதத்தைச்சாதித்து சுஷுப்திகாலத்திலிருக்கிற அறிவுக்கும் அந்த அறிவோடே ஐக்கியத்தைச்சாதிக்கும்பொருட்டு அந்த அவஸ்தையிலும் அறிவு இருக்கிறதைச்சாதிக்கிறார்.

सुप्तोत्थितस्यसौषुप्ततमोबोधोभवेत्स्मृतिः ।
साचावबुद्धविषयाऽवबुद्धंतत्तदातमः ॥

ஸுப்தோத்தி²தஸ்ய ஸௌஷுப்ததமோபோ³தோ⁴ ப⁴வேத்ஸ்ம்ருதி꞉।
ஸா சாவபு³த்³த⁴விஷயாऽவபு³த்³த⁴ம் தத்ததா³ தம꞉ ॥ ரு ॥

ஸுப்தோத்தி²தஸ்ய	சுஷுப்தியிலிருந்து எழுந்திருந்த புருஷனுக்கு [து		
ஸௌஷுப்ததமோபோ³த⁴꞉	சுஷுப்தியிலிருக்குமறியாமையை அறியுமறிவான		
ஸ்ம்ருதி꞉	ஸ்மரணரூபமாக	ப⁴வேத்	பவிக்கிறது
ஸா ச	அந்த ஸ்மரணமும்	ததா³	அந்தசுஷுப்திகாலத்தில்
அவபு³த்³த⁴விஷயா	அறியப்பட்டிருக்கிற அஞ்ஞானவிஷயமுடையது.	தத் தம꞉	அந்த அஞ்ஞானமானது
		அவபு³த்³த⁴ம்	=அறியப்பட்டதாக (ப⁴வேத்) பவிக்கிறது.

ப-ம். நித்திரையிலிருந்து எழுந்தவனுக்கு அந்த சுஷுப்தியிலே இருந்த அஞ்ஞானத்தை அறிந்த அறிவு இருந்ததற்கு ஒன்றும் அறியேனென்று வருகிறஸ்மரணம், அடையாளமே தவிர அனுபவமில்லை. அது ஏதினாலெனில், அனுபவஹேதுவாயிருக்கிற பாக்கியார்த்தங்களான இந்திரிய சன்னிதான வியா

ப்திலிங்காதிகளுடைய அபாவத்தாலென்றறிக. அதனால் அதிலென்னவாயிற்றென்றால் அந்த ஸ்மிருதியானது அந்த அஞ்ஞானவிஷயத்தை அறிந்ததாயிற்று. உலகத்தில் எதெது ஸ்மரிக்கப்படுகிறதோ, அதெல்லாம் அனுபவபூர்வமாகவே இருக்கிறது. அதினாலென்னவாயிற்றென்றால் அந்த ஹேதுவால் ஸுஷுப்தியிலிருக்கிற அஞ்ஞானம் அறியப்பட்டதாயிற்று. இதற்கு அனுமானம் காண்பிவிக்கிறார். விவாதத்திலிருக்கிற ஒன்றும் அறியேனென்கிற அறிவானது ஸ்மிருதிரூபமாயிருப்பதால் அனுபவபூர்வமாக இருக்க யோக்கியமாக இருக்கிறது. (அவள் என் தாயென்று ஸ்மரணம் வருவதுபோல,) யுக்தி யாதொருவன் தீயால் தாபமடைந்தானோ அவனே ஜலத்தில் மூழ்கி எழுந்து குளிர்ச்சியாய் ஒன்றையுமின்னேரம் அறியாமலிருந்தேனென்பதுபோலவுமறி.

அ-கை. அந்த அனுபவத்தால் தனக்கு விஷயமான அஞ்ஞானத்திற்கு தான் வேறென்பதையும் அந்த அறிவுக்கு இந்த அறிவு அபேதமென்பதையும் சொல்லுகிறார்.

सबोधोविषयाद्भिन्नो नबोधात्स्वप्नबोधवत् ॥

ஸபோதோவிஷயாத்பிந்நோ நபோதாத்ஸ்வப்நபோதவத் ॥ ௫ ॥

ஸ:	அந்த	போதாத்	அறிவைக்காட்டிலும்
போத:	அறிவானது	ந பிந்ந:	வேறன்று
விஷயாத்	அறியாமையைக்காட்டிலும்	ஸ்வப்நபோதவத்	ஸ்வப்னத்தை அறிந்த அறிவைப்போல.
பிந்ந:	வேறு		

வி-ம். அனுமானம் அஞ்ஞானத்தை அறிந்த அறிவானது அறியாயிருப்பதால் அஞ்ஞானத்திற்கு வேறாயிருக்கத்தக்கது. கடத்தை அறிந்த அறிவு கடத்திற்கு வேறாயிருப்பதுபோல. அனுமானம் ஸ்வப்னத்தை அறிந்த அறிவானது ஜாக்கிரத்தை அறிந்த அறிவைக்காட்டிலும் வேறாயிருப்பதால் அறிவு அபேதமாயிருக்கத்தக்கது. ஸ்வப்னத்தை அறிந்த அறிவுபோல.

இ-தி. சூரியனையும் தீபத்தையும் இருட்டையும் அறிந்த கண் ஒன்றாயிருப்பதுபோலென்றறி

அ-கை. இப்போது சொல்லப்பட்ட நியாயப்படிக்கி மற்றகாலங்களிலுமறிவு ஒன்றென்பதைக் காண்பிவிக்கிறார்.

एवंस्थानत्रयेप्येकासंवित्तद्वद्दिनान्तरे ।

मासाब्दयुगकल्पेषु गतागम्येष्वनेकधा ॥

ஏவம்ஸ்தாநத்ரயேப்யேகாஸம்வித்தத்வத்திநாந்தரே ।

மாஸாப்தயுககல்பேஷு கதாகம்யேஷ்வநேகதா ॥ ௬ ॥

ஏவம்	இந்தப்பிரகாரம்	மாஸாப்தயுக கல்பேஷு	மாச, வருஷ, யுக, கற்பங்களிலும்,
அவஸ்தாத்ரயே அபி	அவஸ்தாத் திரயத்திலும்	பூதபாவ்யேஷு	பூத பௌஷ்யத் காலங்களிலும்
ஸம்வித் ஏகா தத்வத்	அறிவு ஒன்றாயிருப்பதுபோல	அநேகதா	அனேகவிதமாக காலமேகழிந்துவருகிறது
தினாந்தரே	மறுநாளிலும்		

வி-ம். ஒரு தினத்தில் வருகிற ஜாக்கிரஸ்வப்பன சுஷுப்தி மூன்றிலேயும் அறிவு ஒன்றாகவேயிருந்ததுபோல, மறுதினத்திலும் அறிவு அபேதமென்பதையும் அப்படியே மாசந்தோறும் யுகந்தொறும் கற்பந்தோறும் பூதபௌஷியத்காலங்களிலும் அறிவு ஒன்றாகவே இருக்கிறது. யுக்தி. ஒருநாளில் தன்னூரிலும், வெளியே போகிறகாலத்திலும், மாமனூர் ஊரிலும், பார்த்துக்கொண்டிருக்கிற கண் என்றென்றைக்கும் ஒன்றாயிருப்பதுபோல எப்போதும் அறிவு ஒன்றென்றறி.

அ-கை. அறிவு ஒன்றென்று சாதித்ததற்கு பிரயோஜனத்தைச்சொல்லுகிறார்.

नोदेतिनास्तमेत्येका संविदेषास्वयंप्रभा ॥

நோதேதி நாஸ்தமேத்யேகா ஸம்விதேஷா ஸ்வயம்ப்ரபா ॥ எ ॥

ஏகா	ஒன்றாயிருக்கிற	ஏஷா	இந்த
ஸம்வித்	அறிவானது	ந உதேதி	உதயமாகிறதுமில்லை
ஸ்வயம்ப்ரபா (ஸதீ)	சுயம்பிரகாசமாயிருப்பதினாலே	அஸ்தம்	அஸ்தமனம்
		ந ஏதி	ஆகிறதுமில்லை

வி-ம். யாதொரு காரணத்தால் அறிவு ஒன்றே. அந்த ஹேதுவால் அறிவுக்கு உற்பத்தியுமில்லை அவருடைய உற்பத்திநாசத்திற்கு அவரைத்தவிர வேறு சாக்ஷியில்லாததினால், உற்பத்திநாசம் சித்திக்காது. தன்னுடைய உற்பத்திநாசம் தானாயிருக்கிற அறிவால் கிரஹிக்கமுடியாதாகையாலும், வேறே அறிவில்லாமையாலும், அறிவுக்கு எப்பொழுது முற்பத்திநாசமில்லை.

ஆ-கை. இந்த அறிவுக்கு வேறே அறிவில்லாவிட்டால் இதை கிரகிக்கிறவன் வேறேயில்லாமல் போகும்போது அந்த அறிவு விளங்காதே. அப்போது ஜகத்திற்கு தோற்றமை வந்துவிடுமேயெனில், இதற்குச் சமாதானமாக ஒரு அநுமானம் காண்பிக்கிறார், அறியப்படாத அபரோக்ஷமாகையால், அறிவு சுயம்பிரகாசமாயிருக்கிறது. ஜடமாயும் அப்பிரகாசமாயுமிருக்கிற கடம்போல் அறிவு விளங்கவில்லை. அபரோக்ஷமென்கிற இந்த ஹேதுவில் அறியப்படாதென்கிற விசேஷணம் சித்தியாதென்று சங்கிக்கக்கூடாது. ஏனென்றால், இந்த அறிவு தன்னாலே அறியப்படுமென்றால் கருத்ருத்துவமும் விஷயத்துவமும், ஒருவஸ்துவுக்கு கூடாதாகையாலும், வேறொன்றினால் அறியப்படுமெ

ன்றால் அனவஸ்தை வருவதாலும் அறிவுக்கு மேற்சொன்ன விசேஷணம் சித்தித்திருக்கின்றன, ஸ்வப்பிரகாசமாய் விளங்கிக்கொண்டிருக்கிற இந்த அறிவுக்கு சர்வத்தையும் விளக்கிவைத்தல் கூடுமாகையால் ஜகத்து விளங்காமல் போகுமென்று நீ சொன்ன ஆக்ஷேபனை கூடாது.

இ-தி. எல்லாவற்றையும் காண்பிவிக்கிற கண் வேறே ஒரு கண்ணையபேக்ஷியாமல் பிரத்தியக்ஷமாய்தான் விளங்குவதுபோலும், ரத்னசூரியாதிகளைப் போலுமென்றறி.

அ-கை. அறிவுக்கு நித்தியத்துவமும் ஸ்வப்பிரகாசத்துவமுமிருக்கட்டும் அதினாலென்ன ஆயிற்றென்றால் சொல்லுகிறார்.

इयमात्मापरानन्दः परप्रेमास्पदंयतः ।

இயமாத்மாபராநந்த³: பரப்ரேமாஸ்பத³ம் யத: ॥ ௭௦ ॥

இயம்	இந்த
ஆத்மா	ஆத்துமாவானது
யத:	யாதொருகாரணத்தினால்
பரப்ரேமாஸ்பத³ம்	மேலானப்பிரீதிக்கிருப்பிடமோ
தத:	அந்தக்காரணத்தினாலே
பராநந்த³:	=பரமானந்தராயிருக்கிறார்

வி-ம். அனுமானம் நித்தியமாயிருக்கிற ஸ்வப்பிரகாசமானதால், இந்த அறிவான ஆத்துமா தானாகவே இருக்கின்றது, எது தானாகவிருக்கவில்லையோ, அது நித்தியமாயும் ஸ்வப்பிரகாசமாயுமாகாது. (கடம்போல)

இ-தி. இரத்தினத்தையும், அது வைத்திருக்கப்பட்டிருக்கிற பாத்திரத்தையும்போலவறி. ஆத்துமாவுக்கு நித்தியத்துவமும், சித்ரூபத்துவமும், சாதித்தாயிற்று. நித்தியத்துவத்திற்கு வேறாக, சத்தியத்துவமில்லாமையால் நித்தியத்துவம் சத்தியத்துவம் இரண்டும் ஆத்துமாவுக்கு இருக்கின்றனவென்று வாசஸ்பதிமிச்சிரான் சொல்லியிருப்பதால், ஆத்துமாவுக்கு சத்தும், சித்தும், சித்தித்தன, அதுபோல, ஆனந்தத்தையும் சாதிக்கிறார். இந்த விஷயத்தில் ஒரு அனுமானம், இந்த ஆத்துமா மேலான பிரீதிக்கு இருப்பிடமாகையால் பரமானந்த ரூபராயிருக்க யோக்கியர். யாதொன்றானது பரமானந்தமாயிருக்கவில்லையோ, அது மேலான பிரீதிக்கு இருப்பிடமாக ஆகாது. (கடம்போல) இ-தி. மாப்பிள்ளையையும் மாப்பிள்ளைத்தோழனையும்போல.

ச-கை. என்னைச்சுடவேண்டுமென்று தன்னிடத்தில் துவேஷம் காணப்படுகையால், பிரேமாஸ்பதமே சித்திக்காதபோது, பரபிரேமாஸ்பதம் எப்படி சித்திக்கும். இ-தி. பெண் ருதுவாகாதபோது பிள்ளைபெறுவாளா, பிராமணனென்பதே சந்தேகமாயிருக்கும்போது பவுண்டரீகராவானா, கட்டிக்கத்துணியில்லாதவனை குபேரனாவானாவென்று கேட்கவேண்டியதில்லாததுபோலிருக்கிறதெனில், நீ சொன்ன அந்த அனுபவமாவது சுகரூபனான தனக்கு துக்க சம்மந்தமேற்பட்டதினால், வெறுப்புக்காணப்படுகிறதேயொழிய உண்மையி

யில்லை. பிரீதியானது எல்லவருக்கும் தன்னிடத்தில் அனுபவ சித்தமாயிருப்பதாலும், நீ சொன்னது கூடாதென்று திருஷ்டாந்தமூலமாய் பரிகரிக்கிறார். அதாவது, ஜலத்திற்கு வந்திருக்கிற உஷ்ணமானது அன்னியமான அக்கினியின் சம்பந்தத்தால் சித்திப்பதுபோலவும், குளிர்ச்சியானது வாஸ்தவமான அனுபவ சித்தமாயிருப்பதுபோலுமறி, இன்னம் படிக்கத்தில் வர்ணம் சேர்க்கையால் காணப்படுவதுபோலுமறி.

அ-கை. சமாதானம் சொல்லுகிறார்.

मानभूवंहिभूयासमितिप्रेमात्मनीक्ष्यते ॥

மாநபூவம்ஹிபூயாஸமிதிப்ரேமாத்மநீக்ஷ்யதே ॥ ௮ ॥

(அஹம்)	நான்	ஹி	யாதொருகாரணத்தினால்
மா பூவம் ந	இல்லாமல் போகவேண்டாம்	ஆத்மநி	தன்னிடத்தில்
பூயாஸம்	(சதா) இருக்கவேண்டும்	ப்ரேம	பிரீதியானது
இதி	யென்று	ஈக்ஷ்யதே	காணப்படுகிறதோ

வி-ம். யாதொரு காரணத்தால் நானில்லாமல் இருக்கிறவனன்று எனக்கு ஒருக்காலுமில்லாமைவேண்டாம் எப்போதும் இருக்கவேண்டுமென்று இவ்விதமான பிரீதிசகலருக்கும் ஆத்துமாவில் அனுபவமாகவே காணப்பட்டிருக்கின்றன. ஆகையால் பிரேமையில்லையென்று சொல்லக்கூடாது.

ச-கை. ஹேதுவில் சொன்ன பிரேமை ஆத்துமாவிலிருக்கட்டும் மேலான பிரியரென்பதில் பிரமாணம் காணப்படாமையால் அந்த விசேஷணம் கூடாதெனில்.

तत्प्रेमात्मार्थमन्यत्रनैवमन्यार्थमात्मनि ।

अतस्तत्परमंतेनपरमानन्दतात्मनः ॥

தத்ப்ரேமாத்மார்த்தமந்யத்ர நைவமந்யார்த்தமாத்மநி ।

அதஸ்தத்பரமம்தேந பரமாநந்ததாத்மந: ॥ ௯ ॥

அந்யத்ர	(அன்னியமான) புத்திராதிகளிடத்தில் காண்கிற	ந ஏவ	இல்லவேயில்லை,
தத்ப்ரேம	அந்தப் பிரீதியானது	அத:	அந்தக்காரணத்தினாலே
ஆத்மார்த்தம்	தன்னிமித்தம்,	தத்	அந்தப் பிரீதியானது
ஆத்மநி	தன்னிடத்தில் (காண்கிற)	பரமம்	மேலானது
ப்ரேம	பிரீதியானது	தேந	ஆகையால்
அந்யார்த்தம்	அவைகளினிமித்தமாக	ஆத்மந:	தனக்கு
		பரமாநந்ததா	பரமானந்தத்துவமிருக்கிறது

வி-ம். தனக்குவேறாயிருக்கிற புத்திராதிகளிடத்தில் யாதொரு பிரீதி காணப்படுகிறதோ அது தன்னிமித்தமேதவிர அவைகளினிமித்தமல்ல.

இ-தி. தேன் வைத்தபானையில் காணப்படுகிற தித்திப்பு தேனைச் சேர்ந்தது போலும், ராஜனுடைய படைகளுக்கு விருந்துசெய்வது ராஜன் நிமித்தம் போலுமறி. தன்னிடத்தில் காணப்படுகிற பிரீதி அவைகளின் நிமித்தியமல்ல, தன்னிமித்தமே. இ-தி. தேனில்காணப்பட்ட தித்திப்பு பானையைச் சேர்ந்ததல்லாததுபோலும், ராஜனுக்குசெய்கிற உபசாரம் படைகள் நிமித்தமில்லாததுபோலுமறி. ஆகையால் தானே நிருபாதிக நிரதிசயமான பரப்பிரம்மரூபனாகையால் பரமானந்தனென்றறி.

அ-கை. ஆகையால் யிந்த ஏழு சுலோகத்தால் சொன்ன அர்த்தத்தை சுருக்கிக் காண்பிவிக்கிறார்.

इत्थंसच्चित्परानन्द आत्मायुक्त्यातथाविधम् ।
परब्रह्मतयोश्चैक्यं श्रुत्यन्तेषूपदिश्यते ॥

𑌇𑌤𑍍𑌥𑌂𑌸𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦 𑌆𑌤𑍍𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌂 ।
𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌯𑍋𑌶𑍍𑌚𑍈𑌕𑍍𑌯𑌂 𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌷𑍂𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௦॥

𑌇𑌤𑍍𑌥𑌂	இப்போர்கொத்த	𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	பரப்பிரமத்தையுங்கூறி
𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾	யுக்தியினாலே	𑌤𑌯𑍋𑌃	அக்கூடஸ்தபிரமங்களுக்கு
𑌆𑌤𑍍𑌮𑌾	ஆத்துமாவானவர்	𑌐𑌕𑍍𑌯𑌂	ஐக்கியமானது
𑌸𑌚𑍍𑌚𑌿𑌤𑍍𑌪𑌰𑌾𑌨𑌨𑍍𑌦𑌃	சச்சிதானந்த ரூபனென்றுசொல்லப்பட்டார்	𑌶𑍍𑌰𑍁𑌤𑍍𑌯𑌨𑍍𑌤𑍇𑌷𑍁	வேதாந்தங்களில்
𑌤𑌥𑌾𑌵𑌿𑌧𑌂	அப்படிச்சச்சிதானந்தனென	𑌉𑌪𑌦𑌿𑌶𑍍𑌯𑌤𑍇	உபதேசிக்கப்படுகிறது.

வி-ம். (3) வது சுலோகமுதல் (6½) சுலோகம்வரையில் அறிவுக்கு நித்தியமான சத்தின் தன்மையும், (½) சுலோகத்தால் அறிவுக்கு உற்பத்திநாசமற்ற சுயம்பிரகாசமான சித்தின்தன்மையும், (8-9) வது சுலோகங்களால் ஆத்துமாவுக்கு பரமானந்தரூபமான ஆனந்தத்தன்மையும் சித்தித்தது. அவ்வேதுவால் துவம்பதலக்ஷியார்த்தரான ஆத்துமாவே சச்சிதானந்தரூபனென்று யுக்தியால் சாதித்தனர். ✓

ச-கை. இப்போ ஆத்துமாவுக்கு தங்களால் சொல்லப்பட்ட லக்ஷணமானது யுக்தியினால் சித்திக்கப்பட்டிருக்கிறதே அன்றி, உபநிஷத்து பிரமாணமில்லையேயெனில், நம்மால் யுக்தியால் ஆத்துமாவுக்கு சச்சிதானந்தலக்ஷணம் சொன்னபடியே சாங்தோக்கிய ஆறுவது அத்தியாயத்திலும், தன்புத்திரனான சுவேதகேதுவுக்கு உத்தாலகரிஷி சச்சிதானந்தரூபமே தத்பதலக்ஷியார்த்தபிரமமென்றும், அதுவே துவம்பதலக்ஷியார்த்தமான கூடஸ்தனென்றும், வாச்சியங்களான ஜீவேசுவரர்கள்முதலான விசேஷணங்களை அசி என்றபதத்தால் நீக்கி, தத்பத லக்ஷியார்த்தமே துவம்பத லக்ஷியார்த்தமான அகண்டைகரசபிரமகூடஸ்தரான நீயே தத்துவமசி யென்று சொன்னதுபோல, அனேக வேதாந்தசுருதிகளில்கோஷிக்கப்பட்டிருக்கும்போது பிரமாணமில்லையென்று

சொல்லக்கூடாது. இ-தி. சக்கிரவர்த்தியே சிமையைக் கட்டி ஆளுகிறவ னென்று சட்டத்தில் சொன்ன இலக்கணம் இவனிடத்தி லிருப்பதும் இவன் அவன் என்றசொல் ஒருவனைக் காண்பிவிப்பதுபோலவறி.

அ-கை. ஆத்துமாவின்பரமானந்தரூபத்தை ஆட்சேபிக்கிறான்.

अभाने नपरं प्रेम भानेन विषये स्पृहा ।

அபா₄நே நபரம்ப்ரேம பா₄நேநவிஷயேஸ்ப்ருஹா ॥ ௧௦ ॥

அபா₄நே (ஸதி)	ஆத்துமா விளங்காதபக்ஷத்தில்	பா₄நே (ஸதி)	விளங்கும்பக்ஷத்தில்
பரம்	மேலான	விஷயே	விஷயத்தில்
ப்ரேம ந	பிரியராகார்	ஸ்ப்ருஹா ந	ஆசையுண்டாகக்கூடாது

வி-ம். ஆத்துமாவின்பரமானந்தமானது, விளங்கவில்லையா, விளங்குகிறதா, விளங்காதபட்சத்தில் பரமமானபிரீதிக்கு விஷயமாகார், உலகத்திலே ஒருவிஷ யத்தின் சௌந்தரியஞானம் உண்டாகியல்லவோ அதில் பிரீதியுண்டாகும், ஆனதால் பரமானந்தரன்று,

இ-தி. தாசியின்ரூபலாவண்யங்களைப் பிரத்தியக்ஷமாய்ப் பார்த்தல்லவோ பரமானந்தம்ஜனிக்கவேண்டுமென்பதுபோலவும்ஆத்துமாவிளங்கும்,பக்ஷத்தி ல்சுகசாதனமான மாலைமுதலாயுள்ள விஷயத்திலும் அதிலுண்டாகிய சுகத்தி லும் யாருக்கும் இச்சைவரக்கூடாது, அதெப்படியென்றால் பலப்பிராப்தியான து யாருக்கும் லபித்திருக்கும்பட்சத்தில் அதற்குச்சாதனத்திலிச்சை யுண்டா கிறதென்கிற நியாயத்தால்நித்தியநிரதிசயபிர மானந்தலாபம் விளங்கும்போ துக்ஷணமிருப்பதாயும் சாதனங்களின் அபேக்ஷையால்பராதீனம் முதலான தோஷங்களினால் தூஷிக்கப்பட்டதாயு மிருக்கிறவிஷயத்திலிச்சை கூடாதா கையாலும் ஆத்துமாபரமானந்தரூபரன்று.

இ-தி. சிக்ககுளிகையால் திருப்தியடைந்த சித்தன்பசியால் பிச்சைக்கு திண்டாடுவானா என்பதுபோலும், அரசனானபின் அடிமைக்காசைப்படுவனா என்பதுபோலும், நீதியதிபதியானபின் அரைக்கீரைமணியத்திற்கு ஆசைப் படுவனாவென்பதுபோலுமாம்.

அ-கை. இந்தவிஷயத்தில் பிரகாராந்தரமாய் கூடுகையால் நீ சொன்னது கூடாதென்று பரிகரிக்கிறார்.

अतोभाने प्यभातासौ परमानन्दतात्मनः ॥

அதோபா₄நேப்யபா₄தாஸௌ பரமாநந்ததாத்மந: ॥ ௧௧ ॥

அத:	ஆகையினாலே	அபா₄தா	விளங்கப்படாமலிருக்கிறார்
பா₄நே அபி.	விளங்கிக் கொண்டிருந் தும்	ஆத்மந:	ஆத்துமாவிற்கு
அஸௌ	இவர்	பரமாநந்ததா	பரமானந்தத்துவமிருக் கிறது

வி-ம். யாதொருகாரணத்தால் விளங்குகிறது விளங்காமை இரண்டுபக்ஷங்களிலும் தோஷமிருக்கிறதாக நீசொன்னையோ, அந்தஹேதுவினாலேயே ஆத்துமாபரமானந்தரூபர் விளங்கிக்கொண்டேயிருந்தும் விளங்காமலிருக்கிறாரல்லவா.

ச-கை. ஒன்றுக்குத்தானே ஒரேகாலத்தில்விளங்கி விளங்காமைகூடாதெனில், இதுவென்ன அயுக்தம்சொல் இப்படி அனுபவம் காணப்படவில்லையென்றுசொல்லுகிறாயா, அல்லது திருஷ்டாந்தரஹிதமென்று சொல்லுகிறாயாவென்றுபேக்ஷித்து,முதல்சங்கைக்குச் சமாதானம்சொல்லுகிறார்.

अद्धचेतृवर्गमद्धचस्थ पुत्राद्ध्ययनशब्दवत् ।
भानेप्यभानं भानस्य प्रतिबन्धेनयुज्यते ॥

அத்⁴யேத்ருவர்க³மத்⁴யஸ்த²புத்ராத்⁴யயநஶப்³த³வத் ।
பா⁴நேப்யபா⁴நம் பா⁴நஸ்ய ப்ரதிப³ந்தே⁴நயுஜ்யதே ॥ கஉ ॥

அத்⁴யேத்ருவர்க³மத்⁴யஸ்த²புத்ராத்⁴யயந ஶப்³த³வத் — அத்தியயனம்பண்ணுகிற பிள்ளைகளுடைய கூட்டத்தின்மத்தியில் தோன்றுகிற தன்பிள்ளையினுடைய வேதபாடத்தின் குரல் தகப்பனுக்குக் கேட்பதுபோல

பா⁴நே அபி	விளங்கிக்கொண்டிருந்தாலும்	பா⁴நஸ்ய	விளக்கத்தின்தோற்றம்
அபா⁴நம்	விளங்கவில்லை	ப்ரதிப³ந்தே⁴ந	பிரதிபந்தத்தோடே
		யுஜ்யதே	கூடிக்கொண்டிருக்கிறது

வி-ம். அத்தியயனம்பண்ணுகிறபிள்ளைகளுடைய கூட்டத்திலுண்டாயிருக்கிற தன்பிள்ளையின் சப்தமானது வெளியிலிருக்கிற பிதாவுக்கு சாமானியமாய் விளங்கினாலும் இதுதான், நமது பிள்ளையின்குரலென்று எப்படித்தெரியவில்லையோ அப்படிதன்னானந்தம் விளங்கிக்கொண்டிருந்தும் பிரதிபந்தத்தோடேசேர்ந்திருப்பதால்விளங்காமலிருக்கிறது,ஆத்துமாபிள்ளை,அதின்விளக்கம் பிள்ளையின்குரல்,மனமுதலிய தத்துவங்கள்,கூட அத்தியயனம்பண்ணுகிறபிள்ளைகள், அவைகளின்விகாரங்கள், அந்தப் பிள்ளைகளுடையகுரல்கள், அவைகளால் இந்த ஆத்துமாவினுடையதோற்றம்தோன்றியும்தோற்றவில்லை,இரண்டாவதுசங்கைக்குத்திரம் விளங்கினாலும் விளங்காமைக்குஇதில்சொல்லியபிரதிபந்தமேகாரணமானதால் சாமான்னியமாய், விளங்கியும் விசேஷமாய்விளங்காமைகூடும் அதுயெவ்விதபிரதிபந்தமெனில் சொல்லுகிறார்.

प्रतिबन्धोस्तिभातीति व्यवहारार्हवस्तुनि ।
तन्निरस्यविरुद्धस्य तस्योत्पादनमुच्यते ॥

ப்ரதிபந்தோஸ்தி பாதீதி வ்யவஹாரார்ஹவஸ்துநி ।
தந்நிரஸ்ய விருத்தஸ்ய தஸ்யோத்பாதநமுச்யதே ॥ கங ॥

அஸ்தி பாதீதி வ்யவஹாரார்ஹவஸ்துநி — இருக்கிறது விளங்குகிறது யென்று வியவஹாரிக்க யோக்கியமான ஆத்துமவஸ்துவில்
தந்நிரஸ்ய — அதைத்தள்ளிவிட்டு
தஸ்ய — அதற்கு
விருத்தஸ்ய — விருத்தமான இல்லை விளங்கவில்லை யென்பதை
உத்பாதநம் — உற்பத்திசெய்கிறதுயாதோ
ப்ரதிபந்த: — அதுவேபிரதிபந்தமென
உச்யதே — சொல்லப்படுகிறது.

வி-ம், சகலசம்சாரத்திற்கு மூலகாரணம் ஆவரணசக்தியென்று சகலசுருதிகளிலும் சொல்லியிருப்பதால், அந்தஆவரணம் அசத்தாவரணம் அபானாவரணமென்று இரண்டுவிதங்களாயிருந்து, சகலரையும்ஆத்துமாயில்லை, விளங்கவில்லையென்று சொல்லும்படிசெய்கிறதை இங்கேயிவர் பிரதிபந்தமென்று சொன்னார்.

அ-கை. இப்போதுசொன்னபிரதிபந்தத்திற்குக் காரணத்தைதிருஷ்டாந்த தாஷ்டாந்தங்களிலும் கிரமமாகக் காண்பிவிக்கிறார்.

तस्यहेतुस्समानाभिहारः पुत्रध्वनिश्रुतौ ।
इहानादिरविद्यैव व्यामोहैकनिबन्धनम् ॥

தஸ்ய ஹேதுஸ் ஸமாநாபிஹார: புத்ரத்வநிஶ்ருதௌ ।
இஹாநாதிரவித்யைவ வ்யாமோஹைகநிபந்தநம் ॥ கச ॥

புத்ரத்வநி ஶ்ருதௌ — புத்திரனுடைய குரல் கேட்பதில்
தஸ்ய — அதற்குத்தடையான
ஸமாநாபிஹார: — வெகுபேர்களுடன்கூடியிருக்கிறசப்தமே
ஹேது: — காரணமாயிருப்பதுபோல்
இஹ — தாஷ்டாந்தத்தில்
வ்யாமோஹைகநிபந்தநம் — மோகத்திற்கு முக்கிய காரணமாயும்
அநாதி: — அநாதியாயுமிருக்கிற
அவித்யைவ — அவித்தைதான்

தா-ம். பிள்ளையின்குரல்விளங்காமைக்கு மற்றவர்களுடையசப்தம் காரணமாயிருந்ததுபோல், இவ்விடத்தில்விபரீதஞானங்களுக்கு முக்கியகாரணமானஅவித்தையே, தன்னுடைய ஸ்வரூபம் தனக்கு நன்றாய் விளங்காமைக்கு முக்கியகாரணமென்றறி.

இ-தி. பிராமணனுக்கு தன்னிலைமைதெரியாமல் மயங்கி உளரிக்கொண்டு கிடப்பதற்கு ஒரு[illegible]ட்டு.ராயாமே காரணமாயிருப்பதுபோலவறி.

அ-கை. இப்போதுபிரதிபந்தஹேதுவான அவித்தையைச்சொல்லுவதற்கு; அதற்குமூலகாரணமான பிரகிருதியைச் சொல்லுகிறார்.

चिदानन्दमयब्रह्म प्रतिबिंबसमन्विता ।
तमोरजस्सत्वगुणा प्रकृतिर्द्विविधाचसा ॥

சிதாநந்தமயப்ரஹ்மப்ரதிபிம்பஸமந்விதா ।
தமோரஜஸ்ஸத்வகுணாப்ரக்ருதிர்த்விவிதாசஸா ॥ ௧௫ ॥

சிதாநந்தமயப்ரஹ்மப்ரதிபிம்பஸமந்விதா	சச்சிதானந்தப் பிரம்மத்தின் பிரதிபிம்பத்தோடே கூடியதாயும்		
தமோரஜஸ்ஸத்வகுணா	சத்வரஜஸ்தமோகுணங்களையுடையதாயிருக்கிற		
ப்ரக்ருதி:	மூலப்பிரகிருதியென்றறி	ஸா ச	அதுவும்
		த்விவிதா	இரண்டுவிதங்களாகிறது

(ச) யென்கிறசொல்லால் சொல்லப்போகிறதாயிருக்கிற பிரகாராந்தரத்தைக்குறிப்பிக்கிறார்.

இ-தி. ஒருமழைஜலந்தானே இரண்டுவிதமாயாவதுபோலவறி.

அ-கை. காரணத்தோடும் அவ்விரண்டுவிதங்களையுங்காண்பிக்கிறார்.

सत्वशुद्ध्यविशुद्धिभ्यां मायाविद्येचतेमते ॥

ஸத்வஶுத்த்யவிஶுத்திப்யாம்மாயாவித்யேசதேமதே ॥ ௧௬ ॥

ஸத்வஶுத்த்யவிஶுத்திப்யாம்	சத்வசுத்தியாயிருப்பதாலும் அசுத்தத்தோடே கலந்திருப்பதினாலும்		
மாயாவித்யே ச	மாயையென்றும் அவித்தையென்றும்	தே	அவைகள்
		மதே	சொல்லப்படுகின்றன.

வி-ம். பிரகாசரூபமான சத்வகுணத்திற்கு, சுத்தியெதினாலென்றால் குணாந்திரங்களினால் கெடுக்கப்படாமலிருக்கிறதினாலென்றறி, ரஜோகுணத்திற்குஅசுத்தியெதினாலெனில், குணாந்திரங்களினால் கெடுக்கப்படுகிறதாலென்றறி; அந்தசுத்தாசுத்தங்களால் மாயை யென்றும் அவித்தை யென்றும் சொல்லப்பட்டன.

இ-தி. ராஜாவின் அரண்மனைக்குள் ளிருக்கிறகுளம் சுத்தமாயும், மந்தையிலிருக்கிறகுளம் அசுத்தமாயுமிருப்பதுபோலவறி.

அ-கை. யாதொருநிமித்தமாக சுத்தசத்வம் மாயையென்றும் மலினசத்வம் அவித்தையென்றும் பிரித்தல்சொல்லப்பட்டதோ அதையிப்பொழுது காண்பிக்கிறார்.

मायाबिंबोवशीकृत्य तांस्यात्सर्वज्ञईश्वरः ।
अविद्यावशगस्त्वन्य स्तद्वैचित्र्यादनेकधा ॥

மாயாபிம்போவஶீக்ருத்ய தாம்ஸ்யாத்ஸர்வஜ்ஞ ஈஶ்வர: ।
அவித்யாவஶகஸ்த்வந்ய ஸ்தத்வைசித்ர்யாதநேகதா ॥ ௧௬ ॥

மாயாபிம்பம் — மாயையிலே பிரதிபிம்பித்த சைதன்யமானது
தாம் — அந்த மாயையை
வஶீக்ருத்ய — ஸ்வாதீனம் பண்ணிக்கொண்டிருப்பதால்
ஸர்வஜ்ஞ: — சர்வத்தையு மறிகிறவனு யிருக்கிற
ஈஶ்வர: — ஈசனாக
ஸ்யாத் — இருக்கிறார்
அந்ய: து — அவருக்கு அன்யனாய் அவித்தையில் பிரதிபலித்த சைதன்யமானஜீவனோவென்றால்
அவித்யா வஶக:(ஸந்) — அந்த அவித்தைக்கு வசமாகி
தத்வைசித்ர்யாத் — அவைகளின் விசித்திரத்தால்
அநேகதா — வெகுவிதமாக ஆனான்.

இ-தி. திரனானவன்தன்ஸ்திரீயை தன்வசப்படுத்திக்கொண்டு ஸ்வதந்திரமாயிருப்பதுபோலும் தைரியமற்றவன் தன்மனைவிசொற்படி நடப்பதுபோலும் இன்னம் இராஜன் ஒருவராயிருப்பதுபோலும் குடிகள் பலவாராயிருப்பதுபோலும் அமிருதமுண்டவன் தெளிவுள்ளவனாயும். மதுஉண்டவன் மயங்குவதுபோலுமறி.

அ-கை. பின்னாலே சரீரத்திரயத்தில்நின்றும் ஆத்துமாவைவேறுபடுத்தும் பொருட்டு முந்திசரீரத்திரயத்தையும் ஜீவனுடையஸ்வரூபத்தையும் கிரமமாகநிரூபிக்கிறார்.

साकारणशरीरंस्या त्प्राज्ञस्तत्राभिमानवान् ॥

ஸா காரணஶரீரம் ஸ்யாத் ப்ராஜ்ஞஸ் தத்ராபிமாநவாந் ॥ ௧௭ ॥

ஸா — அந்த அவித்தையே
காரணஶரீரம் — காரணதேகமாக
ஸ்யாத் — ஆகிறது
தத்ர — அந்த காரணதேகத்தில்
அபிமாநவாந் — அபிமானிக்கிறவனாய்
ப்ராஜ்ஞ: — பிராஞ்ஞனாக ஆகிறான்

வி-ம். அந்தஅவித்தையை காரணசரீரமென்பது யெதினாலெனில் சர்வகாரணமானமூலப்பிரகிருதியின் அவஸ்தாவிசேஷமானதால், காரணசரீரத்தில் தாதாத்மியாத்தியாசத்தால் நானென்று அபிமானியான ஜீவன்பிராஞ்ஞனாம், ஏதினாலெனில் யாதொருத்தருடைய பிரஞ்ஞையானது நாசமன்றியிலிருக்கிறதோ அவன்பிரஞ்ஞன் அந்தப்பிரஞ்ஞனே பிராஞ்ஞன்.

அ-கை. கிரமப்பிராப்தமான சூக்குமசரீரத்தையும் அவ்வுபாதிக ஜீவனையும்சொல்லுகிறதற்காக அந்தசூக்குமசரீரத்திற்குக் காரணமான ஆகாசாதிகளின்சிருஷ்டி சொல்லுகிறார்.

तमःप्रधानप्रकृते स्तत्भोगायेश्वराज्ञया ।
वियत्पवनतेजोंबु भुवोभूतानिजज्ञिरे ॥

𑌤𑌮𑌃𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇 𑌸𑍍𑌤𑌦𑍍𑌭𑍋𑌗𑌾𑌯𑍇𑌶𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 ।
𑌵𑌿𑌯𑌤𑍍𑌪𑌵𑌨𑌤𑍇𑌜𑍋𑌂𑌬𑍁𑌭𑍁𑌵𑍋𑌭𑍂𑌤𑌾𑌨𑌿𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 ॥௧௮॥

𑌤𑌦𑍍𑌭𑍋𑌗𑌾𑌯 — அந்தப் பிராணிகளின் போகத்தின் பொருட்டு
𑌤𑌮𑌃𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌪𑍍𑌰𑌕𑍃𑌤𑍇𑌃 — ஜகத்திற்கு காரணமான தமோகுணமாயையினின்று
𑌈𑌶𑍍𑌵𑌰𑌾𑌜𑍍𑌞𑌯𑌾 — ஈசனுஞ்ஞையால்
𑌵𑌿𑌯𑌤𑍍𑌪𑌵𑌨𑌤𑍇𑌜𑍋𑌽𑌮𑍍𑌬𑍁𑌭𑍁𑌵𑌃 — வான் காற்று தீ நீர் பூமிகளான
𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 — ஐம்பூதங்கள்
𑌜𑌜𑍍𑌞𑌿𑌰𑍇 — உண்டாயின

வி-ம். ஈசுவராஞ்ஞையாலென்பது நியமனாதிசக்திகளுடன் கூடியிருக்கிற ஈசுவரன்சிருஷ்டிக்க வேண்டுமென்கிற எண்ணத்தோடே கூடியபார்வையே நிமித்தகாரணமாயிருக்கிறது.

இ-தி. பிரபுவானவன் ஏழைகளுக்கு அன்னம்போடும்நிமித்தம் ஸ்திரீயைப்பார்த்தமாத்திரத்தில் பஞ்சபக்ஷணங்களுடன் அவள் அன்னம் அளிப்பதுபோலவாம்.

அ-கை. பூதசிருஷ்டியைச்சொல்லி பௌதிகசிருஷ்டியைச்சொல்லுகிறதற்காகமுதலில் ஞானேந்திரியசிருஷ்டியைச் சொல்லுகிறார்.

सत्वांशैःपञ्चभिस्तेषां क्रमाद्धीन्द्रियपञ्चकम् ।
श्रोत्रत्वगक्षिरसन घ्राणाख्यमुपजायते ॥

𑌸𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑍈𑌃𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌸𑍍𑌤𑍇𑌷𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌦𑍍𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 ।
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌗𑌕𑍍𑌷𑌿𑌰𑌸𑌨𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌖𑍍𑌯𑌮𑍁𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 ॥௧௯॥

𑌤𑍇𑌷𑌾𑌂 — அப்பூதங்களினுடைய
𑌸𑌤𑍍𑌵𑌾𑌂𑌶𑍈𑌃 — சத்வகுணத்தின் பாகங்களான
𑌪𑌞𑍍𑌚𑌭𑌿𑌃 — ஐந்திஞலே
𑌧𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 — ஞானேந்திரிய பஞ்சகமானது
𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 — கிரமமாக
𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌤𑍍𑌵𑌗𑌕𑍍𑌷𑌿𑌰𑌸𑌨𑌘𑍍𑌰𑌾𑌣𑌾𑌖𑍍𑌯𑌂 — செவி த்வக்கு கண் நாக்கு மூக்கென்று நாமங்களடைந்து
𑌉𑌪𑌜𑌾𑌯𑌤𑍇 — உண்டாயின.

இ-தி. தேன்முதலான வஸ்துக்கள் தனித்தனியே வைத்ததுபோலும் ஒவ்வொருபாஷைமட்டும்தெரிந்த ஒவ்வொருதேசத்திலுள்ளவன்போலுமறி.

அ-கை. ஆகாசாதிகளின் சத்துவகுணங்களினுடைய வியஷ்டிசிருஷ்டியைச்சொல்லிசமஷ்டி சிருஷ்டியைச்சொல்லுகிறார்.

तैरन्तःकरणंसर्वै र्वृत्तिभेदेनतद्द्विधा ।
मनोविमर्शरूपंस्यात् बुद्धिस्स्यान्निश्चयात्मिका ॥

தைரந்த:கரணம் ஸர்வைர்வ்ருத்திபேதேந தத்த்விதா |
மநோவிமர்ஶரூபம் ஸ்யாத்புத்தி: ஸ்யாந்நிஶ்சயாத்மிகா || ௨0||

ஸர்வை: சமஸ்தங்களாகயிருக்கிற
தை: அந்த சத்துவாமிசங்களினாலே
அந்த:கரணம் அந்தக்கரணம்
உபஜாயதே பிறந்தது
வ்ருத்திபேதேந விருத்திபேதத்தினாலே
தத் அந்த அந்தக்கரணமானது
த்விதா இரண்டுவிதமாயிற்று

விமர்ஶரூபம் (ஸத்) ஆலோசனைரூபமாயிருப்பதுபற்றி
மந: மனமென்று பெயரை
ஸ்யாத் அடைந்தது
நிஶ்சயாத்மிகா (ஸதீ) நிச்சயரூபமாயிருப்பதைப்பற்றி
புத்தி: புத்தியென்றுபேருடையதாய்
ஸ்யாத் ஆகிறது

இ-தி. பஞ்சாமிர்தம் சேர்த்தது போலும் ஐந்துபாஷையுங் கற்றவன்போலுமறி, அதுஇரண்டாயிருப்பதற்குயுக்தி, ஒருகரும்புரசம் காய்ச்சும்போது பாகென்றும், கட்டிபாகும்போதுவெல்ல அச்சுஎன்றும் சொல்லப்படுகிறது போலுமறி.

அ-கை. இப்படிமுறைமுறையேயான ரஜோகுணங்களுடைய வியஷ்டிகாரியத்தைச்சொல்லுகிறார்.

रजोंशैःपञ्चभिस्तेषां क्रमात्कर्मेन्द्रियाणितु ।
वाक्पाणिपादपायूपस्थाभिधानानिजज्ञिरे ॥

ரஜோம்ஶை: பஞ்சபிஸ்தேஷாம் க்ரமாத்கர்மேந்த்ரியாணி து |
வாக்பாணிபாதபாயூபஸ்தாபிதாநாநி ஜஜ்ஞிரே || உக ||

தேஷாம் அப்பூதங்களினுடைய
பஞ்சபி: ஐந்தாயிருக்கிற
ரஜோம்ஶை: ரஜோகுணபாகங்களினாலே
க்ரமாத் முறையாக

கர்மேந்த்ரியாணி து கர்மேந்திரியங்களானவை
வாக்பாணிபாதபாயூபஸ்தாபிதாநாநி வாக்குகைகால்பாயுகுஹியமென்றநாமங்களடைந்து
ஜஜ்ஞிரே உண்டாயின

இ-தி. ஒவ்வொருகரியைத்தனித்தனியே பாகம்பண்ணிவைத்தது போலும் தச்சன்முதலான தொழிலாளிகள் ஒவ்வொருதொழில்மட்டும் கற்றிருப்பது போலுமறி.

அ-கை. ரஜோகுணசமஷ்டி காரியத்தைச் சொல்லுகிறார்.

तैस्सर्वैस्सहितै प्राणो वृत्तिभेदात्सपञ्चधा ।
प्राणोपानस्समानाश्चो दानव्यानौचतेपुनः ॥

தைஸ்ஸர்வைஸ்ஸஹிதை: ப்ராணோ வ்ருத்திபேதாத்ஸபஞ்சதா |
ப்ராணோபாநஸ்ஸமாநஶ்சோதாநவ்யாநௌ ச தே புந: ||௨௨||

ஸர்வை: சமஸ்தங்களாயிருக்கிற
ஸஹிதை: ராஜஸாம்சங்கலந்த
தை: அவைகளினாலே
ப்ராண: பிராணவாயுவு உண்டாயின
வ்ருத்திபேதாத் தொழிலின் பேதத்தால்
ஸ: அந்தப்பிராணவாயுவே
புந: ச. மறுபடியும்
ப்ராண: பிராணனென்றும்
அபாந: அபானனென்றும்
ஸமாந: சமானனென்றும்
உதாநவ்யாநௌ { உதானனென்றும் வியானனென்றும்
தே அவைகள்
பஞ்சதா { ஐந்துவிதங்களாக ஆகின்றன

இ-தி. ஐந்துகரியை ஒன்றுசேர்த்த. கூட்டுக்கரியைப்போலவும் ஐந்துதொழிலுக்குமாதாரமானமேஸ்திரியைப்போலுமறி, அதுஐந்துவிதமானதற்குயுக்தியொருவள் ஓரவசரத்தில் பாடுகிறவளாயும், வேலைசெய்கிறவளாயும் ஆடுகிறவளாயும் அசிங்கியமுள்ளவளாயும் போகத்திற் கிடங்கொடுப்பவளாயுமாவதுபோலும்வெளியிலடிக்கிறகாற்றே கிழ்காற்றென்றும் தென்றல்காற்றென்றும் மேல்காற்றென்றும் வாடைகாற்றென்றும் சுழல்காற்றென்றும் சொல்லப்படுவதுபோலுமறி.

அ-கை. யாதொருநிமித்தம் ஆகாசமுதல் பிராணன்வரை சிருஷ்டிசொல்லப்பட்டதோ அதையிப்பொழுதுகாண்பிவிக்கிருர்.

बुद्धिकर्मेन्द्रियप्राण पञ्चकैर्मनसाधिया ।
शरीरंसप्तदशभि स्सूक्ष्मंतल्लिंगमुच्यते ॥

புத்திகர்மேந்த்ரியப்ராணபஞ்சகைர்மனஸாதியா ।
ஶரீரம்ஸப்ததஶபிஸ்ஸூக்ஷ்மந்தல்லிங்கமுச்யதே ॥ ௨௩ ॥

புத்திகர்மேந்த்ரியப்ராணபஞ்சகை: { ஞானேந்திரியகர்மேந்திரிய பிராணங்களுடைய ஐந்தைந்துகளோடேயும்
மநஸா மனதோடேயும்
தியா புத்தியோடேயும் சேர்ந்ததான
ஸப்ததஶபி: { இப்பதினேழும் கூடியது யாதோ
தத் அது
லிங்கம் லிங்கசரீரமென்றும்
ஸூக்ஷ்மம் சூக்குமசரீரமென்றும்
ஶரீரம் சரீரமென்றும்
உச்யதே சொல்லப்படுகிறது

வி-ம். சப்தாதிகளையறிகிற சுரோத்திராதி ஞானேந்திரியங்களைன்ன, வசனாதிகளைச் செய்கிறவாக்காதிகருமேந்திரியங்களைன்ன, உச்சுவாச நிச்சுவாசாதிகளைச்செய்கிற பிராணாதிவாயுக்களைன்ன, சஞ்சலமாயும் நிச்சலமாயுமிருக்கிறமனோபுத்திகளைன்ன, இந்தப்பதினேழுகளும் ஒன்று சேர்ந்ததால் சூக்குமசரீரமென்றும், லிங்கசரீரமென்றும் சொல்லப்படும்.

இ-தி. கணக்குவழக்கையறிகிற ஐவகைப் புத்திரர்களும் வேலைசெய்கிறஐவகைமைந்தர்களும் சமையல் முதலானதைசெய்கிற ஐவகைபரிசாரகர்களும்

அலைந்துகொண்டிருக்கிற அமங்கலிப்பெண்ணும் வீட்டுக்குள்ளே யிருக்கிறவாழும்பெண்ணும் சேர்ந்து குடும்பமாயிருப்பது போலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் சூக்குமசரீரத்தைச்சொல்லி பிராஞ்ஞேசுவரர்களுக்கு இந்தசூக்குமசரீராபிமானத்தால் வருகிற நாமத்தைச் சொல்லுகிறார்.

प्राज्ञस्तत्राभिमानेनतैजसत्वंप्रपद्यते ।
हिरण्यगर्भतामीशस्तयोर्व्यष्टिसमष्टिता ॥

ப்ராஜ்ஞஸ்தத்ராபிமாநேந தைஜஸத்வம்ப்ரபத்யதே |
ஹிரண்யகர்ப்பதாமீஶஸ்தயோர்வ்யஷ்டிஸமஷ்டிதா || உ௪ ||

ப்ராஜ்ஞ꞉ — சுஷுப்தியை யபிமானித்த பிராஞ்ஞனானவன்
தத்ர — அந்த சூக்குமசரீரத்தில் [ல்
அபிமாநேந — தாதாத்மியாபிமானத்தா
தைஜஸத்வம் — தைஜசனென்றபெயரை
ப்ரபத்யதே — அடைகிறான்
ஈஶ꞉ — மாயையில் பிரதிபலித்த ஈசன்
ஹிரண்யகர்ப்பதாம் — இதில் அபிமானத்தால் இரணியகர்ப்பனாகிறார்
தயோ꞉ — அவ்விருவர்களுக்கும் பேதமெதினாலெனில்
வ்யஷ்டிஸமஷ்டிதா — வியஷ்டி-சமஷ்டிகளே பேதங்கள்

இ-தி. குடிகளையுமிராஜனையும்போலும், பிர்மசாரியான வித்தியார்த்தியும் கிரஹஸ்தனும்போலுமறி.

அ-கை. ஈசுவரன்சமஷ்டியென்பதிலும் ஜீவன்வியஷ்டியென்பதிலும் அனுபவம்யென்னவென்றால் சொல்லுகிறார்.

समष्टिरीशस्सर्वेषांस्वात्मतादात्म्यवेदनात् ।
तदभावात्ततोन्येतुकथ्यन्तेव्यष्टिसंज्ञया ॥

ஸமஷ்டிரீஶஸ்ஸர்வேஷாம் ஸ்வாத்மதாதாத்ம்யவேதநாத் |
ததபாவாத்ததோந்யேது கத்யந்தேவ்யஷ்டிஸம்ஜ்ஞயா || உரு ||

ஸர்வேஷாம் — ஸமஸ்தங்களையும் தானாய்ப் பார்க்கிற
ஸ்வாத்மதாதாத்ம்யவேதநாத் — ஏகத்துவ ஞானத்தினாலே
ஈஶ꞉ — ஈசுவரனானவர்
ஸமஷ்டி꞉ — சமஷ்டி அபிமானியாகிறார்
தத꞉ — அவரைக்காட்டிலும்
அந்யே து — அன்னியமாயிருக்கிற ஜீவர்களோவென்றால்
ததபாவாத் — அந்த சர்வாபிமானமில்லாமையால் [ராலே
வ்யஷ்டிஸம்ஜ்ஞயா — வியஷ்டியென்றபெய
கத்யந்தே — சொல்லப்படுகிறார்கள்

இ-தி. சூரியனையும் கண்ணையும்போலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் லிங்கசரீரத்தையும் அதை அபிமானிக்கிறவர்களானதைஜச இரணிய கர்ப்பர்களையுஞ்சொல்லி, ஸ்தூலசரீரம்முதலானதின், உற்பத்திசித்திக்கும்பொருட்டு, பஞ்சீகரணத்தை நிரூபிக்கிறார்.

तद्भोगायपुनर्भोग्यभोगायतनजन्मने ।
पञ्चीकरोतिभगवान्प्रत्येकंवियदादिकम् ॥

தத்போகாயபுநர்போக்யபோகாயதநஜந்மநே ।
பஞ்சீகரோதிபகவாந் ப்ரத்யேகம்வியதாதிகம் ॥ உசு ॥

புந:	மறுபடியும்	பகவாந்	சமஸ்த செல்வமும், எல்லா வல்லமையும், சகலகீர்த்தியும், சர்வசக்தியும், வைராக்கியமும், அபரோக்ஷ ஞானமும்நிறைந்தவீசன்
தத்போகாய	அந்த ஜீவர்களின் போகத்தின்பொருட்டு	வியதாதிகம்	ஆகாசாதி பஞ்சபூதத்தை
போகாயதநஜந்மநே	போக்கியவஸ்துக்கள் ஜராயுஜாதி சரீரங்கள் உற்பத்தியின்பொருட்டு	ப்ரத்யேகம்	ஒன்றொன்றையும்
		பஞ்சீகரோதி	பஞ்சீகரணம்செய்தார்

இ-தி. குழந்தைகள் விளையாடுவதற்காகவும் சாப்பிடுவதற்காகவும் தாயானவள் அரிசிநெய்முதலானவைகளை ஒன்றுசேர்த்து பக்ஷணம்பண்ணிக்கொடுப்பதுபோலும், இன்னும்பெண்களுக்கு பிதாவானவன் உபயோகிக்கவேண்டியவஸ்துகளையும் உண்டுபண்ணிக்கொடுப்பதுபோலவாம்.

அ-கை. எப்படி ஒன்றொன்றையும் ஐந்தைந்தாகசெய்தாரெனில்.

द्विधाविधायचैकैकंचतुर्धाप्रथमंपुनः ।
स्वस्वेतरद्वितीयांशैर्योजनात्पञ्चपञ्चते ॥

த்விதாவிதாயசைகைகம்சதுர்தாப்ரதமம்புந: ।
ஸ்வஸ்வேதரத்விதீயாம்சைர்யோஜநாத்பஞ்சபஞ்சதே ॥ உஎ ॥

ஏகைகம்.	ஒவ்வொன்றையும்	ஸ்வஸ்வேதரத்விதீயாம்சை:	தன்தன் பாகத்துக்கன்னியங்களான இரண்டு பாகங்களோடு
த்விதாவிதாய	இரண்டிரண்டாகச்செய்து	யோஜநாத்	சேர்த்தபடியினால்
புந:	மறுபடி	தே	அந்த பஞ்சபூதங்கள்
ப்ரதமம்	முதலாவதுபாகத்தை	பஞ்சபஞ்ச	ஐந்தைந்தாக ஆயின
சதுர்தா	நாலுநாலாகச்செய்து		

இ-தி. ஐந்துவிதமானசர்க்கரைப்பொங்கல் முதலானபிரசாதத்தை கொண்டுபோனவர்கள், தங்கள்தங்கள் அன்னத்தை இரண்டுபாகம்செய்து ஒருபாகத்தை தங்கள்தங்களுக்கு வைத்துக்கொண்டு மற்றொருபாகத்தை நாலாகப்பிரித்து ஒவ்வொருவரும்மாற்றிக்கொண்டதால் ஒவ்வொருவருக்கும் பஞ்சரசபோஜனம் ஆனதுபோல் ஸ்தூலபூதமாயிற்று.

அ-கை. இப்படிபஞ்சீகரணம்சொல்லி அவைகளினுண்டான காரியவர்க்கத்தை காண்பிவிக்கிறார்.

तैरण्डस्तत्रभुवनभोग्यभोगाश्रयोद्भवः ॥

தைரண்டஸ்தத்ரபுவநபோக்யபோகாச்ரயோத்பவ:॥உஎ॥

தை: அந்த பஞ்சீகரணம் பண்ணின பூதங்களினாலே அண்ட: அண்டமானது உண்டாயிற்று தத்ர அந்த பிரம்மாண்டத்தில் புவநபோக்யபோகாச்ரயோத்பவ: மேலேயிருக்கிற பூமிமுதலான ஏழு லோகங்களும் பூமிக்குக் கீழே யிருக்கிற அதலாதி ஏழு லோகங்களும் அவைகளில் பிராணிகளுக்கு புஜிக்கயோக்கியங்களாயிருக்கிற அன்னாதிகளும் அந்த லோகங்களுக்கு உசிதமான சரீரங்களும் ஈசுவராஞ்ஞையினால்உண்டாயின

இ-தி. பொம்மைசெய்கிறவன் மண்துணி தண்ணீர்முதலானவைகளைசேர்த்துவிசித்திரமான பொம்மைகள்முதலானதை செய்வதுபோலவறி.

அ-கை. இந்தப்பிரகாரம் ஸ்தூலஜகத்துற்பத்தியைச் சொல்லி அவைகளில்முன்போல ஜீவேசுவரர்களுக்கு அபிமானத்தால்வருகிற நாமத்தையும் சொல்லுகிறார்.

हिरण्यगर्भस्स्थूलेस्मिन्देहेवैश्वानरोभवेत् ।
तैजसाविश्वतांयातादेवातिर्यङ्नरादयः ॥

ஹிரண்யகர்ப்பஸ்ஸ்தூலேஸ்மிந்தேஹேவைச்வாநரோபவேத்।
தைஜஸாவிச்வதாம்யாதா தேவதிர்யங்நராதய:॥ உஅ॥

ஹிரண்யகர்ப்ப: ஹிரணியகர்ப்பர் அஸ்மிந் இந்த ஸ்தூலேதேஹே ஸ்தூலதேகத்திலபிமானத்தால் வைச்வாநர: வைசுவானரனென்கிற பேராக பவேத் ஆகிறார் தைஜஸா: தைஜசர்கள்

விச்வதாம் யாதா: விசுவனென்ற பேரை இந்த ஸ்தூல சரீராபிமானத்தாலடைகிறார்கள். அதற்குள்ளே அவாந்திரநாமங்கள் யாதெனில் கர்மவிசித்திரத்தால் சரீர விசித்திரமடைந்து தேவதிர்யங்நராதய: தேவதிர்யக் நராதிகளென்றபெயரை அடைகிறார்கள்

இ-தி. நாடகவேஷம் போடும்போது ராஜா மந்திரி சேவகர்களென்றுஒருமனிதனே சொல்லப்படுவதுபோலவறி.

அ-கை. இப்போது விசுவனென்றுசொல்லப்படுகிற ஜீவர்களுக்கு தத்துவஞானமில்லாமையால் சம்சாரம் வருகிறவிதத்தை இரண்டு சுலோகத்தினால்சொல்லுகிறார்.

तेपराग्दर्शिनःप्रत्यक्तत्वबोधविवर्जिताः ।
कुर्वतेकर्मभोगायकर्मकर्तुंचभुंजते ॥
नद्यांकीटाइवावर्तादावर्तान्तरमाश्रुते ॥
व्रजन्तेजन्मनोजन्मलभन्तेनैवनिर्वृतिम् ॥

தேபராக்தர்சிந: ப்ரத்யக்தத்வபோதவிவர்ஜிதா: ।
குர்வதேகர்மபோகாயகர்மகர்தும்சபும்ஜதே ॥
நத்யாம்கீடாஇவாவர்தாதாவர்தாந்தரமாச்ருதே ।
வ்ரஜந்தேஜந்மநோஜந்மலபந்தேநைவநிர்வ்ருதிம் ॥ ௩௦ ॥

பராக் தர்சிந: } பகிர்முகாளாக வெளிநாட்டத்தையுடைவராயிருக்கிற
தே அந்த தேவாதிகளான ஜீவர்கள்
ப்ரத்யக்தத்வபோதவிவர்ஜிதா: ப்ரத்யக்சாக்ஷித்துவஞான மில்லாதவர்களாய்
போகாய போகத்தின்பொருட்டு
கர்ம உழவாதிதொழில்களை
குர்வதே செய்கிறார்கள்
கர்மகர்தும் ச தொழில்செய்வதற்கே
புஞ்ஜதே புஜிக்கிறார்கள்
நத்யாம் நதியில்
கீடா: புழுக்கள்
ஆவர்தாத் ஒருசுழியில் நின்றும்
ஆவர்தாந்தரம் மற்றொருசுழியை
ஆசு வேகமாக
வ்ரஜந்தே இவ அடைகின்றனபோல்
தே அந்த ஜீவர்கள்
ஜந்மந: ஒருஜன்மத்தைவிட்டு
ஜந்ம மறுஜன்மத்தை யடைகிறார்கள்
நிர்வ்ருதிம் மோக்ஷசுகத்தை
லபந்தே நைவ } அடைகிறார்களே யில்லை

வி-ம். சுருதியும் ஈசுவரன், மனம்முதலியகரணங்களை வெளிநாட்டமாக வேஉண்டுபண்ணினதால் இந்தஜீவர்களும் வெளிநாட்டமாகவே யிருக்கிறார்களேதவிர அந்தராத்துமாவை பார்க்கிறார்களில்லையென்று சொல்லுகிறது.

இ-தி. குழந்தைகள் வீட்டிலுள்ள அலுவலைப்பாராமல் வெளியில்விளையாடவோடிப்போவதுபோலவாம்.

ச-கை தார்க்கிகர்முதலானவர்கள் தேகத்திற்குவேறாக ஆத்துமாவை அறிந்திருக்கிறார்களேயென்றால் அவர்களப்படி யறிந்தபோதிலும் சுருதிசித்தமான அந்தரங்கஆத்துமாவை அறியவில்லையென்ற அபிப்பிராயத்தால், ஒருவரும்அந்தரங்க ஆத்துமஞானத்தை யடையவில்லையென்று சொல்லப்பட்டது, விஷயசுகாதிகளை யனுபவிக்கும்பொருட்டு மனுஷியாதிசரீரத்தை யெடுத்து அந்தசரீரத்திற்குசிதமான கர்மங்களைச்செய்கிறார்கள் மறுபடி தேவாதிபோகத்தைபுஜிப்பது யேனென்றால் மறுபடிகர்மத்தை செய்வதற்காக வென்றறி, பலானுபவமில்லாவிடில் அச்சுகங்களிச்சை உண்டாகாது அதற்குராதனானுஷ்டானங்களு மில்லாமற்போம்.

இ-தி. தினந்தோறுஞ்சகலரும் வேலைசெய்வது சாப்பிடுவதற்கும் சாப்பிடுவது வேலைசெய்வதற்கும்போலவுமி.

அ-கை. இப்படிசம்சாரத்தின் வரவானகற்பனையைச்சொல்லி அதுநிவர்த்திக்குபாயத்தை காண்பிவிக்கும்பொருட்டு திருஷ்டாந்தம் சொல்லுகிறார்.

सत्कर्मपरिपाकात्तेकरुणानिधिनोद्धृताः ।
प्रप्यातीरतरुच्छायांविश्राम्यन्तियथासुखम् ॥

ஸத்கர்மபரிபாகாத்தே கருணாநிதிநோத்த்ருதா: ।
ப்ராப்யதீரதருச்சாயாம்விச்ராம்யந்தியதாஸுகம்॥ ௰௧ ॥

தே அந்த புழுக்களானவை	தீரதருச்சாயாம் — கரையிலிருக்கிற மரத்தின் நிழலை
ஸத்கர்மபரிபாகாத் — முற்பிறப்பிற்செய்த புண்ணியப்பேற்றால்	ப்ராப்ய அடைந்து
கருணாநிதிநா — தயாளுவான புருஷனாலே	யதா எப்படி [அப்படி
	ஸுகம் சுகமாயிருக்கவேண்டுமோ
உத்த்ருதா: (ஸந்த:) — அந்நீரிலிருந்து உயரயெடுக்கப்பட்டு	விச்ராம்யந்தி — சிரமபரிகாரம் பண்ணிக்கொண்டிருக்கின்றன

அ-கை. பஞ்சகோசங்களின் நாமங்களென்ன, அவைகளால் வந்திருக்கிற கெடுதியென்னவென்று கேட்டாலதற்குத்தரம் சொல்லுகிறார்.

उपदेशमवाप्यैवमाचार्यात्तत्वदर्शिनः ।
पञ्चकोशविवेकेनलभन्तेनिर्वृतिंपराम् ॥

உபதேசமவாப்யைவமாசார்யாத்தத்வதர்சிந: ।
பஞ்சகோசவிவேகேநலபந்தேநிர்வ்ருதிம்பராம்॥ ௰௨ ॥

ஏவம் — இப்படி சற்கருமபரிபாகம் வந்தவுடனே	அவாப்ய அடைந்து
தத்வதர்சிந: கூடஸ்த பிரமைக்கிய ஞானத்தை யுடையவரா யிருக்கிற	பஞ்சகோசவிவேகேந — அன்னமயாதி பஞ்சகோசங்களுடைய விவேகத்தினாலே
ஆசார்யாத் சற்குருவினிடத்தினின்று	
உபதேசம் — (தத்வமஸ்யாதி மகாவாக்கிய) உபதேசமாகிற சிரவணத்தை)	பராம். நிர்வ்ருதிம் பரமோக்ஷத்தை
	லபந்தே அடைகிறார்கள்

இ-தி. ஐந்துகோட்டைக்குள் வைத்திருக்கிறநிதியை இஷ்டன்கொடுத்த திறவுகோலால் அதைத்திறந்து அந்தநிதியையெடுத்து நித்தியசுகியாய் வாழ்வதுபோலவுமி.

அ-கை. பஞ்சகோசங்களின் நாமங்களென்ன, அவைகளால் வந்திருக்கிற கெடுதியென்னவென்று கேட்டால் அதற்குத்தரம் சொல்லுகிறார்.

अन्नंप्राणोमनोबुद्धिरानन्दश्चेतिपञ्चते ।
कोशास्तैरावृतस्वात्माविस्मृत्यासंसृतिंव्रजेत् ॥

அந்நம்ப்ராணோ மநோபுத்தி ராநந்தஶ்சேதி பஞ்சதே | கோஶா
ஸ்தைராவ்ருதஸ்வாத்மாவிஸ்ம்ருத்யாஸம்ஸ்ருதிம்வ்ரஜேத்|| ௩௩||

தே	அவைகள்	கோஶா:	கோசங்களென்று சொல்லப்பட்டிருக்கின்றன
அந்நம்	அன்னமயமென்றும்	ஸ்வாத்மா	(சாக்ஷியாகிய) ஆத்துமா
ப்ராண:	பிராணமயமென்றும்	தை:	அந்த பஞ்சகோசங்களினாலே
மந:	மனோமயமென்றும்	ஆவ்ருத:(ஸந்)	மறைக்கப்பட்டவராகி
புத்தி:	விஞ்ஞானமயமென்றும்	விஸ்ம்ருத்யா	(தன் சாக்ஷித்வஞானத்தின்) மறதியினாலே
ஆநந்த:. ச	ஆனந்தமயமென்றும்	ஸம்ஸ்ருதிம்	ஜனனமரணாதிதுன்பத்தை
இதி. பஞ்ச	இப்படி ஐந்துகளான	வ்ரஜேத்	அடைகிறார்

வி-ம். ஆத்துமாதன்னாலுண்டாக்கப்பட்ட கோசங்களால் அத்வைதானந்தனைதான் மறைக்கப்படுவதால் அதற்குகோசமென்றுபெயர் ஏற்பட்டது.

இ-தி- உலகத்தில் கோசகாரமென்ற பட்டுப்பூச்சி தன்னாலுண்டுபண்ணப்பட்டநூலடைந்து தானேதுக்கப்படுவதுபோலும், ஜலமானது தன்னாலுண்டாக்கப்பட்ட பாசியால் மறைக்கப்பட்டதுபோலும், அக்கினியானது தன்னிடத்திலுண்டான சாம்பலால் மறைக்கப்பட்டதுபோலும் ஆகாசமானது தன்னிடத்திலுண்டான மேகத்தால் மறைக்கப்பட்டதுபோலுமறி.

ச-கை. அந்தகோசங்களின் சுரூபத்தை காண்பிவிக்கிறார்.

स्यात्पञ्चीकृतभूतोत्थोदेहस्स्थूलोन्नसंज्ञिकः ।
लिंगेतुराजसैःप्राणैःप्राणःकर्मेन्द्रियैस्सह ॥
सात्विकैर्धीन्द्रियैस्साकंविमर्शात्मामनोमयः ।
तैरेवसाकंविज्ञानमयोधीर्निश्चयात्मिका ।
कारणेसत्वमानन्दमयोमोदादिवृत्तिभिः ॥

ஸ்யாத்பஞ்சீக்ருதபூதோத்தோதேஹஸ்ஸ்தூலோந்நஸம்ஜ்ஞிக: |
லிம்கேதுராஜஸை:ப்ராணை:ப்ராண:கர்மேந்த்ரியைஸ்ஸஹ||
ஸாத்விகைர்தீந்த்ரியைஸ்ஸாகம் விமர்ஶாத்மாமநோமய: |
தைரேவஸாகம்விஜ்ஞாநமயோதீர்நிஶ்சயாத்மிகா |
காரணேஸத்வமாநந்தமயோமோதாதிவ்ருத்திபி:|| ௩௪||

பஞ்சீக்ருதபூதோத்த:	பஞ்சீகிருதபூதத்தில் நின்று உண்டானதாயும்

ஸ்தூலம்	ஸ்தூலமாயுமிருக்கிற	ஜ்ஞாநேந்த்ரியை: ஸஹ	ஞானேந்திரியங்களோடேகூடி [ப
தேஹம்	தேகமானது	விசாராத்மா.	ஆலோசனையானநினைப்பே
அந்நஸம்ஜ்ஞகம்	அன்னமயகோசமாக	மநோமய:	மனோமயகோசமாகிறது
ஸ்யாத்	ஆகிறது	தைரேவ	அந்த ஞானேந்திரியங்களோடேகூடியே
ஸூக்ஷ்மே. து	சூக்குமசரீரத்திலும்	நிச்சயாத்மிகா தீ:	நிச்சியவடிவமாயிருக்கிற புத்தி விருத்தியானது
ராஜஸை:	ரஜோகுணசமஷ்டிவியஷ்டியிலுண்டான	விஜ்ஞாநமய:	விஞ்ஞானமயகோசம்
ப்ராணை:	பிராணங்களோடும்	காரணே	காரணசரீரத்திலிருக்கிற
கர்மேந்த்ரியை: ஸஹ	கர்மேந்திரியங்களோடுங்கூடி	ஸத்வம்	மலினசத்துவமானது
ப்ராண:	பிராணமயகோசமாகிறது	மோதாதிவ்ருத்திபி:	பிரியமோதபிரமோத விருத்திகளினாலே
ஸாத்விகை:	சத்துவகுணத்தினாலுண்டாயிருக்கிற	ஆநந்தமய: ஸ்யாத்	ஆனந்தமயகோசமாக ஆகிறது.

அ-கை இப்படிஸ்தூலதேகாதிகளை அன்னமயாதி கோசமென்று ஜடமாய்சொன்னால் சுருதியால் அன்னமயர் அதற்குள் பிராணமயர் அதற்குள்மனோமயர் அதற்க்குள்விக்ஞானமயர் அதற்குள் ஆனந்தமயரென்று ஆத்துமாவாகச்சொல்லி யிருக்கும்பொழுது நீங்கள்அவைகளை ஜடமாகஎப்படி சொல்லக்கூடுமெனில்.

तत्तत्कोशैस्तुतादात्म्यादात्मातत्तन्मयोभवेत् ॥

தத்தத்கோசைஸ்துதாதாத்ம்யாதாத்மாதத்தந்மயோபவேத் ||

ஆத்மா. து	ஆத்துமாவும் (ல்	தத்தந்மய:	அந்தந்த கோசமயராக
தத்தத்கோசை:	அந்தந்த கோசங்களி	பவேத்	பவிக்கிறார்
தாதாத்ம்யாத்	நானென்ற தன்மையால்		

வி-ம். (து) யென்றசப்தத்தால் ஆத்துமாவுக்கு கோச விலக்ஷணத்துவங்குறிப்பிக்கப்படுகிறது.

இ-தி. ராஜன் நீசஸ்திரியை வைப்பாட்டியாக வைத்துக்கொண்டதால்சேவுகன் அம்மாவென்று அழைக்கும்படி நேரிடுவதுபோலவறி.

அ-கை. அப்போது இவ்விதமாயிருக்கிற ஆன்மாவுக்கு பிரமத்வமெப்படி சித்திக்குமெனில் கோசவிவேகத்தால் சித்திக்குமென்று சொல்லுகிறார்.

अन्वयव्यतिरेकाभ्यांपञ्चकोशाविवेकतः ।
स्वात्मानंततउद्धृत्यपरंब्रह्मप्रपद्यते ॥

அந்வயவ்யதிரேகாப்யாம் பஞ்சகோசவிவேகத꞉ ।
ஸ்வாத்மாநம் தத உத்த்ருத்ய பரம் ப்ரஹ்ம ப்ரபத்யதே ॥ ௧௭ ॥

அந்வயவ்யதிரேகாப்யாம் { அன்வயவியதிரேக யுக்திகளால்
பஞ்சகோசவிவேகத꞉ { சொல்லப்போகிறபஞ்சகோசங்களுடைய விவேகத்தினாலே
தத꞉ அந்த கோசங்களிலேயிருந்து
ஸ்வாத்மாநம் சாக்ஷியான தன்னை
உத்த்ருத்ய உயரயெடுத்துவிட்டு
பரம் ப்ரஹ்ம பரபிரம்மாக
ப்ரபத்யதே ஆகிறார்

இ-தி. வெகுகாலமாய் ஐந்துமடுவின் கயமானபள்ளத்தில் விழுந்திருந்த ஒருகிழவனைகரையேற்றியபின் அவன்வீடுபோய் சேர்வதுபோலவாம்.

அ-கை. பிரகிருதஅன்வய வியதிரேகங்களின் தன்மையைசவிஸ்தாரமாய் காண்பிவிக்கிறார்.

अभानेस्थूलदेहस्यस्वप्नेयत्भानमात्मनः।
सोन्वयोव्यतिरेकस्तत्भानेन्यावभासनम् ॥

அபாநே ஸ்தூலதேஹஸ்ய ஸ்வப்நே யத்பாநமாத்மந꞉ ।
ஸோऽந்வயோ வ்யதிரேகஸ்தத்பாநேऽந்யாவபாஸநம் ॥ ௧௮ ॥

ஸ்தூலதேஹஸ்ய ஸ்தூலதேகம்
அபாநே (ஸதி) தோன்றாத
ஸ்வப்நே சுவப்பனாவஸ்தையில்
ஆத்மந꞉ ஆத்துமாவினுடைய
யத் யாதொருஸ்வபனசாக்ஷியின்
பாநம் ஞானமுண்டோ
ஸ꞉ அதுவே
அந்வய꞉ ஆத்துமாவுக்கு அனுவிருத்தி
தத்பாநே { அந்த ஆத்துமவிளக்கமிருக்கும்போது
அந்யாவபாஸநம் { ஸ்தூலதேகத்தின்தோற்றமையே
வ்யதிரேக꞉ வியாவிருத்தி யென்றறி

வி-ம். இந்தப்பிரகரணத்தில் அன்வயத்திற்கு அனுவிருத்தியும் வியதிரேகத்திற்கு வியாவிருத்தியும், சொல்லப்படுகிறது.

இ-தி. தோட்டமே சம்பந்தமில்லையென்றால் அதிலுள்ளபலாபலன்களெப்படிசம்பந்தப்படாதோ, அப்படி இத்தேகம் நாமல்லாதபோது தேகசம்பந்தமான சகலமும் நமக்கில்லையென்றறியதக்கது இன்னும் ஒருயுக்தி, வஸ்திரமில்லாதபோது இத்தேகமிருப்பதும் இத்தேகம் இருக்கும்போதெல்லாம்அதின்மைபோலும்அறி.

அ-கை. இப்படிஸ்தூலதேகத்தை ஆன்மாவன்றென்று போதிக்கிறஅன்வயவியதிரேகத்தை காண்பிவித்து லிங்கதேகத்தையும் அப்படி காண்பிக்கிறார்

लिंगाभानेसुषुप्तौस्यादात्मनोभानमन्वयः ।
व्यतिरेकस्तुतद्भानोलिंगस्याभानमुच्यते ॥

லிங்காபாவே ஸுஷுப்தௌ ஸ்யாதாத்மனோ பானமந்வய: |
வ்யதிரேகஸ்து தத்பானே லிங்கஸ்யாபானமுச்யதே || ௩௮ ||

லிங்காபாவே	லிங்கதேகந்தோற்றாத
ஸுஷுப்தௌ	சுஷுப்தியில்
ஆத்மன:	ஆன்மாவிற்கு
பானம்	சுஷுப்திசாக்ஷியானவிளக்கமே
அந்வய: ஸ்யாத்	அநுவிருத்திருக்கிறது
தத்பானே	ஆத்துமவிளக்கமப்போதிருக்கும்போது
லிங்கஸ்ய	லிங்கதேகத்திற்கு
அபானம்	விளங்காமையே
வ்யதிரேக:	வியாவிர்த்தியென்று
உச்யதே	சொல்லப்படுகிறது

இ-தி. கண்ணுபடியில்லாதபோது முகமிருக்கிறதும் முகமிருக்கும்போதெல்லாம் அதின்மைபோலுமாம்.

அ-கை. பஞ்சகோசவிவேகத்தை ஆரம்பித்து லிங்கதேக விவேகஞ்செய்தது, பிரகிருதவிரோதமேயெனில், பிராணமய மனோமய விஞ்ஞானமயங்கள் மூன்றும்லிங்கதேகத்தில் அந்தர்ப்பாவமானதால், பிரகிருதவிரோதமில்லையென்று சொல்லுகிறார்.

இ-தி. பன்னிரண்டுமரக்கால் என்பதற்கும் ஒருகலமென்பதற்கும் பேதமில்லாததுபோலவும் ஸ்திரீபுருஷ நபும்ஸகனென்கிற மூன்றுசொல்லும் மனிதரென்கிறசொல்லுக்குள் அடங்கியிருப்பதுபோலுமென்று சொல்லுகிறார்.

तद्विवेकाद्विविक्तास्स्युःकोशाःप्राणमनोधियः ||

தத்விவேகாத்விவிக்தாஸ்ஸ்யு: கோஶா: ப்ராணமனோதிய: || ௩௯ ||

தத்விவேகாத்	அந்தலிங்கதேகவிவேகத்தினாலே
ப்ராணமனோதிய:	பிராணமயமனோமய விஞ்ஞானமயங்களென்ற
கோஶா:	கோசங்களானவை
விவிக்தா:	பிரிக்கப்பட்டவைகளாக
ஸ்யு:	ஆகின்றன

அ-கை. அது எதினாலெனில்.

ते हि तत्र गुणावस्थाभेदमात्रात्पृथक्कृताः ||

தே ஹி தத்ர குணாவஸ்தாபேதமாத்ராத் ப்ருதக்க்ருதா: || ௪௰ ||

தே, ஹி	அந்த மூன்று கோசங்களும்
தத்ர	அந்த லிங்கதேகத்தில்
குணாவஸ்தாபேதமாத்ராத்	முக்குணங்களின் பேதத்தினாலும் தொழில்களின் பேதமாத்திரத்தால்
ப்ருதக் க்ருதா:	வேறாகச்சொல்லப்படுகின்றன

இ-தி. ஒருஸ்தூலதேகத்தில் கண்டத்திற்குமேல் உத்தமமென்றும், இடுப்புவரைமத்திமமென்றும், அதற்குக்கீழ் அதமமென்றும் சொல்லப்படுவது போலவுமே.

அ-௯௧. இப்போதுகாரணசரீரவிவேக உபாயம் சொல்லுகிறார்.

सुषुप्तचभानेभानन्तुसमाधावात्मनोन्वयः ।
व्यतिरेकस्स्वात्मभाने सुषुप्तचनवभासनम् ॥

ஸுஷுப்த்யபாநே பாநந்து ஸமாதாவாத்மநோந்வய: |
வ்யதிரேகஸ்ஸ்வாத்மபாநே ஸுஷுப்த்யநவபாஸநம்|| ௪௧||

ஸுஷுப்த்யபாநே — சுஷுப்திவிளங்காத
ஸமாதௌ — சமாதியில்
ஆத்மந: — ஆன்மாவினுடைய
பாநம் து — விளக்கமே
அந்வய: — அனுவிருந்தித்திருக்கிறது
ஸ்வாத்மபாநே — ஆன்மாவினுடைய விளக்கமிருந்தும்
ஸுஷுப்த்யநவபாஸநம் து — சுஷுப்தியென்ற ஒன்றுமறியாமையில்லாமையானதே
வ்யதிரேக: — நிவர்த்தித்துப்போனது

வி-ம். இதிலொருஅனுமானம், பிரத்தியகாத்துமா கோசங்களுக்கு வேறாக யிருக்கத்தக்கவர், அவைகள் ஒன்றிலொன்றில்லாமலிருந்தும், தான் அப்படிப் போகாமல், எப்போதுமிருக்கிறபடியால் யாதொன்று போய்க்கொண்டிருந்தாலும் யாதொன்றுபோகவில்லையோ, அது அவைகளுக்குவேறு, எப்படிபுஷ்பங்களுக்கு நார்வேறாகுமோ, பசுவின்வெளுப்பு நிறம்முதலானது ஒருநிறத்தில் ஒருநிறமில்லாமல் கண்டமாயிருந்தாலும் பசுவென்றஜாதிஎல்லாநிறங்களிலும் அகண்டமாயெப்படி இருக்கிறதோ, அப்படியென்றறி.

அ-௯௨. அன்வயவியதிரேகங்களினாலே பஞ்சகோசத்திலிருந்து பிரிக்கப்பட்ட ஆத்துமாவிற்கு பிர்மத்துவம் சித்திக்குமென்று, சொன்னதற்குப்பிரமாணமாக அப்படிச்சொல்லுகிற கடவல்லிஉபநிஷத்தின் வாக்கியத்தை நிரூபிக்கிறார்

यथामुञ्जादिषीकैवमात्मायुक्त्यासमुद्धृतः ।
शरीरत्रितयाद्धीरैः परंब्रह्मैवजायते ॥

யதா முஞ்ஜாதிஷீகைவமாத்மா யுக்த்யா ஸமுத்த்ருத: |
ஶரீரத்ரிதயாத்தீரை: பரம்ப்ரஹ்மைவ ஜாயதே|| ௪௨||

முஞ்ஜாத் இஷீகா யதா — முஞ்சிப்புல்லிலிருந்து நடுவிலிருக்கிற ஆணியானது எப்படி யெடுக்கப்படுகிறதோ
ஏவம் — அப்படிப்போல இவ்விதமாக
ஶரீரத்ரிதயாத் — ஸ்தூலசூக்குமகாரணதேகத்திலிருந்து
தீரை: — சாதனமுள்ள அதிகாரிகளால்
ஆத்மா யுக்த்யா — ஆன்மானவர் அன்வயவியதிரேகயுக்தியால்
ஸமுத்த்ருத: (ஸந்) — நன்றாக கரையேற்றப்பட்டவராய்
பரம்ப்ரஹ்மைவ — பரப்பிரமமாகவே
ஜாயதே — ஆகிறார்

தா-ம். சிதானந்தரூபமான லக்ஷணம்கூட ஸ்தபிர்மங்களிரண்டிடத்திலும் சமானமென்பதே பிர்மஞானம்.

இ-தி. கிணறுதோண்டினபிறகு தோன்றுகிற ஆகாசமே எங்குமெப்பொழுதுமிருக்கிற மஹாகாசமாய் விளங்குவதுபோலவறி.

அ-கை. இதுவரையில்சொன்ன கிரந்தத்தால் சபலமான தத்துவஞானம் நிரூபிக்கப்பட்டதால் (மேல்கிரந்தம் ஆரம்பிவிக்கவேண்டுவதில்லையே) எனில் அந்தஆரம்பம் சித்திக்கும்பொருட்டுஇப்போதுசொல்லப்பட்ட அர்த்தத்தையனுசரித்து மேல்கிரந்ததாற் பரியத்தைச்சொல்லுகிறார்.

परापरात्मनोरेवंयुक्त्यासंभावितैकता ।
तत्वमस्यादिवाक्यैस्साभागत्यागेनलक्ष्यते ॥

𑌪𑌰𑌾𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌰𑍇𑌵𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑍈𑌕𑌤𑌾 ।
𑌤𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌸𑍍𑌸𑌾𑌭𑌾𑌗𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௪௩ ॥

𑌪𑌰𑌾𑌪𑌰𑌾𑌤𑍍𑌮𑌨𑍋𑌃	கூடஸ்தபிர்மங்களுக்கு	𑌸𑌾	அந்த ஏகத்வமானது
𑌏𑌵𑌂	இப்படி	𑌤𑌤𑍍𑌵𑌮𑌸𑍍𑌯𑌾𑌦𑌿𑌵𑌾𑌕𑍍𑌯𑍈𑌃	தத்துவமஸ்யாதிவாக்கியங்களால்
𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾	யுக்தியினாலே	𑌭𑌾𑌗𑌤𑍍𑌯𑌾𑌗𑍇𑌨	விட்டுவிடாத லக்ஷணையினால்
𑌏𑌕𑌤𑌾	ஏகத்துவமானது	𑌲𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇	காண்பிவிக்கப்படுகிறது
𑌸𑌂𑌭𑌾𑌵𑌿𑌤𑌾	சம்பவிக்கப்பட்டதோ		

இ-தி. யுக்தியினால்புகைவண்டி யேறப்படுத்தப்பட்ட விதமே சித்தநூல்களிலும், அப்படிபஞ்சபூதங்களினுடைய சேர்க்கையினாலேயே (வேகமாதிகளுண்டாகுமென்று சொல்லும்.)

அ-கை. (தத்துவமசியென்ற)வாக்கியார்த்த ஞானத்திற்கு(தத்) என்கிறபதம் முந்தியிருப்பதால் (தத்) என்றபதத்தின் வாச்சியார்தம் சொல்லுகிறார்.

जगतोयदुपादानंमायामादायतामसीम् ।
निमित्तंशुद्धसत्वांतामुच्यतेब्रह्मतद्गिरा ॥

𑌜𑌗𑌤𑍋𑌯𑌦𑍁𑌪𑌾𑌦𑌾𑌨𑌂𑌮𑌾𑌯𑌾𑌮𑌾𑌦𑌾𑌯𑌤𑌾𑌮𑌸𑍀𑌮𑍍 ।
𑌨𑌿𑌮𑌿𑌤𑍍𑌤𑌂𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌵𑌾𑌂𑌤𑌾𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌤𑌦𑍍𑌗𑌿𑌰𑌾 ॥ ௪௪ ॥

𑌯𑌤𑍍 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮	யாதொரு பிர்மமானது	𑌉𑌪𑌾𑌦𑌾𑌨𑌂	உபாதானகாரணமாகவும்
𑌤𑌾𑌮𑌸𑍀𑌂	தமோகுணப்பிரதானமாயிருக்கிற	𑌶𑍁𑌦𑍍𑌧𑌸𑌤𑍍𑌵𑌾𑌂	சுத்தசத்துவபிரதானமான
𑌮𑌾𑌯𑌾𑌂	மாயாசக்தியை	𑌤𑌾𑌂	அந்த மாயாசக்தியை
𑌆𑌦𑌾𑌯	கிரகித்து	(𑌆𑌦𑌾𑌯)	கிரகித்து
𑌜𑌗𑌤𑌃	ஜகத்திற்கு	(𑌜𑌗𑌤𑌃)	ஜகத்திற்கு

நிமித்தம் — நிமித்தகாரணமாயிருக்கிற
தத்ப்ரஹ்ம — அந்தப்பிர்மமைதன்னியமே
ததிதி — தத் என்ற சொல்லினால்
உச்யதே — சொல்லப்படுகிறது

இ-தி. படைகளையும் ஆஞ்ஞையுமுடையவன் அரசனென்று சொல்லப்படுவதுபோலும் தோல்(சக்கை) ரசங்களோடே கூடியதை கரும்பு என்பது போலுமறி.

அ-கை. துவம்பதவாச்சியார்த்தத்தைச் சொல்லுகிறார்.

यदामलिनसत्वान्तांकामकर्मादिदूषिताम् ।
आदत्तेतत्परंब्रह्मत्वंपदेनतदोच्यते ॥

யதாமலிநஸத்வாம்தாம்காமகர்மாதிதூஷிதாம் |
ஆதத்தேதத்பரம்ப்ரஹ்மத்வம்பதேநததோச்யதே|| ௪௫||

பரம்ப்ரஹ்ம — பரப்பிரமமானது
யதா — எப்போது
காமகர்மாதிதூஷிதாம் — ஆசையென்ற தமோகுணத்தாலும் கர்மமென்ற ரஜோகுணத்தாலும் தூஷிக்கப்பட்டு கெட்டதாயும்
மலிநஸத்வாம் — அதினால் மலினப்பட்டதாயுமிருக்கிற
தாம் — அந்த அவித்தியாசக்தியை
ஆதத்தே — கிரகிக்கிறதோ
தத் — அந்தப்பிரமமானது
த்வம்பதேந — த்வம்பதவாச்சியமாக
ததா — அப்போது
உச்யதே — சொல்லப்படுகிறது

இ-தி. மட்டைகொட்டாங்கச்சி ரசங்களோடே கூடியதேங்காய்போலும் சகதியில்கிடக்கிற வெல்லக்கட்டிபோலும் நிகிருஷ்டமானவேலைக்கு ஒப்புக்கொண்ட கூலிக்காரன்போலுமறி.

அ-கை. இப்படி தத்பதத்துவம் பதார்த்தங்களைச் சொல்லி வாக்கியார்த்தத்தைச்சொல்லுகிறார்.

त्रितयीमपितामुक्त्वापरस्परविरोधिनीम् ।
अखण्डंसच्चिदानन्दंमहावाक्येनलक्ष्यते ॥

த்ரிதயீமபிதாமுக்த்வாபரஸ்பரவிரோதிநீம் |
அகண்டம்ஸச்சிதாநந்தம்மஹாவாக்யேநலக்ஷ்யதே|| ௪௬||

பரஸ்பரவிரோதிநீம் — ஒன்றுக்கொன்று விரோதியாயும் [கிற
த்ரிதயீமபி — முக்குணங்களுமாயிருக்
தாம் — அந்த மூலப்பிரகிருதியை
முக்த்வா — விட்டு [காவாக்கியத்தினாலே
மஹாவாக்யேந — தத்துவமஸியென்ற ம
அகண்டம் — தேசகால வஸ்துக்களால் கண்டிக்கப்படாததாயும்

ஸச்சிதாநந்த: } சச்சிதானந்தமாயு மிருக்கிற (பிர்மமானது) | லக்ஷ்யதே { லக்ஷணையினால் போதிக்கப் படுகிறது

இ-தி. கரும்பிலும் தேங்காயிலுமிருக்கிற அரசங்களைதள்ளி ரசமான இரண்டுபாலையும் ஒன்ருய் சேர்ப்பதுபோலுமறி.

அ-கை. இப்படிவிட்டுவிடாத லக்ஷணையினால் வாக்யார்த்தஞான மெங்கேபார்க்கப்பட்டதெனில்.

सोयमित्यादिवाक्येषुविरोधात्तदिदन्तयोः ।
त्यागेनभागयोरेकआश्रयोलक्ष्यतेयथा ॥

ஸோயமித்யாதிவாக்யேஷுவிரோதாத்ததிதந்தயோ: |
த்யாகேநபாகயோரேகஆச்ரயோலக்ஷ்யதேயதா || ௪௭ ||

ஸோயம் இத்யாதிவாக்யேஷு — சோயம் தேவதத்தனென்கிற இதுமுதலான வாக்கியங்களில்

ததிதந்தயோ: } அந்த இந்த தேசகாலாதிகளுக்கு
விரோதாத் — விரோதமாயிருப்பதினாலே
பாகயோ: — அந்த விருத்தாம்சங்களின்
த்யாகேந — பரித்தியாகத்தினால்

ஏக: ஆச்ரய: { விருத்த மன்னியிலிருக்கிற இரண்டுக்குமாதாரமான தேவதத்தன் ஒருவனே
யதா — எப்படி
லக்ஷ்யதே — காண்பிக்கப்படுகிருனே

இ-தி. அந்தராஜனே இந்தபரிசாரகனென்ற சொல்லில் விருத்தமானபடைகளையும் ஆஞ்ஞையும் கரித்துணியையும் கரண்டியையும்விட்டு ஆளைஒருவனைக்காட்டுவதுபோலவறி.

அ-கை. இப்படி திருஷ்டாந்தம்சொல்லி தார்ஷ்டாந்தம்சொல்லுகிருர்.

मायाविद्येविहायैवमुपाधीपरजीवयोः ।
अखण्डंसच्चिदानन्दंपरंब्रह्मैवलक्ष्यते ॥

மாயாவித்யேவிஹாயைவமுபாதீபரஜீவயோ: |
அகண்டம்ஸச்சிதாநந்தம்பரம்ப்ரஹ்மைவலக்ஷ்யதே || ௪௮ ||

பரஜீவயோ: } ஈசுவரத்துவத்திற்கும் ஜீவத்துவத்திற்கும்
உபாதீ — உபாதிகளாயிருக்கிற
மாயாவித்யே — மாயாவித்தைகளை
விஹாய ஏவ — தள்ளித்தானே

அகண்டம் — அகண்டமாயும்
ஸச்சிதாநந்தம் — சச்சிதானந்தமாயும்
பரம் — சிரேஷ்டமாயுமிருக்கிற
ப்ரஹ்ம ஏவ — பிர்மமே
லக்ஷ்யதே — லக்ஷணையினாலேபோதிக்கப்படுகிறது

இ-தி. மலைபோலேயும் பூனைகுட்டிபோலேயும், எடுத்த வடிவத்தைவிட்ட அனுமார், ஒருவருகவேவிளங்கினதுபோலவறி.

அ-கை. மஹாவாக்கியத்திஞல் லக்ஷிப்பிக்கப்படுகிறவஸ்து, சவிகற்பமா நிர்விகற்பமாவென்று விகற்பிவித்து பிரதமபக்ஷத்தில் பூர்வபக்ஷி (தோஷம் சொல்லுகிருன்.)

सविकल्पस्यलक्ष्यत्वेलक्ष्यस्यस्यादवस्तुता ॥

ஸவிகல்பஸ்யலக்ஷ்யத்வேலக்ஷ்யஸ்யஸ்யாதவஸ்துதா ॥ ௬௯ ॥

ஸவிகல்பஸ்ய	ஜாத்யாதிபேதங்களோடே கூடியதுசவிகற்பம் (அது)	லக்ஷ்யஸ்ய	அந்த லக்ஷியத்திற்கு
லக்ஷ்யத்வே (ஸதி)	மஹாவாக்கியத்திஞல் லக்ஷிப்பிக்கப்படுமாஞல்	அவஸ்துதா	மித்தியாத்துவமானது
		ஸ்யாத்	உண்டாய்விடும் (ஆகையால் முதலாவதுபக்ஷங்கூடாது

இ-தி. சொப்பனத்தில் கற்பிதமான வஸ்துக்களைப்போலபொய்யாய்விடும்

அ-கை. இரண்டாவதுபக்ஷத்திலும் அவன்தோஷம்சொல்லுகிருன்.

निर्विकल्पस्यलक्ष्यत्वंनदृष्टंनचसंभवी ॥

நிர்விகல்பஸ்யலக்ஷ்யத்வம்நத்ருஷ்டம்நசஸம்பவீ ॥ ௬௯ற ॥

நிர்விகல்பஸ்ய	நாமஜாத்தியாதிரகித நிர்விகற்பத்திற்கு	ந த்ருஷ்டம்	காணப்படவில்லை
லக்ஷ்யத்வம்	லக்ஷியமாயிருத்தல்	ந ச ஸம்பவீ	ஒருக்காலும் சம்பவிக்கமாட்டாது

இ-தி. சுஷுப்தியில் நிர்விகற்பமான ஸ்வபாவம் ஒருவராலும் காணப்படாததுபோலவரும்.

அ-கை. சித்தாந்திசொல்லுகிருர் நீகேட்டசங்கையிலேயே, அதற்குத்தரமிருப்பதாலிந்த ஆக்ஷேபம்செய்யக் கூடாதென்று, விகற்பபூர்வகமாக தோஷம்சொல்லுகிருர்.

विकल्पोनिर्विकल्पस्यसविकल्पस्यवाभवेत् ।
आद्येव्याहतिरन्यत्रानवस्थात्माश्रयादयः ॥

விகல்போநிர்விகல்பஸ்யஸவிகல்பஸ்யவாபவேத் ।
ஆத்யேவ்யாஹதிரந்யத்ராநவஸ்தாத்மாச்ரயாதய: ॥ ௭௦ற ॥

நிர்விகல்பஸ்ய	நிர்விகற்பவஸ்துவைக் குறித்தா	ஆத்யே	நிர்விகற்பமென்கிறமுதலாவதுபக்ஷத்தில்
ஸவிகல்பஸ்ய. வா	சவிகர்பத்தைக்குறித்தா	வ்யாஹதி:	உன்ஞலேயேஅதுஆக்ஷேபிக்கப்பட்டிருக்கிறது
விகல்பம் பவேத்	நீ செய்த விகற்பமானதுபவிக்கக்கூடியது	அந்யத்ர	சவிகற்பமென்கிறஇரண்டாவதுபக்ஷத்திலேயோவென்ருல்

𑌅𑌨𑌵𑌸𑍍𑌥𑌾𑌤𑍍𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌾𑌦𑌯𑌃 அனவஸ்தை என்ன, ஆத்துமாசிரயமென்ன, இவைமுதலான தோஷங்களெல்லாம் உண்டாகின்றன.

வி-ம். அதுயெப்படியெனில், சவிகற்பத்தைக்குறித்து விகற்பிக்கும்பக்ஷத்தில், சவிகற்பமென்னும்போது விகற்பத்தோடே கூடியதல்லவா, இதிலிருக்கிறமூன்றும் வேற்றுமையோடேகூடியிருக்கிற விகற்பத்தினாலும், முதலாவதுவேற்றுமையோடே கூடியிருக்கிற, விகற்பத்தினாலும், ஒரேவிகற்பம்சொல்லப்படுகிறதா, அல்லது இரண்டா, ஒன்றேயென்றால் விகற்பமாகியதான் ஒன்றுதானே, விகற்பாசிரயவிசேஷணமாக இருக்கையால், ஆசிரயமாயிருக்கிறது. அதை ஆசிரதமான விகற்பமென்றால், அப்போது ஆன்மாசிரயதோஷம்வரும். இரண்டென்றால் அப்போது மூன்றும்வேற்றுமையால் சொல்லப்படுகிறவிகற்பமும் சவிகற்பரூபமாகையால், அதினாசிரயமான விகற்பமும் சவிகற்பமானதால், அதற்குவிசேஷணபூதமான விகற்பமானதுமுதலாவது வேற்றுமையால் சொல்லப்படுகிறவிகற்பமா, அல்லது அந்தஇரண்டுகளுக்குமன்னியமா, முதலாவதான மூன்றும்வேற்றுமையால், சொல்லப்பட்ட விகற்பமென்னும்பக்ஷத்தில், அன்னியோன்னியாசிரயதோஷம் வருகிறது, இரண்டாவதில் தர்மவிசேஷணீபூதமானவிகற்பமானது முதலாவதுவேற்றுமையால், சொல்லப்படுகிறவிகற்பமா, அல்லது அதுவேறு, முதலில் சக்கிரகாபத்திதோஷம்வரும், இரண்டாவதில் அதற்கும்வேறு, அதற்கும்வேறென்று அனவஸ்தாதோஷம்வரும்.

அ-கை. இப்படிச்சொன்னதூஷணம் இவிடத்தில்மாத்திரமன்று பின்னையோவென்றால், எல்லாவிடங்களிலும் இவ்விதவிகற்பபூர்வகதூஷணம்வருமென்று சொல்லுகிறார்.

इदंगुणक्रियाजातिद्रव्यसंबन्धवस्तुषु ।
समन्तेनस्वरूपस्यसर्वमेतदितीष्यताम् ॥

𑌇𑌦𑌂𑌗𑍁𑌣𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌜𑌾𑌤𑌿𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧𑌵𑌸𑍍𑌤𑍁𑌷𑍁 ।
𑌸𑌮𑌂𑌤𑍇𑌨𑌸𑍍𑌵𑌰𑌊𑌪𑌸𑍍𑌯𑌸𑌰𑍍𑌵𑌮𑍇𑌤𑌦𑌿𑌤𑌿𑌷𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ॥ ௫௧ ॥

𑌇𑌦𑌂 இந்த தூஷணமானது

𑌗𑍁𑌣 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾 𑌜𑌾𑌤𑌿 𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌸𑌂𑌬𑌨𑍍𑌧 𑌵𑌸𑍍𑌤𑍁𑌷𑍁 குணமானது நிற்குணத்திலா அல்லது குணத்திலா கிரியையானது கிரியையற்றதிலா அல்லது கிரியையிலா, ஜாதியானது மப்படியே, திரிவியமானது மப்படியே, சம்பந்தவஸ்துவுமப்படியே ஊகிக்கத்தக்கது.

𑌸𑌮𑌂 𑌤𑍇𑌨 சமானமாகையால் | 𑌏𑌤𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌂 இந்த சமஸ்தமும்

ஸ்வரூபே ஏவ இதி } அந்தந்தகுணாதிகளின் சுவரூபத்திற்கென்று | இஷ்யதாம் அங்கீகரிக்கத்தக்கது

வி-ம். இதில் யென்னதோஷமென்றால், குணாசிதமென்ற முதலாவதில்; குணமில்லவேயில்லையென்ற, தோஷமிருக்கிறது, இரண்டாவதில்ஆன்மாசிரயம்முதலானதோஷமிருக்கிறது.

ச-கை. இதுஅசத்தான சமாதானமானால், சத்தான சமாதான மெப்படியென்று சங்கித்ததற்கு பதில்சொல்லுகிறார். ஆகையாலிப்படிச்செய்கிற விகற்பமானது அசங்கதமானதால் இந்த குணாதிகள் சமஸ்தமும் அந்தந்த வஸ்துவின் சுவரூபத்திலேயே இருக்கின்றனவென்றறி.

அ-கை. மற்றவிடங்களிலு மிப்போதுநீர்சொன்னபடி இருக்கட்டும்பிரகிருதத்தில் என்னஆயிற்றெனில்.

विकल्पतद्भावाभ्यामसंस्पृष्टात्मवस्तुनि ।
विकल्पितत्वलक्ष्यत्वसंबन्धाद्यास्तुकल्पिताः ॥

விகல்பதத³பா⁴வாப்⁴யாமஸம்ஸ்ப்ருஷ்டாத்மவஸ்துநி ।
விகல்பிதத்வலக்ஷ்யத்வஸம்ப³ந்தா⁴த்³யாஸ்துகல்பிதா꞉ ॥ ௩௨ ॥

விகல்பதத³பா⁴வாப்⁴யாம் — விகற்பமென்ன விகற்பமற்ற தன்மையென்ன இந்த இரண்டினாலும்

அஸம்ஸ்ப்ருஷ்டாத்மவஸ்துநி — சம்பந்தப்படாத பராமாத்துமவஸ்துவில்

விகல்பிதத்வலக்ஷ்யத்வஸம்ப³ந்தா⁴த்³யா꞉ — விகற்பித்தன்மை என்ன, லக்ஷியத்தன்மையென்ன, சம்பந்தமுதலானவைகளென்ன

கல்பிதா꞉. து — இவைகள் கற்பிதங்களே

வி-ம். அசங்கமான ஆன்மாவில், நீகேட்டதான சகலமும் கற்பிதமென்றறி, அது எப்படியென்றால், இந்தஆன்மா, சவிகற்பவிஷயமா, நிர்விகற்பவிஷயமா, லக்ஷியமா, அலக்ஷியமா, சம்யோகசம்பந்தமா, சமவாயசம்பந்தமா, ஆதி சப்தத்தால்திரவ்யாதிகளும் கிரகிக்கப்படுகின்றன அதில்திரவ்யமென்பது குணங்களுக்கு, ஆசிரமாயிருப்பது, இதைநார்கிகாள், சமவாயகாரணம் திரவ்யமென்பார்கள், கர்மமன்றியில் ஜாதிமாத்திரத்தை ஆசிரயித்திருக்கப்பட்டது குணமெனப்படும், நித்தியம் ஏகம் அனேகவிர்த்திசாமான்னியமென்று காண்பிவிக்கப்படுகிறது ஜாதியெனப்படும் சம்யோக வியோகங்களில் அசம்வாய காரணம் கர்மமென்று கிரியையானது காண்பிவிக்கப்பட்டது இப்போது சொன்னசகலமும் சுவரூபத்தில் கற்பிதங்களென்றறி.

இ-தி. சாக்ஷியான தன்னிடத்தில் நித்திரைசத்தியால் அனந்த விதமான சொப்பனம்கற்பிவிக்கப் படுவதுபோலும், ஆகாசத்தில் நீலாதிவர்ணம்கற்பிதம்போலவுமிது, (து) என்றசொல்கற்பிதமென்றதை யுறுதிப்படுத்துகிறது.

அ-கை. இதுவரையில் சொல்லிவந்தகிரந்தத்தினால், என்னமுடிவாயிற்றதெனில், அதைச்சொல்லுகிறார்.

इत्थंवाक्यैस्तदर्थानुसन्धानंश्रवणंभवेत् ।
युक्त्यासंभावितत्वानुसन्धानंमननंतुतत् ॥

இத்தம்வாக்யைஸ்ததர்த்தானுஸந்தானம்ச்ரவணம்பவேத் ।
யுக்த்யாஸம்பாவிதத்வானுஸந்தானம்மநநந்துதத் ॥ ௫௧ ॥

இத்தம் இப்படி
வாக்யை: மகாவாக்கியங்களினாலே
தததர்த்தானுஸந்தானம் அந்த பிர்மத்தினுடைய சச்சிதானந்தாதி அர்த்தத்தினுடைய அனுசந்தானமே
ச்ரவணம்பவேத் சிரவணமாகஆகிறது
யுக்த்யா யுக்தியினாலே
ஸம்பாவிதத்வானுஸந்தானம் அந்த பிர்மத்துவம் சம்பவிக்கும்படியான அனுசந்தானம் யாதோ
தத், மநநம் அது மனனமென்று
து. சொல்லப்படும்

வி-ம். இப்படிஜகத்துபாதான காரணமென்று ஆரம்பவித்துச்சொன்னபிரகாரத்தால் மஹாவாக்கியங்களினாலேயும் அந்தவாக்கியங்களின் அர்த்தமானஜீவபிர்மையிக்கரூபமான சுருதிசம்பந்தானுசந்தானமே சிரவணமெனப்படும், சப்தஸ்பரிசாதிகள் வேத்யங்களென்றும் அறிவே அவஸ்தாத்திரயத்தில் நித்தியமாயிருக்கிறதென்றும் அன்வயவியதிரேகங்களால் பஞ்சகோசவிவேகத்தால் முஞ்சிப்புல்லைத்தள்ளி நடுவிலிருக்கிற ஆணியை எடுக்கிறதுபோலகோசங்களைத்தள்ளி, தன்னைப்பரபிர்மமாக காணும்படியாய்ச் சொன்ன ஆலோசனை ரூபமானயுக்திசம்பந்த ஞானமேமனன மானதால் இந்தமனனும் ஆத்துமசுவரூபம் நானென்றுசந்தேகமன்றியில் விளங்குவதைசெய்யதக்கது

அ-கை. இப்போதுநிதித்தியாசனம் சொல்லுகிறார் ✓

ताभ्यांनिर्विचिकित्सेर्थेचेतसस्थापितस्ययत् ।
एकतानत्वमेतद्धिनिदिध्यासनमुच्यते ॥

தாப்யாம்நிர்விசிகித்ஸேர்த்தேசேதஸஸ்தாபிதஸ்யயத் ।
ஏகதாநத்வமேதத்திநிதித்யாஸநமுச்யதே ॥ ௫௪ ॥

தாப்யாம் அந்தசிரவணமனனங்களால்
நிர்விசிகித்ஸே நிச்சயமாயிருக்கிற
அர்த்தே { சாக்ஷியாயிருக்கிறதன்னிடத்தில்
ஸ்தாபிதஸ்ய வைக்கப்பட்டிருக்கிற
சேதஸ: மனதிற்கு
யத் யாதொரு
ஏகதாநத்வம் { ஏகாகாரவிருத்திப்பிரவாகமுண்டாவதான
ஏதத்தி இதுவே
நிதித்யாஸநம் { நிதித்தியாசனமென்று (யோகசாஸ்திரத்தில்)
உச்யதே சொல்லப்படுகிறது

இ-தி. வெல்லத்தின்பாகானது முடிவில் வெல்லக்கட்டியாவதுபோலவாம்.

அ-கை. அந்தநிதித்தியாசனத்தின்பரிபாகமானசமாதியைச்சொல்லுகிறார்.

ध्यातृध्यानेपरित्यज्यक्रमाद्ध्येयैकगोचरम्।
निवातदीपवच्चित्तंसमाधिरभिधीयते ॥

த்யாத்ருத்யாநேபரித்யஜ்யக்ரமாத்த்யேயைககோசரம் ।
நிவாததீபவச்சித்தம்ஸமாதிரபிதீயதே ॥ ௫௫ ॥

த்யாத்ரு த்யாநே — தியானம்பண்ணுகிறவன் தியானம் இரண்டையும்
பரித்யஜ்ய — தள்ளி
க்ரமாத் — கிரமமாக
நிவாத தீபவத் — காற்றில்லாதவிடத்தில் வைத்த தீபம்போல்
த்யேயைக கோசரம் — தியானிக்கப்படுகிறவஸ்துமாத்திரமான
சித்தம் — சித்தமே
ஸமாதி: — நிருபுடியற்றசமாதியென்று
அபிதீயதே — சொல்லப்படுகிறது

இ-தி. வேடர்களோடேசேர்ந்து வேடனென்றுநினைத்திருந்த ராஜகுமாரன்ஜோஸ்யர்மூலமாய் நீயிராஜகுமாரனென்று சொன்னலக்ஷணத்தைக்கேள்விப்பட்டு, நம்பினதேசிரவணம், அதையுக்தியுடன் மனனத்தினால் தான்ராஜாவென்று ஒத்துப்பார்த்துக்கொண்டதேமனனம், முன்பழக்கத்தால் நான் வேடனென்றுவருவதை நான்அரசனென்று ததாகாரவிர்த்தியா யிருப்பதே நிதித்தியாசனம், ராஜனென்ற நினைப்புமில்லயித்து ராஜனாயிருப்பதேசமாதி.

அ-கை. சமாதியில்விருத்திகள் காணப்படாமையால் பிர்மகோசரமான சித்தமிருக்கிறதாக நிச்சயம்செய்யக்கூடாதே யெனில், விருத்தியிருப்பது அநுமானத்தால் அறியத்தக்கதா யிருப்பதால் நீஆக்ஷேபித்தது கூடாதென்றுசொல்லுகிறார்

वृत्तयस्तुतदानीमज्ञाताअप्यात्मगोचराः।
स्मरणादनुमीयन्तेव्युत्थितस्यसमुद्धितात् ॥

வ்ருத்தயஸ்துததாநீமஜ்ஞாதாஅப்யாத்மகோசரா: ।
ஸ்மரணாதநுமீயந்தேவ்யுத்திதஸ்யஸமுத்திதாத் ॥ ௫௬ ॥

ததாநீம் — அந்தசமாதிகாலத்தில்
ஆத்மகோசரா: — ஆன்மாவை விஷயீகரித்துண்டாகிற
வ்ருத்தய: து — விருத்திகளானவை
அஜ்ஞாதா: அபி — அறியப்படாதவைகளாக இருந்தாலும்
வ்யுத்திதஸ்ய — சமாதியிலிருந்து எழுந்தவனுக்கு
ஸமுத்திதாத் — இதுவரையில் நிர்விகற்பமாய் சுகமாக சமாதியிலிருந்தேனென் றுண்டாகிற
ஸ்மரணாத் — ஸ்மரணத்தினாலே அக்காலத்திலேவிருத்திஇருந்ததாகவே
அநுமீயந்தே — அனுமானம் பண்ணப்படுகின்றன

இ-தி. தூங்கிவிழித்தவன் சுஷுப்திசுகத்தை ஸ்மரிப்பதுபோலும், ஒரு சன்னியாசிமுன்னனுபவித்தஸ்திரீயின் சுகத்தைநினைந்துப் புலம்பினனென்றறி, எதுவெதுஸ்மரிக்கப்படுகிறதோ அதது அனுபவிக்கப்பட்டதென்பது லோகத்தில்பிரசித்தமாயிருப்பதைப்பார்த்துக்கொள்.

அ-கை. இப்படியாவதாலொருசக்தியை அங்கீகரித்தால்த்வைதம் வந்துவிட்டதேயெனில், யாதொருகாரணத்தினால் மாயைக்குசத்தாவாய் சத்தில்லையோ அந்தகாரணத்தினாலில்லையென்று சொல்லுகிறார்.

अतएवद्वितीयत्वंशून्यवन्नहिगण्यते ॥

அதஏவத்விதீயத்வம்சூந்யவந்நஹிகண்யதே ॥ ௫௧ ॥

அத:. ஏவ ஆகையினாலேதானே | த்விதீயத்வம் { அப்படி இதுவுமிரண்டாயிருத்தல் தன்றோ
சூந்யவத் { சூனியமெப்படி சத்துக்கு எதிரியாகமாட்டாதோ | நகண்யதே.ஹி என்னப்படமாட்டா

இ-தி. நித்திராசக்திதனக்குயெதிரியாக ஆகமாட்டாததுபோலவாம்.

அ-கை. பொய்யாயிருக்கிறசக்தியால் சத்துக்குத்விதத்வம் வாராதென்பதிற்குதிருஷ்டாந்தம் சொல்லுகிறார்.

नलोकेचैत्रतच्छक्त्योर्जीवितंलिख्यतेपृथक् ॥

நலோகேசைத்ரதச்சக்த்யோர்ஜீவிதம்த்ருஶ்யதேவ்யய: ॥

லோகே உலகத்தில்	வ்யய: . ஜீவிதம் வேறான தன்மை
சைத்ரதச்சக்த்யோ: ஓவியமெழுதுவோனுக்கும் அவன் சக்திக்கும்	ந.த்ருஶ்யதே காணப்படாததுபோலவறி

ச-கை. அதிகசக்திஉள்ளவிடத்தில்சக்திக்குஜீவிதமிருக்குமெனில்.

शक्त्याधिक्येजीवितंचेद्वर्धतेतत्रवृद्धिकृत् ।
नशक्तिःकिन्तुतत्कार्यंयुद्धकृष्यादिकंतथा ॥
सर्वथाशक्तिमात्रस्यनपृथग्गणनाक्वचित् ॥

ஶக்த்யாதிக்யேஜீவிதம்சேத்வர்த்ததேதத்ரவ்ருத்திக்ருத் ।
நஶக்தி:கிந்துதத்கார்யம்யுத்தக்ருஷ்யாதிகம்ததா ॥ ௫௨ ॥
ஸர்வதாஶக்திமாத்ரஸ்யநப்ருதக்கணநாக்வசித் ॥ ௫௩ ॥

ஶக்த்யாதிக்யே அதிகசக்திஉள்ளவிடத்தில்	யுத்தக்ருஷ்யாதிகம் யுத்தம் உழவு முதலானதைச்செய்கிறது
ஜீவிதம். ஜீவிதவிருத்தியை	ததா அப்படி
வர்த்ததே.சேத் செய்யுமெனில்	ஸர்வதா சகலவிதத்திலும்
தத்ர அந்தவிடத்தில்	ஶக்திமாத்ரஸ்ய சக்திமாத்திரத்திற்கு
வ்ருத்திக்ருத் விருத்தியைச்செய்கிறது	ப்ருதக்கணநா சக்தனைவிட்டு வேறான இருப்பு
ஶக்தி:.ந சக்தியன்று	க்வசித். ந ஓரிடத்திலுமில்லை
கிம்.து பின்னேயோவென்றால்	
தத்கார்யம் அந்த சக்தியின் காரியமானது	

ச-கை. சத்துக்குசக்தியால்த்வைதம்வேண்டாம் சக்திகாரியத்தால்த்வைதம்வரட்டுமெனில்.

शक्तिकार्यन्तुनेवास्तिद्वितीयंशक्यतेकथम् ॥
ஶக்திகார்யந்துநைவாஸ்தித்விதீயம்ஶக்யதேகதம் ॥ ௫௪ ॥

ஶக்திகார்யம்.து சக்தியின்காரியம்	த்விதீயம் இரண்டாவதை
ந.ஏவ.அஸ்தி அத்தியந்தமில்லவேயில்லே	கதம்.ஶக்யதே எப்படிஉண்டுபண்ணும்

இ-தி. மகோதரமுள்ளவளுக்கேபிள்ளையில்லையென்றால் அதின்காரியமான ஜலஸ்பரிசாதியினால்அவளுக்குப் பிள்ளையில்லையென்பதில், கேட்கவேண்டாததுபோலசக்தியினாலேயே ஆத்துமாவுக்குதுவைதத்வம்வாராமலிருக்கும்போது அதின்காரியத்தால் த்வைதத்வம்எப்படிவரும், இன்னம்நித்திராசக்தியேத்வைதத்தையுண்டுபண்ணாதபோது, அதின்காரியமானசொப்பனம் தனக்கெதிரியாகஎப்படியாகும்.

அ-கை. சத்தின்சக்தியானது சத்துள்ளவிடமெல்லாம் இருக்கிறதாஅல்லது ஏகதேசத்திலிருக்கிறதாவென்று ஆக்ஷேபித்துமுக்தாளாலேஅடையந்தக்

கதான, நிர்மாயபிரமத்திற்கு அபாவம்வருவதால்முதல்பக்ஷங்கூடாது நிறம்ச த்துக்குவிரோதம்வருவதால், ஏகதேசத்திலிருக்குமென்பதுங் கூடாதெனில், முதலாவதுபக்ஷத்தைத்தள்ளி திருஷ்டாந்தத்துடன் இரண்டாவதுபக்ஷத்தி ற்குபரிகாரஞ்சொல்லுகிறார்.

नकृत्स्नब्रह्मवृत्तिसाशक्तिःकिंत्वेकदेशभाक् ।
घटशक्तिर्यथाभूमौस्निग्धमृद्येववर्तते ॥

நக்ருத்ஸ்நப்ரஹ்மவ்ருத்திஸாஶக்தி:கிம்த்வேகதேஶபாக் ।
கடஶக்திர்யதாபூமௌஸ்நிக்தம்ருத்யேவவர்த்ததே ॥ ௫௪ ॥

பூமௌ பூமியிலிருக்கிற
கடஶக்தி: கடத்தை யுண்டுபண்ணு கிறசக்தியானது
ஸ்நிக்தம்ருதிஏவ நல்லமண்ணில்மாத்திரம்
யதா வர்த்ததே எப்படி யிருக்கிறதோ அப்படி

ஸா ஶக்தி: அந்தசத்தின்சக்தியானது
க்ருத்ஸ்ந ப்ரஹ்மவ்ருத்தி: ந பிரமம் முழுமையும் வியாபித்திருக்கவில்லை
கிம் து பின்னையோவென்றால்
ஏகதேஶபாக் ஏகதேசத்தை யடைந்திருக்கிறது

அ-கை. இதற்குப்பிரமாணஞ்சொல்லுகிறார்.

पादोस्यसर्वाभूतानित्रिपादस्तिस्वयंप्रभः ।
इत्येकदेशवृत्तित्वामायायावदतिश्रुतिः ॥

பாதோஸ்யஸர்வாபூதாநித்ரிபாதஸ்திஸ்வயம்ப்ரப: ।
இத்யேகதேஶவ்ருத்தித்வம்மாயாயாவததிஶ்ருதி: ॥ ௫௫ ॥

ஸர்வாபூதாநி சகலபூதங்களும்
அஸ்ய பாத: இந்தஆத்துமாவினுடைய ஒரு பாதமாயிருக்கிறது
ஸ்வயம்ப்ரப: ஸ்வயம்பிரகாசமான சத்து
த்ரிபாத் அஸ்தி மூன்றுபாதமாயிருக்கிறதென்றும்
இதி

மாயாயா: மாயைக்கு
ஏகதேஶவ்ருத்தித்வம் ஏகதேசமாயிருக்கும் தன்மையை
ஶ்ருதி: வேதமானது
வததி சொல்லுகிறது

அ-கை. இப்படிஸ்மிருதியுஞ்சொல்லுகிறது.

विष्टभ्याहमिदंकृत्स्नमेकांशेनस्थितोजगत् ।
इतिकृष्णोर्जुनायाहजगतस्त्वेकदेशताम् ॥

விஷ்டப்யாஹமிதம்க்ருத்ஸ்நமேகாம்ஶேநஸ்திதோஜகத் ।
இதிக்ருஷ்ணோர்ஜுநாயாஹஜகதஸ்த்வேகதேஶதாம் ॥ ௫௬ ॥

க்ருத்ஸ்நம் சமஸ்தமான
இதம் ஜகத் இந்த ஜகத்தை
ஏகாம்ஶேந விஷ்டப்ய ஒரு அம்சத்திலே வியாபித்து

அஹம் ஸ்தித: இதி நானிருக்கிறேனென்று
க்ருஷ்ண: கிருஷ்ணபகவானும்

அர்ஜுனாய அர்ஜுனன்பொருட்டு ஜகத: ஜகத்துக்கு	ஏகதேஶதாம் ஏகதேசமாயிருத்தலை ஆஹ சொன்னார்

இ-தி. ஆகாசத்தில்நீலாதிவர்ணம் ஏகதேசமாய்தோற்றுவதுபோலவாம்.

அ-கை. இப்போதுமாயாரகிதமானஸ்வ ரூபமிருப்பதில் இன்னும்பிரமாணஞ்சொல்லுகிறார்.

सभूमिंविश्वतोभूत्वाह्यत्यतिष्टद्दशांगुलम् ।
विकारावर्तिचात्रास्तिश्रुतिसूत्रकृतोवचः ॥

ஸபூமிம்விஶ்வதோபூத்வாஹ்யத்யதிஷ்டத்தஶாங்குலம் ।
விகாராவர்திசாத்ராஸ்திஶ்ருதிஸூத்ரக்ருதோர்வச: ॥ ௧எ ॥

ஸ: அந்த ஆத்துமாவானவர் விஶ்வத: (நாலுவிக்கிலும்) பூமிம் ஜகத்தை வ்ருத்வா வியாபித்து தஶாங்குலம் பத்துப்பங்கு அத்யதிஷ்டத் ஹி அதிக்கிரமித்து இருக்கிறாரன்றோ	விகாராவர்தி ச { விகாரத்தை அதிக்கிரமித்திருக்கிறாரென்றும் அத்ர இந்த விஷயத்தில் ஶ்ருதிஸூத்ரக்ருதோ: சுருதியினுடையவும்சூத்திரக்காரருடையவும் வச: அஸ்தி ஆஞ்ஞையிருக்கிறது

அ-கை. அப்போதுஇந்தசுருதிகளால், நிரம்சத்திலிந்தசக்திஏகதேசமாயிருந்தால், அம்சகற்பனைவருமென்ற விரோதத்திற்கு யென்னபரிகாரமாயிற்றெனில், இப்படிசொன்னசுருதியின் அபிப்பிராயத்தைச் சொல்லுகிறார்.

निरंशेप्यंशमारोप्यकृत्स्नोंशेवेतिप्रच्छतः ।
तत्भाषयोत्तरंब्रूतेश्रुतिश्श्रोतृहितैषिणी ॥

நிரம்ஶேப்யம்ஶமாரோப்யக்ருத்ஸ்நோம்ஶேவேதிப்ருச்சத: ।
தத்பாஷயோத்தரம்ப்ரூதேஶ்ருதிஶ்ஶ்ரோத்ருஹிதைஷிணீ ॥ ௧அ ॥

நிரம்ஶேஅபி நிரம்சவஸ்துவிலும் அம்ஶம் ஆரோப்ய { அம்சத்தை கற்பித்து க்ருத்ஸ்நோம்ஶோ வா சக்தி முழுமையுமிருக்கிறதா ஏகதேசமாயிருக்கிறதாவென்று	ப்ருச்சத: கேட்டவனுக்கு ஶ்ரோத்ருஹிதைஷிணீ { கேட்கிறவனுக்குஹிதத்தைச்சொல்லுகிற ஶ்ருதி: வேதமானது தத்பாஷயா அவன் வார்த்தையினாலே உத்தரம் சமாதானத்தை ப்ரூதே சொல்லுகிறது

இ-தி: தாயினிடத்தில்குழந்தைவந்து அம்மாஆகாசபுருஷன் கட்டெரும்புவாஹனத்திலேறிவாருனமே, அந்தஎரும்புஅந்தப்புருஷனளவுள்ளதா சிறிதாவென்றுகேட்டதை, அவள் அனுசரித்து, சிறிதென்றுசொல்லுவதுபோலும்

குழந்தைக்குதாய்ஸ்வாமிவந்துசாதத்தை சாப்பிடுமென்றுசொன்னதற்குகுழந்தை அவ்வளவுசாதத்தையும் சாப்பிடுமோ,யெனக்கு சாப்பிடச்சிறிதும்மீதம் வைக்குமாவென்று, சொன்னதுபோலுமறி.

அ-கை. யாதொருகாரணத்தால் ஜகத்துண்டாகிறநிமித்தம் சத்தில்சக்தியைச்சாதித்தாரோ, அதுசெய்கிறகற்பனையை இப்போது திருஷ்டாந்தமூலமாய்பரிகரிக்கிறார்.

सत्तत्वमाश्रिताशक्तिःकल्पयेत्सतिविक्रियाः ।
वर्णाभित्तिगताभित्तौचित्रंनानाविधंयथा ॥

ஸத்தத்வமாஶ்ரிதாஶக்தி:கல்பயேத்ஸதிவிக்ரியா: ।
வர்ணாபித்திகதாபித்தௌசித்ரம்நாநாவிதம்யதா ॥ ௫௬ ॥

ஸத்த்வம்	சத்வஸ்துவை	பித்திகதா:	சுவரை ஆசிரியித்த
ஆஶ்ரிதா ஶக்தி:	ஆசிரியித்திருக்கிற சக்தியானது	வர்ணா:	வர்ணங்களானவை
ஸதி விக்ரியா:	சத்தில் நானாவிதமான விகாரத்தை	பித்தௌ	சுவரில்
கல்பயேத்	கற்பிக்கிறது	நாநாவிதம்	நானாவிதமான
		சித்ரம்	சித்திரத்தை
		யதா	எப்படி கற்பிக்கிறதோ

அ-கை. அதில்முதலில்உண்டாகிற காரியத்தையும்அதுசக்தியின் காரியமென்பதற்குஹேதுவையும் காண்பிக்கிறார்.

आद्योविकारआकाशस्सोवकाशस्स्वरूपवान् ।
आशोस्तीतिसत्तत्वमाकाशेप्यनुगच्छति ॥

ஆத்யோவிகாரஆகாஶஸ்ஸோவகாஶஸ்ஸ்வரூபவாந் ।
ஆகாஶோஸ்தீதிஸத்தத்வமாகாஶேப்யநுகச்சதி ॥ ௫௭ ॥

ஆத்ய: விகார:	முதலாவதுவிகாரமான	ஸத்த்வம்	சத்தின்தன்மை
ஆகாஶ:	ஆகாசம் (அது	ஆகாஶ: அஸ்தி இதி	ஆகாசம் இருக்கிறதென்று
ஸ:	அது	ஆகாஶே அபி	ஆகாசத்திலும்
அவகாஶஸ்வரூபவாந்	இடைவெளி வடிவுள்ளது	அநுகச்சதி	அநுசரித்திருக்கிறது

இ-தி மண்ணின்ஸ்வபாவம்குதிரிலும்காணப்படுவதுபோலவறி.

அ-கை. அதைவிபரித்துச்சொல்லுகிறார்.

एकस्वभावंसत्तत्वमाकाशोद्विस्वभावकः ।
अवकाशस्सतिव्योम्निसचैषोपिद्वयंस्थितम् ॥

ஏகஸ்வபாவம்ஸத்தத்வமாகாஶோத்விஸ்வபாவக: ।
அவகாஶஸ்ஸதிவ்யோம்நிஸசைஷோபித்வயம்ஸ்திதம் ॥ ௫௮ ॥

ஸத்ரூபம் — சத்தத்வமானது இருக்கிறதென்கிற
ஏகஸ்வபாவம் — ஒருஸ்வபாவமுடையது
ஸுகாஶம் — ஆகாசமானது
த்விஸ்வபாவகம் — இரண்டு ஸ்வபாவமுடையது
ஸதிஸ்வகாஶம் — சத்தில் இடைவெளி
ந — இல்லை
வ்யோம்நி — ஆகாசத்தில் அந்த இருப்புத்தன்மையும்
ஏஷ:ஸ்வ — இந்த அவகாசமும்
த்வயம். த்ருஶ்யதே — இரண்டும் இருக்கின்றன

இ-தி- ஒருபுருஷன் ஸ்திரீவேடம்போட்டு வேடம் கட்டபட்டிருக்கிறசமயத்தில் இரண்டுசுவபாவமும் மற்றசமயத்தில்ஒருஸ்வபாவம் காணப்படுவது போலவாம்.

அ-கை சத்துஆகாசமிரண்டிற்கு ஒன்றிரண்டுஸ்வபாவத்தை வேறேஒருபிரகாரத்தினாலும்சொல்லுகிறார்.

यद्वाप्रतिध्वनिर्व्योम्नोगुणोनासौसतीक्ष्यते ।
व्योम्निद्वौसद्ध्वनीतेनसदेकंद्विगुणंवियत् ॥

யத்வாப்ரதித்வநிர்வ்யோம்நோகுணோநாஸௌஸதீக்ஷ்யதே ।
வ்யோம்நித்வௌஸத்த்வநீதேநஸதேகம்த்விகுணம்வியத் ॥ ௯௨ ॥

யத்வா — இன்னமொரு பக்ஷமாவது
வ்யோம்ந: — ஆகாசத்தினுடைய
ப்ரதித்வநி: — எதிரொலியான
அஸௌ.குண: — இந்தசப்தகுணமானது
ஸதி. — சத்தில்
ந.ஈக்ஷ்யதே — காணப்படவில்லை
வ்யோம்நி — ஆகாசத்தில்
ஸத் — சத்தும்
த்வநீ — சப்தமும்
த்வௌ — இரண்டுமிருக்கிறது
தேந — ஆகையினாலே
ஸத்.ஏகம் — சத்து ஒரு குணமுடையது
வியத் — ஆகாசம்
த்விகுணம் — இரண்டு குணமுடையது

அ-கை. ஆகாசம்சத்தின்காரியமானால் ஆகாசகாரியம்சத்தென்று தோன்றக்காரணமேதெனில்.

याशक्तिःकल्पयेद्व्योमसासद्व्योम्नोरभिन्नताम् ।
आपाद्यधर्मधर्मित्वंव्यत्ययेनावकल्पयेत् ॥

யாஶக்தி:கல்பயேத்வ்யோமஸாஸத்வ்யோம்நோரபிந்நதாம் ।
ஆபாத்யதர்மதர்மித்வம்வ்யத்யயேநாவகல்பயேத் ॥ ௯௩ ॥

யாஶக்தி: — யாதொருமாயாசக்தியானது
வ்யோம — (சத்தில்) ஆகாசத்தை
கல்பயேத் — கற்பிவித்ததோ
ஸா.ஸத்வ்யோம்நோ: — அது முதலில் சத்திற்கும் ஆகாசத்திற்கும்
அபிந்நதாம் — அபேதத்தை
ஆபாத்ய — உண்டுபண்ணி (பின்)
தர்மதர்மித்வம் — காரியகாரணங்களையும்
வ்யத்யயேந — மாறுபாடாக
அவகல்பயேத் — கற்பிக்குது

இ-தி. நித்திராசக்தியானது, ஒருஜகத்தைகற்பித்துதன்னோடே அத்தியாசப்படுத்திதர்மதர்மித்வத்தையும் மாறுபாடாகச்செய்வதுபோலவறி.

அ-கை. மாயையாலிந்த விபரீதம் பண்ணக் காரணமேதெனில்.

सतोऽव्योमत्वमापन्नंव्योम्नस्सत्तांतुलौकिकाः ।
तार्किकाश्चावगच्छन्तिमायायाउचितंहितत् ॥

ஸதோவ்யோமத்வமாபந்நம்வ்யோம்நஸ்ஸத்தாம்துலௌகிகா: ।
தார்க்கிகாஶ்சாவகச்சந்திமாயாயாஉசிதம்ஹிதத் ॥ சுசு ॥

லௌகிகா: தார்க்கிகா: ச — லௌகிகர்களும் தார்க்கிகர்களும்
ஸத: (காரணமான)சத்வஸ்துவிற்கும்
வ்யோமத்வம் காரியமான ஆகாசத்வத்தை
ஆபந்நம் அடையப்பட்டதாகவும்
வ்யோம்ந: (காரியமன) ஆகாசத்திற்கு
ஸத்தாம் து காரணமான சத்துத்தன்மை யடையப்பட்டதாகவும்
அவகச்சந்தி அறிகிறார்கள்
தத் மாயாயா: அப்படி விபரீதமாக செய்விப்பதுமாயைக்கு
உசிதம் ஹி யோக்கியமன்றோ

இ-தி- குழந்தைகள் விசித்திரமான இந்திரஜாலம்முதலானதைஒன்றாய்ப்பார்ப்பதும்அந்தயிந்திரஜாலம்முதலானதை யுண்டுபண்ணுகிறஅந்தசக்தி அப்படித்தோற்றிவிப்பதும் சகஜமாயிருப்பதுபோலவறி.

அ-கை. மாயைவிபரீதமான தோற்றத்தைச்செய்வது பிரசித்தமென்பதைக்காண்பிவிக்கிறார்.

यद्यथावर्ततेतस्यतथात्वंभातिमानतः ।
अन्यथात्वंभ्रमेणेतिन्यायोयंसार्वलौकिकः ॥

யத்யதாவர்த்ததேதஸ்யததாத்வம்பாதிமாநத: ।
அந்யதாத்வம்ப்ரமேணேதிந்யாயோயம்ஸார்வலௌகிக: ॥ சுரு ॥

யத் யாதொருசிப்பிமுதலானது
யதா எப்படிசிப்பிமுதலானரூபமாய்
வர்த்ததே இருக்கிறதோ
தஸ்ய அந்தசிப்பிமுதலானதற்கு
மாநத: (விசார)ப்பிரமாணத்தால்
ததாத்வம் அந்தசிப்பிமுதலான தன்மை
பாதி விளங்குகிறது
ப்ரமேண மயக்கத்தினால்
அந்யதாத்வம் அதற்குவிபரீதமானவெள்ளிமுதலான ரூபமானதோற்றம்ஸ்வபாவம்
இதி இந்தப்பிரகாரம்
அயம் ந்யாய: இந்தநியாயமானது
ஸார்வலௌகிக: — சர்வலோக பிரசித்தமாயிருக்கிறது

அ-கை. இப்படிமயக்கத்தால் விபரீததோற்றத்தைகாண்பித்து அதுநிவர்த்தியாகிறதற்கு உபாயம்சொல்லுகிறார்.

एवंश्रुतिविचारात्प्राग्यथायद्वस्तुभासते ।
विचारेणविपर्येतिततस्तच्चिन्त्यतांवियत् ॥

ஏவம்ஶ்ருதிவிசாராத்ப்ராக்யதாயத்வஸ்துபாஸதே ।
விசாரேணவிபர்யேதிததஸ்தச்சிந்த்யதாம்வியத் ॥ ௬௬ ॥

ஏவம் இந்தப்பிரகாரம்
ஶ்ருதிவிசாராத்ப்ராக் } சுருதிஅர்த்தம்விசாரம்பண்ணுவதற்குமுன்
யத் யாதொருசத்வஸ்து
ஆகாசாதிரூபமாயெப்படி
பாஸதே தோற்றிற்றோ

விசாரேண அதுவிசாரத்தினால்
விபர்யேதி } ஆகாசாதிரூபத்தைவிட்டு சத்தாய் விளங்குகிறது
ததஃ.வியத் ஆகையால் வானை
தச்சிந்த்யதாம் } சத்ரூபமாகவே சிந்திக்கத்தக்கது

அ-கை. விசாரத்தினாலேயே யதார்த்தம்வெளியாவதால் விசாரத்தின்ஸ்வரூபம்காண்பிவிக்கிறார்.

भिन्नेवियत्सतीशब्दभेदाद्बुद्धेश्चभेदतः ।
वाय्वादिष्वनुवृत्तंसन्नतुव्योमेतिभेदधीः ॥

பிந்நேவியத்ஸதீஶப்தபேதாத்புத்தேஶ்சபேதத: ।
வாய்வாதிஷ்வநுவ்ருத்தம்ஸந்நதுவ்யோமேதிபேததீ: ॥ ௬௭ ॥

வியத்ஸதீ சத்தும்ஆகாசமும்
ஶப்தபேதாத் } சத்தென்றும் ஆகாசமென்றும் சொல்லுகிறசப்தபேதத்தாலும்
புத்தேஃ ஞானத்தினுடைய
பேததஃ. ச பேதத்தாலும்
பிந்நே } அவைகள் வேறானவைகள் அதெப்படியெனில்
ஸத் சத்வஸ்துவானது

வாய்வாதிஷு } வாயுமுதலான பூதபௌதிகங்களில்
அநுவ்ருத்தம் வாயு முதலானவை யிருக்கின்றன வென்று யெல்லாவற்றிலும் வியாபித்து விளங்குகின்றனபோல
வ்யோம அவ்வாகாசமானது
ந. இதி யெல்லாவற்றிலும் அனுசரித்திருக்கவில்லையென் றறிகிற
பேததீஃ விவேகஞானமே பேதமாம்

இ-தி. மண்பானைசட்டிகளில்அனுசரித்திருப்பதும், குதிர்அப்படிபானைசட்டிகளில் அனுசரித்தில்லாததுபோலுமறி.

அ-கை. இப்படிசதாகாசங்களுக்கு, பேதஞ்சாதித்துஆகாசத்தின் காரியம்சத்தென்றுவாதிக்கிறவர்களுடைய மயக்கத்தைஒழிக்கிறார்.

सद्वस्त्वधिकवृत्तित्वात्धर्मिव्योम्नस्तुधर्मता ॥

ஸத்வஸ்த்வதிகவ்ருத்தித்வாத்தர்மிவ்யோம்நஸ்துதர்மதா ॥ ௬௮ ॥

ஸத்வஸ்து சத்வஸ்துவானது
அதிகவ்ருத்தித்வாத் } யெல்லாவற்றிலும் அதிகவியாபகமாயிருப்பதால்
தர்மி காரணமாம் [லாமையால்
வ்யோம்நஃது ஆகாசத்திற் கப்படியில்
தர்மதா காரியமென்றறி

இ-தி. மாம்பழம்முதலானதிரவியமானது ரூபரசகந்தாதிகளில்வியாபித்திருக்கிறது, அந்தரூபரசகந்தாதிகள் அப்படி வியாபியாதிருப்பதுபோலவறி.

அ-கை. அப்போதுகடத்துக்கு வேறானரூபம்எப்படிவாஸ்தவமோ அப்படிசத்துக்குவேறானஆகாசமும் வாஸ்தவமாகுமேயெனில்.

धियासत पृथक्कारेब्रूहिव्योमकिमात्मकम् ॥

தியாஸத꞉ப்ருதக்காரெப்ரூஹிவ்யோமகிமாத்மகம் ॥ ௬௮ ॥

தியா புத்தியால்
ஸத꞉ சத்தைவிட்டு
வ்யோம ஆகாசத்தை
ப்ருதக்காரெ பிரித்தால் (கடத்தைவிட்டு ரூபம் வேறாயில்லாததுபோல)
கிமாத்மகம் ஆகாசமென்னரூபமாயிருக்கிறது
ப்ரூஹி சொல்

அ-கை. ஆகாசத்திற்குரூபமில்லையென்று சொன்னதுகூடாதெனில்.

अवकाशात्मकंतच्चेदसत्तदितिचिन्त्यताम् ॥

அவகாஶாத்மகம்தச்சேதஸத்ததிதிசிந்த்யதாம் ॥ ௬௯ ॥

தத் அந்தஆகாசமானது
அவகாஶாத்மகம் சேத் இடவெளிரூபமாயிருக்கிறதேயென்றால்
தத் அந்தஇடவெளியானது
அஸத் இதி அசத்து என்று
சிந்த்யதாம் சிந்திக்கத்தக்கது

இ-தி. புருஷனுக்குவேறாகத்தோன்றுகிற நிழலெப்படிபொய்யோஅப்படி சத்துக்குவேறாகத்தோன்றுகிற ஆகாசம்பொய்யென்றறி.

அ-கை. சத்துக்குவேறாகத் தோன்றுகிறஆகாசத்தை, அசத்தென்றுசொல்லக்கூடாதெனில்.

भिन्नंसतोसच्चनेतिवक्षिचेद्व्याहतिस्तव ॥

பிந்நம்ஸதோஸச்சநேதிவக்ஷிசேத்வ்யாஹதிஸ்தவ ॥ ௭௰ ॥

ஸத꞉ சத்துக்கு
பிந்நம் ஆகாசம் பின்னமென்றும்
அஸத் ச அசத்தாகவும்
ந இதி இல்லையென்று
வக்ஷி சேத் சொல்லுவையேயானால்
தவ உன்னுடைய (சொல்)
வ்யாஹதி꞉ கெடுதலடையும்

இ-தி. மலடி தன்பிள்ளைக்கும் பாகம்வேண்டுமென்று கேட்பதுபோலவாம்.

அ-கை. ஆகாசம்அசத்தானால்விண்மலர்போல்தோன்றக்கூடாதேயெனில் சூனியலக்ஷணமில்லாமல் கானல்ஜலம்போல்அற்பதோற்றமானதால் தோன்றலாமென்றுசொல்லுகிறார்.

भातीतिचेत्भातुनामभूषणंमायिकस्यतत् ॥

பாதீதிசேத்பாதுநாமபூஷணம்மாயிகஸ்யதத் ॥ ௭௧ ॥

பாதி இதி சேத் ஆகாசந்தோன்றுகிறதேயென்றால்
பாது நாம தோன்றட்டும் (தே
தத் அப்படி இல்லாமல் தோற்றுகிற

மாயிகஸ்ய மாயாகாரியத்திற்கு | த்ருஷ்ணா அலங்காரம்

அ-கை. அப்படி பொய்யாய்த் தோற்றுவதால் விரோதமில்லையென்பதைதிருஷ்டாந்தமூலமாயறிவிக்கிறார்.

यदसत्भासमानंतन्मिथ्यास्वप्नगजादिवत् ॥

யதஸத்பாஸமாநந்தந்மித்யாஸ்வப்நகஜாதிவத் ॥ ௭௦ ॥

யத் யாதொருவஸ்துவானது

அஸத்பாஸமாநம் } ஸ்வரூபமில்லாமல்தோன்றுகிறதோ

தத் அது

ஸ்வப்நகஜாதிவத் } ஸ்வப்னத்தில் கண்ட யானை முதலானதுபோல

மித்யா பொய்யென்றறி

ச-கை. எப்போதுஞ்சேர்ந்திருக்கிறசத்துக்கும் ஆகாசத்திற்கும்பேதங்காண்கிறதெப்படியெனில்.

जातिव्यक्तीदेहिदेहौगुणद्रव्येयथापृथक् ।
वियत्सतोस्तथैवास्तुपार्थक्यंकोत्रविस्मयः ॥

ஜாதிவ்யக்தீதேஹிதேஹௌகுணத்ரவ்யேயதாப்ருதக் ।
வியத்ஸதோஸ்ததைவாஸ்துபார்தக்யங்கோத்ரவிஸ்மய: ॥ ௭௧ ॥

ஜாதிவ்யக்தீ ஜாதியும்ஸ்வரூபமும்

தேஹிதேஹௌ உயிரும்உடலும் [ம்

குணத்ரவ்யே குணம்குணதர்மங்களு

யதா எப்படி

ப்ருதக் வேறுயிருக்கின்றனவோ

ததா ஏவ அப்படியே

வியத்ஸதோ: வானிற்கும் சத்திற்கும்

பார்தக்யம் வேறுயிருக்குந் தன்மையானது

அஸ்து இருக்கிறது

அத்ர இந்தவிஷயத்தில் [றது

விஸ்மய: க: அதிசயம் என்ன இருக்கி

அ-கை. சதாகாசங்களுக்குபேதந்தெரிந்தாலும் நிச்சயப்படவில்லையென்றசங்கைக்குஉத்தரம்சொல்லுகிறார்.

बुद्धोपिभेदोनोचित्तेनिरूढिंयातिचेत्तदा ।
अनेकाग्र्यात्संशयाद्वारूढ्यभावोस्यतेवद ॥

புத்தோபிபேதோநோசித்தேநிரூடிம்யாதிசேத்ததா ।
அநேகாக்ர்யாத்ஸம்ஶயாத்வாரூட்யபாவோஸ்யதேவத ॥ ௭௨ ॥

பேத: } (சதாகாசங்களுக்கு)ப் பேதமானது

புத்த: அபி அறியப்பட்டிருந்தாலும்

சித்தே சித்தத்தில்

நிரூடிம் திடத்தை

நோ யாதி அடையவில்லையே

சேத் என்றால்

ததா அப்போ [மையாலா

அநேகாக்ர்யாத் ஒருமித்த மனதின்

ஸம்ஶயாத்வா } அல்லது சமுசயத்தினலேயா

அஸ்ய, தே இந்த உனக்கு

𑌅𑌦𑍃𑌢𑌭𑌾𑌵𑌃 திடமில்லாமையாயிருக்கிறது | 𑌵𑌦 சொல்லு

அ-கை. அந்தஇரண்டுக்கும்பரிகாரம்சொல்லுகிறார்.

अप्रमत्तोभवध्यानादाद्येस्मिन्विवेचनम् ।
कुरुप्रमाणयुक्तिभ्यांततोरूढतमोभवेत् ॥

𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑍋𑌭𑌵𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌦𑌾𑌦𑍍𑌯𑍇𑌽𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑌮𑍍 ।
𑌕𑍁𑌰𑍁𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂𑌤𑌤𑍋𑌰𑍂𑌢𑌤𑌮𑍋𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௭௩ ॥

𑌆𑌦𑍍𑌯𑍇 முதலாவதான ஒருமித்தமனதின்மைஇருக்கும்பக்ஷத்தில்
𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍 பிரமத்தியானத்தினால்
𑌅𑌪𑍍𑌰𑌮𑌤𑍍𑌤𑌃 சாவதானமாய்
𑌭𑌵 இரு
𑌅𑌸𑍍𑌮𑌿𑌨𑍍 இரண்டாவதானசமுசயமிருக்கும்பக்ஷத்தில்
𑌪𑍍𑌰𑌮𑌾𑌣𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌭𑍍𑌯𑌾𑌂 (குருமுகமாய்)சாஸ்திரவிசாரத்தாலும் யுக்தியாலும்
𑌵𑌿𑌵𑍇𑌚𑌨𑌂 விவேகத்தை
𑌕𑍁𑌰𑍁 பண்ணு
𑌤𑌤𑌃 அவைகளினாலே
𑌰𑍂𑌢𑌤𑌮𑌃 அத்தியந்தந்திடமானது
𑌭𑌵𑍇𑌤𑍍 உண்டாகும்

அ-கை. அவைகளினாலேயென்னமுடிவாயிற்றெனில்.

ध्यानान्मानाद्युक्तितोपिरूढेभेदेवियत्सतोः ।
नकदाचिद्वियत्सत्यंसद्वस्तुच्छिद्रवन्नच ॥

𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌨𑍍𑌮𑌾𑌨𑌾𑌦𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑍋𑌽𑌪𑌿𑌰𑍂𑌢𑍇𑌭𑍇𑌦𑍇𑌵𑌿𑌯𑌤𑍍𑌸𑌤𑍋𑌃 ।
𑌨𑌕𑌦𑌾𑌚𑌿𑌦𑍍𑌵𑌿𑌯𑌤𑍍𑌸𑌤𑍍𑌯𑌂𑌸𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌰𑌵𑌨𑍍𑌨𑌚 ॥ ௭௪ ॥

𑌧𑍍𑌯𑌾𑌨𑌾𑌤𑍍 பிர்ம்மத்தியானத்தினாலும்
𑌮𑌾𑌨𑌾𑌤𑍍 ஆத்துமாவினின்று வானுண்டாயிற்றென்றசுருதியாலும்
𑌯𑍁𑌕𑍍𑌤𑌿𑌤𑌃𑌅𑌪𑌿 வாயுவாதிகளில்சத்து அனுசரித்திருக்கின்ற யுக்தியாலும்
𑌵𑌿𑌯𑌤𑍍𑌸𑌤𑍋𑌃 ஆகாசத்திற்கும் சத்திற்கும்
𑌭𑍇𑌦𑍇 பேதமானது
𑌰𑍂𑌢𑍇 திடமாகும்பக்ஷத்தில்
𑌵𑌿𑌯𑌤𑍍 ஆகாசமானது
𑌕𑌦𑌾𑌚𑌿𑌤𑍍 ஒருக்காலும்
𑌸𑌤𑍍𑌯𑌂 சத்தியம்
𑌨 ஆகாது
𑌸𑌦𑍍𑌵𑌸𑍍𑌤𑍁 சத்துவஸ்து
𑌛𑌿𑌦𑍍𑌰𑌵𑌤𑍍 ஆகாசம்போலே
𑌨𑌚 மித்தையாகாது

இ-தி. சுவரையுஞ்சித்திரத்தையும், பிரித்துக்கண்டவனுக்கு, சித்திரம்பொய்யாகவுஞ்சுவர்சத்தியமாகவும், விளங்குவதுபோலவாம்.

அ-கை. இந்தவிவேகத்திற்குப் பிரயோஜனமேதெனில்.

ज्ञस्यभातिवेसाव्योमनिस्तत्वोल्लेखपूर्वकम्
सद्वस्त्वपिविभात्यस्यनिश्छिद्रत्वपुरस्सरम् ॥

ஜ்ஞஸ்ய ஹாதி ஸதா வ்யோம நிஸ்தத்வோல்லேகபூர்வகம் |
ஸத்வஸ்த்வபி விபாத்யஸ்ய நிர்வ்யோமோல்லேகபூர்வகம் || ௭௫ ||

ஜ்ஞஸ்ய இப்படி அறிந்த ஞானிக்கு
நிஸ்தத்வோல்லேகபூர்வகம் சுவரூபமில்லாமல் பொய்யாகத் தோன்றுகிற
வ்யோம ஆகாசமானது
ஸதா எப்போதும்
பாதி விளங்கும்.
ஸத்வஸ்து அபி சத்துவஸ்துவும்
அஸ்ய இந்தஞானிக்கு
நிர்வ்யோமோல்லேகபூர்வகம் நிராகாசமாக
விபாதி விளங்கும்

இ-தி. தங்கத்தையறிந்தசெட்டிக்கு எந்தநகையும்பொருளாய்த் தோன்றாமல்தங்கமாத்திரம், பொருளாய்த்தோன்றுவதுபோலவாம்.

அ-கை. இப்படிபிரித்தறிந்தவனுக் கடையாளமேதெனில்.

वासनायांप्रवृद्धायांवियत्सत्यत्ववादिनम् ।
सन्मात्राबोधयुक्तञ्चदृष्ट्वाविस्मयतेबुधः ॥

வாஸநாயாம்ப்ரவ்ருத்தாயாம்வியத்ஸத்யத்வவாதிநம் |
ஸந்மாத்ராபோதயுக்தஞ்சத்ருஷ்ட்வாவிஸ்மயதேபுத: || ௭௬ ||

வாஸநாயாம் இந்தப்பழக்கமானது
ப்ரவ்ருத்தாயாம் { விசேஷமாக விருத்தியாயிருக்கும்பக்ஷத்தில்
வியத்ஸத்யத்வவாதிநம் ஆகாசம் சத்தியமென்றுசொல்லுகிறவாதியையும்
ஸந்மாத்ராபோதயுக்தம் ச. சத்துமாத்திரம் உள்ளதென்றறியாதஅஞ்ஞானியையும்
த்ருஷ்ட்வா கண்டு
புத: ஞானி
விஸ்மயதே. ஆச்சரியப்படுவன்

அ-கை. இந்தஞாயத்தைமற்றபூதங்களிலும் காண்பிவிக்கிறார்.

एवमाकाशमिथ्यात्वेसत्सत्यत्वेचवासिते ।
न्यायेनानेनवाय्वादेस्सद्वस्तुप्रविच्यतां ॥

ஏவமாகாஶமித்யாத்வேஸத்ஸத்யத்வேசவாஸிதே |
ந்யாயேநாநேநவாய்வாதேஸ்ஸத்வஸ்துப்ரவிச்யதாம் || ௭௭ ||

ஏவம் இப்படி
ஆகாஶமித்யாத்வே. ஆகாசம்பொய்யென்றும்
ஸத்ஸத்யத்வே. ச. சத்துசத்தியமென்றும்
வாஸிதே திடப்பழக்கமானபிற்பாடு
அநேந இந்த
ந்யாயேந நியாயத்தினாலே
வாய்வாதே: வாயுமுதலானபூதங்களினின்று
ஸத்வஸ்து சத்துவஸ்துவானது
ப்ரவிச்யதாம் விவேகம்பண்ணத்தக்கது

அ-கை. ஆகாசகாரியமானவாயுவுக்கு அகாரணமானசத்தோடே தாதாத்மயம்கூடாமையால் வாயுவாதிகளினின்றுசத்தைப் பிரிப்பானேனெனில்நேரே சம்மந்தமில்லாதிருந்தாலும் பரம்பராசம்பந்தமிருக்கிறதென்றுசொல்லுகிறார்

सद्वस्तुन्येकदेशस्थामायातत्रैकदेशगम् ।
वियत्तत्राप्येकदेशगतोवायुःप्रकल्पितः ॥

ஸத்வஸ்துந்யேகதேசஸ்தாமாயாதத்ரைகதேசகம் ।
வியத்தத்ராப்யேகதேசகதோவாயு:ப்ரகல்பித: ॥ ௭௮ ॥

ஸத்வஸ்துநி சத்வஸ்துவில்
மாயா மாயையானது [து
ஏகதேசஸ்தா ஏகதேசத்திலிருக்கிற
தத்ர அந்தமாயையிலே
வியத் ஆகாசம்
ஏகதேசகம். ஏகதேசமாயிருக்கிறது
தத்ராபி ஆகாசத்திலும் [தாக
ஏகதேசகத: ஏகதேசத்திலிருக்கிற
வாயு: வாயுவானது
ப்ரகல்பிதம். கல்பிக்கப்படுகிறது

அ-கை. சத்துக்கும்வாயுவுக்கும்பேதத்தைகாட்டிஅவைகளின்தர்மங்களைக்காண்பிக்கிறார்.

शोषस्पर्शौगतिर्वेगोवायुधर्माइमेमताः ।
त्रयस्स्वभावस्सन्मायाव्योम्नांयेतेपिवायुगाः ॥

சோஷஸ்பர்சௌகதிர்வேகோவாயுதர்மாஇமேமதா: ।
த்ரயஸ்ஸ்வபாவஸ்ஸந்மாயாவ்யோம்நாம்யேதேபிவாயுகா: ॥ ௭௯ ॥

சோஷஸ்பர்சௌ உலர்த்தலும்ஸ்பர்ச (மும்
கதி: கமனமும்
வேக: வேகமும்
இமே இவைகள்
வாயுதர்மா: வாயுதர்மங்களாக
மதா: சொல்லப்பட்டிருக்கின்றன
ஸந்மாயா சத்தினுடையவும் மாயை யினுடையவும்
வ்யோம்நாம் ஆகாசத்தினுடையவும்
யே யாதொரு [ண்டோ
த்ரய:ஸ்வபாவா: மூன்றுஸ்வபாவங்களு
தே அபி { அவைகளும்வாயுவுக்குகாரண மானதால் [ன
வாயுகா: வாயுவினிடத்திலிருக்கின்ற

அ-கை. வாயுவிலிந்தகுணங்களைப்பிரித்துகாண்பிக்கிறார்.

वायुरस्तीतिसद्भावस्सतोवायोःपृथक्कृते ।
निस्तत्वरूपतामायास्वभावोव्योमगोध्वनिः ॥

வாயுரஸ்தீதிஸத்பாவஸ்ஸதோவாயோ:ப்ருதக்க்ருதே ।
நிஸ்தத்வரூபதாமாயாஸ்வபாவோவ்யோமகோத்வநி: ॥ ௮௦ ॥

வாயு: வாயுவானது [து
அஸ்தீதி இருக்கிறதென்றுசொல்வ
ஸத்பாவ: சத்தின் ஸ்வபாவம் [து
ஸத:வாயோ: சத்தில்நின்று வாயுவான
ப்ருதக்க்ருதே. பிரிக்கப்பட்டவில்
நிஸ்தத்வரூபதா { ஸ்வரூபமில்லாமல் போதலானது
மாயாஸ்வபாவ: மாயையின்ஸ்வபாவம்
த்வநி: சப்தமானது
வ்யோமக: ஆகாசத்தின்ஸ்வபாவம்

அ-கை. முன்சொன்னதற்குவிரோதமாயிருக்கிறதென்று சங்கிக்கிறான்.

सतोनुवृत्तिस्सर्वत्रव्योम्नोनेतिपुरेरितम् ।
व्योमानुवृत्तिरधुनाकथंनव्याहतंवचः ॥

ஸதோநுவ்ருத்திஸ்ஸர்வத்ரவ்யோம்நோநேதிபுரேரிதம் ।
வ்யோமாநுவ்ருத்திரதுநாகதம்நவ்யாஹதம்வச: ॥ ௮௧ ॥

ஸர்வத்ர சர்வபூதத்திலும்
ஸத: சத்துக்கு
அநுவ்ருத்தி: அனுசரிப்பிருக்கிறதென்
வ்யோம்ந: ஆகாசத்திற்கு
ந, இதி } அப்படிஅனுசரிப்பில்லை யென்றும் [பட்டது
புரா ஈரிதம் முன்னேசொல்லப்

அதுநா இப்போது
[றும் வ்யோமாநுவ்ருத்தி: ஆகாசம் வாயுவில் அனுவிர்த்தித்திருக்கிறதென்கிற
வச: (உம்முடைய)வார்த்தையானது
கதம் ந, வ்யாஹதம் } எப்படி கெடுக்கப்படமாட்டாது

அ-கை. முன்னேசொன்ன அர்த்தந்தெரியாமல் சொல்லுகிறாயென்றுசொல்லுகிறார்.

छिद्रानुवृत्तिर्नेतीतिपूर्वोक्तिरधुनात्वियम् ।
शब्दानुवृत्तिरेवोक्तावचसोव्याहतिःकुतः ॥

ச்சித்ராநுவ்ருத்திர்நேதீதிபூர்வோக்திரதுநாத்வியம் ।
சப்தாநுவ்ருத்திரேவோக்தாவசஸோவ்யாஹதி:குத: ॥ ௮௨ ॥

ச்சித்ராநுவ்ருத்தி: } ஆகாசத்திற்கு அனுவிர்த்தியானது
ந, இதி இல்லையென்று [டது
பூர்வோக்தி: முன்னேசொல்லப்பட்
அதுநா,து இப்பவோவென்றால்
இயம் இந்த

சப்தாநுவ்ருத்தி: சப்தானுவிருத்தியே
உக்தா சொல்லப்பட்டது
வசஸ: (நம்முடைய)வார்த்தைக்கு
குத: யென்னகாரணத்தினாலே
வ்யாஹதி: கெடுதல் வந்ததுசொல்

அ-கை. வாயுமாயாமயமென்று சொல்வதுகூடாது, அதுசத்துலக்ஷணமாயிருப்பதால் மாயாமயமென்றால் தோற்றமலிருக்கவேண்டுமென்று சங்கிக்கிறான்.

ननुसद्वस्तुपार्थक्यादसत्वंचेत्तदाकथम् ।
अव्यक्तमायावैषम्यादमायामयतापिनो ॥

நநுஸத்வஸ்துபார்த்தக்யாதஸத்வம்சேத்ததாகதம் ।
அவ்யக்தமாயாவைஷம்யாதமாயாமயதாபிநோ ॥ ௮௩ ॥

நநு ஆக்ஷேபிக்கிறான்
ஸத்வஸ்துபார்த்தக்யாத் சத்வஸ்துவிலி

றுந்துவாயுவைப்பிரித்த மாத்திரத்
தில்

ஸமக்ஷம் வேக்ஷ: { வாயுஇல்லாமல்பேகும்பக்ஷத்தில்
ததா அப்போது
ஸவ்யக்தமாயாவேஷ்யா: தோற்றமில்லாமலிருக்கிறமாயைக்குவித்தியா[வுக்கும்
ஸமிருப்பதால்
ஸமாயாவித்யா: சத்ரூபத்வம்வாயு
ஸமம் ந எப்படியில்லை

அ-கை. அதற்குப்பரிகாரஞ் சொல்லுகிறார்.

निस्तत्त्वरूपतैवात्रमायात्वस्यप्रयोजिका ।
साशक्तिकार्ययोस्तुल्याव्यक्ताव्यक्तत्वभेदिनोः ॥

நிஸ்தத்வரூபதைவாத்ரமாயாத்வஸ்யப்ரயோஜிகா ।
ஸாசக்திகார்யயோஸ்துல்யாவ்யக்தாவ்யக்தத்வபேதிநோ: ॥ அச ॥

அத்ர இந்த வேதாந்தத்தில்
மாயாத்வஸ்ய மாயா மயமென்பதற்கு அர்த்தம் தோற்றுமலிருக்கிறதல்ல நிரூபிக்குமிடத்தில்அதற்கு
நிஸ்தத்வரூபதா ஏவ { தத்துவமில்லாமலிருத்தலே
ப்ரயோஜிகா பிரயோஜனமெனப்படும்
ஸா அந்த தத்துவமற்றரூபமானது
வ்யக்தாவ்யக்தத்வபேதிநோ: வியக்தமென்றுமவ்யக்தமென்றும் பேதத்தையுடையவைகளான
சக்திகார்யயோ: சக்தியானமாயைக்கும் காரியமான பூதங்களுக்கும்
துல்யா சமானமாயிருக்கிறது

அ-கை. காரியகாரணங்களிரண்டிலும், நிஸ்தத்வரூபம்சமானமானால்வியக்தாவியக்தபேதமெதினாலெனில்.

सदसत्त्वविवेकस्यप्रस्तुतत्वात्साचिन्त्यताम् ।
असतोवान्तरोभेदआस्तांतच्चिन्तयात्रकिम् ॥

ஸதஸத்வவிவேகஸ்யப்ரஸ்துதத்வாத்ஸாசிந்த்யதாம் ।
அஸதோவாந்தரோபேதஆஸ்தாம்தச்சிந்தயாத்ரகிம் ॥ அரு ॥

ஸதஸத்வவிவேகஸ்ய சத்தித அசத்திதுவென்று பிரித்துப்பார்க்கிற விவேகமானது [னாலே
ப்ரஸ்துதத்வாத் பிரகிருதமானபடியி
ஸா அந்தவிவேகமே
சிந்த்யதாம் சிந்திக்கத்தக்கது
அஸத: { அசத்துக்குள்ளேதோற்றம் தோன்றுமையென்கிற
அவாந்தர: அவாந்தரமான
பேத: பேதமானது
ஆஸ்தாம் இருக்கட்டும்
தத் அந்த அசத்பேதங்களுடைய
சிந்தயா சிந்தையால்
அத்ர இந்த இடத்தில்
கிம் என்னபிரயோஜனம்

இ-தி. துவைதிகளைப்போலிருக்கிற ஸ்திரீகள்வேண்டுமானால்நகைகளினால் லக்ஷணலக்ஷணங்களைப்பார்க்கட்டும், தங்கத்தைப்பார்க்கிறசெட்டிபோலிருக்கிற நமக்கு த்வைதரூபத்தைப்பார்க்கத் தேவையில்லை.

அ-கை. சித்தாந்தஞ்சொல்லுகிறார்.

सद्वस्तुब्रह्मशिष्टोंशोवायुर्मिथ्यायथावियत् ।
वासयित्वाचिरंवायोर्मिथ्यात्वंमरुतंत्यजेत् ॥

ஸத்வஸ்துப்ரஹ்மஶிஷ்டாம்ஶோவாயுர்மித்யாயதாவியத் !
வாஸயித்வாசிரம்வாயோர்மித்யாத்வம்மருதந்த்யஜேத் ॥ ௮௬ ॥

ஸத்வஸ்துப்ரஹ்ம வாயுவிலிருக்கிறதானசத்வஸ்துபிர்மம் [யதான
ஶிஷ்டாம்ஶ: மற்றஅம்சத்தையுடை
வாயு: வாயுவானது
யதா எப்படி
வியத் ஆகாசம்
மித்யா பொய்யோஅப்படிப்பொய்
வாயோ: வாயுவுக்கு
மித்யாத்வம் பொய்யாயிருத்தல் (விவேகத்தினாலும் தியானத்தினாலும்)
சிரம்வாஸயித்வா. வெகுகாலம்பழகி
மருதம் வாயுவைஇல்லையென்று
த்யஜேத். தள்ளவேண்டியது

அ-கை. வாயுவிற்சொன்னவிசாரத்தை அக்கினியினுங்காண்பிக்கிறார்.

चिन्तयेद्वह्निमप्येवंमरुतोन्यूनवर्तिनम् ।

சிந்தயேத்வஹ்நிமப்யேவம்மருதோந்யூநவர்திநம் ॥ ௮௬ ற ॥

ஏவம் இப்படி
மருத: வாயுவிலும்
ந்யூநவர்திநம் குறைவாயிருக்கிற
வஹ்நிம்அபி அக்கினியையும்
சிந்தயேத். சிந்திக்கவேண்டியது

அ-கை. சத்திலேகதேசம்மாயை மாயையிலேகதேசமாகாசம், ஆகாசத்திலேகதேசம்வாயு, வாயுவிலேகதேசம்அக்கினியென்று சொன்னபடி-ஜகத்திலெவ்விடத்திலுங் காணப்படவில்லையேயெனில்,

ब्रह्मांडावरणेष्वेषान्यूनाधिकविचारणा ॥

ப்ரஹ்மாண்டாவரணேஷ்வேஷாந்யூநாதிகவிசாரணா ॥ ௮௭ ॥

ஏஷா இந்த
ந்யூநாதிக விசாரணா. } குறைதல்கூடுதலானவிசாரணையானது
ப்ரஹ்மாண்டாவரணேஷு பிரமாண்டங்களாகிற ஆவரணங்களிலேயிருக்கிறது

அ-கை. அக்கினிவாயுவில்எவ்வளவு அமுசம்குறைந்ததெனில்.

वायोर्दशांशतोन्यूनोवह्निर्वायौप्रकल्पितः ।

வாயோர்தஶாம்ஶதோந்யூநோவஹ்நிர்வாயௌப்ரகல்பித: ॥

வஹ்நி: அக்கினியானது
வாயோ: வாயுவில்
தஶாம்ஶத: பத்திலொருபாகமாக
ந்யூந: குறைவாக
வாயௌ வாயுவில்
ப்ரகல்பித: கற்பிக்கப்பட்டது

அ-கை. இந்த அதிகக்குறைவு உம்முடையவாக்கால் கற்பிக்கிறீரெனில்.

पुराणोक्तंतारतम्यंदशांशैर्भूतपञ्चके ॥

புராணோக்தம் தாரதம்யம் தஶாம்ஶைர்பூதபஞ்சகே ॥ அஅ ॥

பூதபஞ்சகே பஞ்சபூதங்களில்
தஶாம்ஶை: ஒன்றிற்கொன்று பத்து பங்கு குறைதலான
தாரதம்யம் தாரதம்மியமானது
புராணோக்தம் { புராணங்களாலேசொல்லப்படுகிறது

அ-கை. இனிஅக்கினியின் ஸ்வரூபம்சொல்லுகிறார்.

वह्निरुष्ण:प्रकाशात्मापूर्वनुगतिरत्रच ।

अस्तिवह्निस्सानिस्तत्वश्शब्दवान्स्पर्शवानपि ॥

வஹ்னிருஷ்ண: ப்ரகாஶாத்மா பூர்வானுகதிரத்ர ச ।

அஸ்தி வஹ்னிஸ்ஸன்னிஸ்தத்த்வஶ்ஶப்தவான்ஸ்பர்ஶவானபி ॥ அகூ ॥

வஹ்னி:. தீயானது
உஷ்ண:. ப்ரகாஶாத்மா உஷ்ணம்பிரகாசவடிவமுள்ளது
வஹ்னிரஸ்தி தீயிருக்கிறதென்பதும்
ஸன்னிஸ்தத்த்வ:. அந்தநிஸ்தத்துவமும்
ஶப்தவான். சப்தகுணமும்
ஸ்பர்ஶவான்.அபி ஸ்பரிசகுணமும்
அத்ர.ச. இந்தத்தீயிலும்
பூர்வானுகதி: முந்திய காரணங்களின் குணங்கள் அனுசரித்திருக்கின்றன

அ-கை. தீர்மானஞ்சொல்லுகிறார்.

सन्मायाव्योमवाय्वंशैर्युक्तस्याग्नेर्निजोगुणः ।

रूपंतत्रसतस्सर्वमन्यद्बुध्याविविच्यताम् ॥

ஸன்மாயாவ்யோமவாய்வம்ஶைர்யுக்தஸ்யாக்னேர்நிஜோ குண: ।

ரூபம் தத்ர ஸதஸ்ஸர்வமன்யத்புத்த்யா விவிச்யதாம் ॥ கூ௦ ॥

ஸன்மாயாவ்யோமவாய்வம்ஶை: சத்துமாயைஆகாசம்வாயு இவைகளுடைய ஸ்வபாவகுணங்களோடே
யுக்தஸ்ய கூடிக்கொண்டிருக்கிற
அக்னே:. அக்கினிக்கு
நிஜ: சொந்த
குண:. குணமானது
ரூபம் ரூபம்
தத்ர அவைகளில்
ஸத: { இருக்கிறதென்கிற ஸ்வபாவத்தைக்காட்டிலும்
அன்யத். ஸர்வம் { மற்ற சமஸ்த குணங்களும் பொய்யென்று
புத்த்யா விவேகபுத்தியால்
விவிச்யதாம் பிரித்தறியத்தக்கது

அ-கை. இப்படியேஅப்புவையும்மித்தையென்று சிந்திக்கவேண்டுமென்று சொல்லுகிறார்.

सतोविवेचितेवह्नौमिथ्यात्वेसतिवासिते ।

आपोदशांशतोन्यूना:कल्पिताइतिचिन्तयेत् ॥

ஸதோ விவிக்தே வஹ்நௌ மித்யாத்வே வாஸிதே ஸதி ।
ஆபோ(அ)ம்ஶதோ ந்யூநா: கல்பிதா இதி சிந்த்யதாம் ॥ ௯௧ ॥

வஹ்நௌ அக்கினியானது
ஸத: சத்திலிருந்து
விவிக்தே பிரிக்கப்பட்டவில்
மித்யாத்வே ஸதி பொய்யாயிருத்தல்
வாஸிதே விவேகத்தால் திடப்பட்டுள்ளவில் [பங்கு
அம்ஶத: (அக்கினியில்) பத்திலொரு
ந்யூநா: குறைவாயிருக்கிற
ஆப: ஜலமானது
கல்பிதா இதி கற்பிதமென்று
சிந்த்யதாம் சிந்திக்கவேண்டியது

அ-கை. அப்புவிலும்காரணகுணங்களையும் ஸ்வபாவகுணத்தையும் பிரித்துகாண்பிக்கிறார்.

सन्त्यापोमूश्शून्यतत्वास्सशब्दस्पर्शसंयुताः।
रूपवत्योन्यधर्मानुवृत्यास्वीयोरसोगुणः॥

ஸந்த்யாபோ(அ)மூ: ஶூந்யதத்த்வா: ஸஶப்தஸ்பர்ஶஸம்யுதா: ।
ரூபவத்யோ(அ)ந்யதர்மாநுவ்ருத்யா ஸ்வீயோ ரஸோ குண: ॥ ௯௨ ॥

அமூ: இந்த
ஆப: ஜலமானது
ஸந்தி இருக்கிறதென்பது சத்தின்குணம்
ஶூந்யதத்த்வா: சத்தைப்பிரித்தாலில்லாமல் போவதுமாயையின்குணம்
ஸஶப்தஸ்பர்ஶஸம்யுதா: சப்தஸ்பரிசம் ஆகாசவாயுக்களின்குணம்
ரூபவத்ய: ரூபம்தீயின்குணம்
அந்யதர்மாநுவ்ருத்யா அன்னியதர்மங்களினனுவர்த்தியோடேகூடின ஜலத்திற்கு
ஸ்வீய: குண: சொந்தகுணம்
ரஸ: ரசமென்றறி

அ-கை. விவேகதியானங்களினால் ஜலம்பொய்யென்று நிச்சயம்பண்ணின பிறகு பூமியைப்பொய்யென்று காண்பிக்கிறார்.

सतोविवेचितास्वप्सुतन्मिथ्यात्वेचवासिते ।
भूमिर्देशांशतोन्न्यूनाकल्पिताप्स्वितिचिन्तयेत् ॥

ஸதோ விவேசிதாஸ்வப்ஸு தந்மித்யாத்வே ச வாஸிதே ।
பூமிர்தஶாம்ஶதோ ந்யூநா கல்பிதாப்ஸ்விதி சிந்தயேத் ॥ ௯௩ ॥

அப்ஸு ஜலமானது
ஸத: சத்தில்நின்று
விவேசிதாஸு பிரிக்கப்பட்டவில்
தந்மித்யாத்வே ச அந்த ஜலமும் பொய்யென்று
வாஸிதே திடப்பழக்கமானபின்
தஶாம்ஶத: அதின்பத்திலொருஅம்சத்தால்
ந்யூநா குறைவான
பூமி: பூமியானது
அப்ஸு ஜலத்தில்
கல்பிதா இதி கற்பிதமென்று
சிந்தயேத் சிந்திக்கத்தக்கது

அ-கை. அந்தப்பூமியைப்பொய்யென்று சிந்திக்கிறதற்காக, அதின்குணங்களைப்பிரிக்கிறார்.

अस्तिभूस्तत्त्वशून्यास्यांशब्दस्पर्शौसरूपकौ ।
रसश्चपरतोगन्धोनैजस्सत्ताविविच्यताम् ॥
पृथक्कृतायांसत्तायांभूमिर्मिथ्यावशिष्यते ।

அஸ்திபூஸ்தத்வஶூந்யாஸ்யாம்ஶப்தஸ்பர்ஶௌஸரூபகௌ ।
ரஸஶ்சபரதோகந்தோநைஜஸ்ஸத்தாவிவிச்யதாம் ॥
ப்ருதக்க்ருதாயாம்ஸத்தாயாம்பூமிர்மித்யாவஶிஷ்யதே ॥ ௯௪ ॥

அஸ்யாம் இந்தப்பூமியில்
பூ: அஸ்தி { பூமி இருக்கிறதென்பதுசத்தின்குணம்
தத்வஶூந்யா சத்தைப்பிரித்தாலில்லாமல் போவதுமாயையின்குணம்
ஶப்தஸ்பர்ஶௌ சப்தஸ்பரிசங்கள் ஆகாசவாயுக்களின்குணம்
ஸரூபகௌ ரூபம்அக்கினியின்குணம்
ரஸஶ்ச ரசம்அப்புவின்குணம்

பரத: { இவைகள் அன்னியத்தால் வந்த குணங்கள்
நைஜ: சொந்தமான குணமானது
கந்த: கந்தமென்றறிந்து
ஸத்தா இவ்விதம் சத்ரூபமானது
விவிச்யதாம் பிரிக்கத்தக்கது
ஸத்தாயாம் சத்துரூபமானது
ப்ருதக்க்ருதாயாம் பிரிக்கப்பட்டஅளவில்
பூமி: பூமியானது
மித்யாவஶிஷ்யதே பொய்யாகப்போகிறது

அ-கை. இப்போதுபௌதிகமான பிரமாண்டமுதலானவைகளில் சத்தைப்பிரிக்கிறதின்பொருட்டு அவைகளின்கிரமத்தைகாண்பிவிக்கிறார்.

भूमिर्दशांशतोन्यूनंब्रह्मांडंभूमिमध्यगम् ॥
ब्रह्मांडमध्येतिष्ठन्तिभुवनानिचतुर्दश ।
भुवनेषुवसन्त्येषुप्राणिदेहायथायथम् ॥
ब्रह्मांडलोकदेहेषुसद्वस्तुनिपृथक्कृते ।
असंतोण्डादयोभान्तुतज्ज्ञानेपीहकाक्षतिः ॥

பூமேர்தஶாம்ஶதோந்யூநம்ப்ரஹ்மாண்டம்பூமிமத்யகம் ।
ப்ரஹ்மாண்டமத்யேதிஷ்டந்திபுவநாநிசதுர்தஶ ।
புவநேஷுவஸந்த்யேஷுப்ராணிதேஹாயதாயதம் ।
ப்ரஹ்மாண்டலோகதேஹேஷுஸத்வஸ்துநிப்ருதக்க்ருதே ।
அஸந்தோண்டாதயோபாந்துதஜ்ஜ்ஞாநேபீஹகாக்ஷதி: ॥ ௯௭ ॥

பூமே: பூமியில்நின்று
தஶாம்ஶத: பத்திலொருபங்கு
ந்யூநம் குறைவான
ப்ரஹ்மாண்டம் பிரமாண்டமானது

भूमिमध्ये பூமியின் நடுவிலிருக்கிறது வேண்டுமோ

ब्रह्माण्डमध्ये — அந்தப் பிரமாண்டத்தின் நடுவில்

चतुर्दश — பதினாலான

भुवनानि — உலகங்கள்

तिष्ठन्ति — இருக்கின்றன [ல்

तेषु भुवनेषु — இந்தஉலகங்களி

प्राणिदेहाः — ஜீவாளின் தேகங்கள்

यथायथं — எப்படியெப்படி இருக்க

वर्तन्ते — அப்படியப்படி இருக்கின்றன

ब्रह्माण्डलोकदेहेषु — பிரமாண்டலோகதேகங்களில்

सद्वस्तु — சத்வஸ்துவானது [வில்

पृथक्कृते — பிரிக்கப்பட்டிருந்துள்ள

अण्डादयः — அண்டம்முதலானவைகள்

असन्तः — அசத்துக்களாக

भान्ति — விளங்குகின்றன

அ-கை. அப்படித்தோற்றலாமாவெனில்.

भान्तु नाम — அப்படி அவைகள் தோன்றினாலும்

इह का — இவடத்திலுனக்கென்ன

क्षतिः — குறைவு

அ-கை. கெடுதலில்லையென்பதை நன்றாய்காண்பிக்கிறார்.

भूतभौतिकमायानांमसत्वेत्यंतवासिते ।
सद्वस्त्वद्वैतमित्येषाधीर्विपर्येतिनक्वचित् ॥

भूतभौतिकमायानामसत्वेत्यन्तवासिते ।
सद्वस्त्वद्वैतमित्येषा धीर्विपर्येति नक्वचित् ॥ ௯௮ ॥

भूतभौतिकमायानाम् — ஆகாசாதி பூதங்களும் பிரமாண்ட முதலான பௌதிகங்களும் காரணமான மாயையும் [ய்யென்று

असत्वे — விவேகத்தியானங்களால்பொ

अत्यन्तवासिते — சித்தத்தில்திடப்பட்டபின்பாடு

सद्वस्तु — சத்வஸ்துமாத்திரம்

अद्वैतम् इति — இரண்டற்றதாயிருக்கிறதென்கிற

एषा — இந்த

धीः — ஞானமானது

क्वचित् — ஓரிடத்தில்

न विपर्येति — மாறமாட்டாது

இ-தி. சித்திரம்பொய்யென்றும் சுவர்சத்தியமென்றும், தெரிந்தவனுக்கு சித்திரம்பலவிதமாய்த்தோன்றினும் சுவரின்ஞானம்பாதிக்கப்படாமலிருப்பதுபோலவறி.

அ-கை. பூமிமுதலானவைபொய்யென்றால் ஞானிக்குவிவகாரங்கூடாதெனில்விவேகத்தால்அதிலிருந்தசத்தியபுத்திமாத்திரம்கெட்டதேயல்லாமல் அவைகளின்ஸ்வரூபங்கெடாமையால்விவகாரலோபமில்லையென்றுச்சொல்லுகிறார்.

सदद्वैतात्पृथग्भूतेद्वैतेभूम्यादिरूपिणि ।
तत्तदर्थक्रियालोकेयथादृष्टातथैवसा ॥

ஸத³த்³வைதாத்ப்ருத²க்³பூ⁴தேத்³வைதேபூ⁴ம்யாதி³ரூபிணி ।
தத்தத³ர்த²க்ரியாலோகேயதா²த்³ருஷ்டாததை²வஸா॥ கூகூ ॥

பூ⁴ம்யாதி³ரூபிணி — பூமிமுதலான ரூபமான
த்³வைதே — துவைதமானது
ஸத³த்³வைதாத் — சத்தான அத்துவைதத்தில்நின்று [வில்
ப்ருத²க்³பூ⁴தே — வேறுபடுத்தப்பட்ட
லோகே — உலகத்தில்
தத்தத் — அந்தந்தத்துவைதங்களின்
அர்த²க்ரியா — ஸ்வரூபங்களுந் தொழில்களும்
யதா² — முன்னே
த்³ருஷ்டா — எதுஎங்கேகாணப்பட்டதோ
ஸா — அது
ததா²ஏவ — அங்கேஅப்படியே காணப்படும்

இ-தி. கல்லானையைப்பொய்யென்றறிந்தவனுக்கும் அதின்கொம்புவால்முதலானதுமுன்போலேனது தோற்றக்கூடாதுசொல்.

அ-கை. அத்துவைதமானது சத்தியமானால் சாங்கியன்முதலானவர்கள் சொல்லுகிறபேதத்தையேன்நீங்கள் தள்ளவில்லையெனில்விவகாரத்தில் ஜகத்பேதம்தோற்றுமென்பதுநமக்குச் சம்மதமாகையால் அதைத்தள்ளுவதற்கு எத்தனிக்கவில்லையென்றுசொல்லுகிறார்.

सांख्यकाणादबौद्धाद्यैर्जगद्भेदोयथायथा ।
उत्प्रेक्ष्यतेनैकयुक्त्याभवत्वेषतथातथा ॥

ஸாங்க்²யகாணாத³பௌ³த்³தா⁴த்³யைர்ஜக³த்³பே⁴தோ³யதா²யதா² ।
உத்ப்ரேக்ஷ்யதேநைகயுக்த்யாப⁴வத்வேஷததா²ததா²॥ க00 ॥

ஸாங்க்²யகாணாத³பௌ³த்³தா⁴த்³யை꞉ — சாங்கியனென்ன பௌத்தனென்ன காணாதனென்ன இவர்கள் முதலானவர்களாலே
அநேகயுக்த்யா — அனேகயுக்தியினாலே
ஜக³த்³பே⁴த³꞉ — ஜகத்தினுடையபேதமானது
யதா².யதா² — எப்படியெப்படி
உத்ப்ரேக்ஷ்யதே — வருணிக்கப்படுகிறதோ.
ஏஷ꞉ — இந்தஜகத்பேதமானது
ததா²,ததா². — அப்படிஅப்படி
ப⁴வது — ஆகட்டும்

அ-கை இப்படிபிரத்தியக்ஷசித்தமாயிருக்கிற ஜகத்பேதத்தைஅவமானம் பண்ணினால் தோஷமில்லையோவெனில்.

अवज्ञातंसदद्वैतंनिश्शङ्कैरन्यवादिभिः ।
एवंकाक्षतिरस्माकंतद्द्वैतमवजानताम् ॥

அவஜ்ஞாதம்ஸத³த்³வைதம்நிஶ்ஶங்கைரந்யவாதி³பி⁴꞉ ।
ஏவம்காக்ஷதிரஸ்மாகம்தத்³த்³வைதமவஜாநதாம்॥ க0க ॥

அந்யவாதிபி: அன்யர்களான சாங்கியன் முதலான துவைதவாதிகளினாலே	லையென்றால்
ஸித்தே: சுருதி சித்தமான சத்தான அத்துவைதம்	ஏவம் இப்படியித்தையான
நிஸ்ஸங்கம், சங்கையில்லாமலே	தத் அந்தத்துவைதத்தை
அவஜ்ஞாதம் அவமானப்பண்ணப்பட்டதாலவர்களுக்குக்குறைவில்	அவஜா நதாம் } சுருதியுக்தியனுபவத்தால் அவமதிப்புச்செய்கிற
	அஸ்மாகம் நமக்கு
	கா. க்ஷதி:, என்னகுறைவுவரப்போகிறது

இ-தி. அருந்ததியையவ்யபிசாரியென்றபேர்களுக்குப் பாபமில்லையென்றால் தட்டுவானியைத்தட்டுவானியென்றவனுக்குபாபமெப்படிவரும்சொல்.

அ-கை. குழந்தைகள்வைதவர்களைப் பதில்வைவதுபோல துவைதத்தையவமானம்வீம்புக்குப் பண்ணுகிறீரேவெனில், மகத்தானபிரயோஜன மிருப்பதால் அப்படியில்லையென்றுசொல்லுகிறார்.

द्वैतावज्ञासुस्थिताचेदद्वैतेधीःस्थिराभवेत् ।
स्थैर्येतस्याःपुमानेषजीवन्मुक्तइतीर्यते ॥

த்வைதாவஜ்ஞாஸுஸ்திதாசேதத்வைதேதீ:ஸ்திராபவேத் ।
ஸ்தைர்யேதஸ்யா:புமானேஷஜீவன்முக்தஇதீர்யதே॥ கoஉ ॥

த்வைதா அவஜ்ஞா } துவைதத்தில்அவமதிப்பானது	தஸ்யா: } அந்தஅத்துவைதபுத்தியானது
ஸுஸ்திதா சேத் } நன்றாய்ஸ்திரமாயிற்றேயானால்	ஸ்தைர்யே ஸ்திரமாயிற்றேயானால்
அத்வைதே அத்துவைத்தில்	ஏஷ:புமான். இந்தப்புருஷன்
தீ: புத்தியானது	ஜீவன்முக்த:இதி ஜீவன்முக்தனென்று
ஸ்திரா,பவேத்ஸ்திரமாகப்பவிக்கிறது	ஈர்யதே. சொல்லப்படுகிறான்

இ-தி. காமிக்குபொம்மையானஸ்திரீரூபத்தைப் பார்ப்பதில்அபேக்ஷஸ்திரப்படும்போது நிஜமானதன்ஸ்திரீயினிடத்தில், பிரியமதிகமாகஸ்திரப்படும் அதினால்புத்திரவானாகிறதுபோலவறி.

அ-கை. ஜீவன்முக்திமாத்திரமன்று பின்னும்யாதெனில் விதேகமுக்தியும் கிடைக்குமென்று ஸ்ரீகிருஷ்ணவாக்கியத்தைஉதகரிக்கிறார்

एषाब्राह्मीस्थितिःपार्थनैनांप्राप्यविमुह्यति ।
स्थित्वास्यामन्तकालेपिब्रह्मनिर्वाणमृच्छति ॥

ஏஷாப்ராஹ்மீஸ்திதி:பார்தநைநாம்ப்ராப்யவிமுஹ்யதி ।
ஸ்தித்வாஸ்யாமந்தகாலேபிப்ரஹ்மநிர்வாணம்ருச்சதி॥ கoரு ॥

ஸௌவாயஂ ஒகுந்திபுத்திரா
ஸ்ராஹ்மீஸ்திதிஃ பிர்மஞான நிஷ்டை
யானது [ருக்கிறது
யேஷா இதுவரைசொல்லிவந்ததாகவி
ஏனாம் இந்தபிர்மஞானநிஷ்டையை
ப்ராப்ய அடைந்து
ந.விமுஹ்யதி சம்சார மோகத்தை
(முன்போல்) அடைகிறானில்லை

அஸ்யாம் மரணகாலத்திலும்
கூடசமஸ்ததுக்க ஹேதுவானமா
யாநாசம்வருவதால்
ஸ்தித்வா இந்தபிர்மஞானநிஷ்டையில்
ஸ்திக்வா இருந்து [தை
ப்ரஹ்மநிர்வாணம் பிர்மகைவல்லியத்
ருச்சதி அடைகிறான்

அ-கை. அந்தியகாலமென்கிறசொல்லினால், இந்ததேகம்கீழேவிழுகிறகால மென்றல்லவோசொல்லப்படுகிறதெனில், அதைநிவர்த்திக்கஅதின் அபிப்பிராய த்தைச்சொல்லுகிறார்.

सदद्वैतेऽनृतद्वैतेयदन्योन्यैक्यवीक्षणम् ।
तस्यांतकालस्तद्भेदबुद्धिरेवनचेतरः ॥

ஸதத்வைதேऽந்ருதத்வைதேயதந்யோந்யைக்யவீக்ஷணம் |
தஸ்யாம்தகாலஸ்தத்பேதபுத்திரேவநசேதர: || ௧௦௪ ||

ஸதத்வை தே. } சத்தாயிருக்கிறஅத்துவை தத்திற்கும்
அந்ருதத்வை தே } பொய்யாயிருக்கிறத் வைதத்திற்கும்
அந்யோந்யைக்யவீக்ஷணம் ஒன்றிற் கொன்றுபேதந்தெரியாமல் ஒன்று ய்ப்பார்ப்பது
யத். எதுவுண்டோ

தஸ்ய அந்தவஞ்ஞானப்பிரமைக்கு
அந்தகாலஃ. அந்தியகாலமானது
தத் } அவைகளுடையநிஜம்பொய் யென்கிற
பேதபுத்திஃ.ஏவ பேதபுத்திதானே,
ந.இத ரஃ } இதரமானதேகத்தினுடை ய மரணகாலமன்று

அ-கை. இப்போதுஉலகத்தின் சித்தாந்தத்தை யங்கீகரித்தாலும்தோஷ மில்லையென்றுசொல்லுகிறார்.

यद्वांतकालःप्राणस्यवियोगोस्तुप्रसिद्धितः ।
तस्मिन्कालेपिनभ्रान्तेर्गतायाःपुनरागमः ॥

யத்வாம்தகாலஃப்ராணஸ்யவியோகோஸ்துப்ரஸித்தித: |
தஸ்மிந்காலேபிநப்ராம்தேர்கதாயா:புநராகம: || ௧௦௫ ||

யத்வா அன்றியிலேபோனால்
அந்தகாலஃ. அந்தியகாலமானது
ப்ராணஸ்ய. பிராணனுடைய
வியோகஃ போகிறதானது

ப்ரஸித்திதஃ உலகப்பிரசித்தமானதால்
அஸ்து. இருக்கட்டும்
தஸ்மிந். அந்த
காலே.அபி. காலத்திலாவது

ஹதாயா: ஞானத்தால்போனதாயிருக்கிற	ப்ராந்தே: அஞ்ஞானமயக்கத்திற்கு
	நபுநஸ்ஸம்பவ: மறுபடிவரத்தில்லை.

அ-கை. சிலபேர்கள்பிராணன்போகுங்காலத்தில் எதைநினைத்தானோஅது வேஆகுவானென்கிற கீதாவசனப்படிஞானிக்கும் மரணகாலத்தில்ஸ்வரூபம்நினைப்பில்லாமல்போனால் மறுபடிஜென்மம்வருமென்று சொல்லுகிறார்களேயெனில், அந்தகீதாவாக்கியம் அஞ்ஞானியைக்குறித்துச்சொன்னது, சுருதியில் ஞானோதயகாலத்திலேயே, ஞானிவிதேகமுக்தனாய்விடுவானென்று சொல்லப்பட்டிருக்கிறது.

नीरोगउपविष्टोवारुग्णोवाविलुठन्भुवि ।
मूर्छितोवात्यजत्वेषप्राणान्भ्रान्तिर्नसर्वदा ॥

நீரோகஉபவிஷ்டோவாருக்ணோவாவிலுடந்புவி |
மூர்ச்சிதோவாத்யஜத்வேஷப்ராணாந்ப்ராந்திர்நஸர்வதா ||

நீரோக: ரோகமில்லாமலாவது	ஏஷ: இந்தஞானி
உபவிஷ்ட:வா. உட்கார்ந்தாவது	ப்ராணாந். பிராணன்களை
ருக்ண:வா வியாதியோடேயாவது	த்யஜது விட்டும்
புவி பூமியில்	ஸர்வதா-சர்வவிதத்திலுமவனுக்கு
விலுடந். உருண்டுகொண்டாவது	ப்ராந்தி: ஜன்மஹேதுவானஅஞ்ஞானமயக்கம்
மூர்ச்சித:வா மூர்ச்சையையடையப்பட்டவனாகவாவது	ந. இல்லவேயில்லை

அ-கை. அப்படிமூர்ச்சை முதலானவைகளினாலே ஞானங்கெடமாட்டாதென்பதற்குதிருஷடாந்தஞ்சொல்லுகிறார்.

दिनेदिनेस्वप्नसुप्त्योरधीतेविस्मृतेप्ययम् ।
परेद्युर्नानधीतस्स्यात्तद्वद्विद्यानननश्यति ॥

தினேதினேஸ்வப்நஸுப்த்யோரதீதேவிஸ்ம்ருதேப்யயம் |
பரேத்யுர்நாநதீதஸ்ஸ்யாத்தத்வத்வித்யாநநஶ்யதி || கஅ ||

தினேதினே தினந்தோறும்தினந்தோறும்	அநதீத: வேதம்கற்காதவனாக
அதீதே கற்றவேதசாஸ்திரங்கள் (ம்	நஸ்யாத் ஆகமாட்டான்
ஸ்வப்நஸுப்த்யோ: ஸ்வப்னசுஷுப்திகளிலே	தத்வத் அதுபோல மரணவசரத்தில் ஸ்வரூபப்பிரஞ்ஞை மறந்திருந்தாலும் அவனுக்கு வந்திருக்கிற
விஸ்ம்ருதேஅபி மறந்திருந்தாலும்	வித்யா ஞானமானது
அயம் இந்தப்புருஷனானவன்	நநஶ்யதி நாசமாகாது
பரேத்யு: மறுநாள்	

இ-தி. சாணையில்பிடித்தரத்தனம்போன்ற ஞானம்விளங்கிக்கொண்டிருக்கும்போது, அந்தகாரத்திற்குச்சமானமான அஞ்ஞானம்வரகணக்கில்லை.

அ-கை. ஞானங்கெடாதென்பதை உறுதிப்படுத்திச்சொல்லுகிறார்.

प्रमाणोत्पादिताविद्याप्रमाणंप्रबलंविना ।
ननश्यतिनवेदांतात्प्रबलंमानमीक्ष्यते ॥

ப்ரமாணோத்பாதிதாவித்யாப்ரமாணம்ப்ரபலம்விநா ।
நநஶ்யதிநவேதாந்தாத்ப்ரபலம்மாநமீக்ஷ்யதே ॥ ௧௦௮ ॥

ப்ரமாணோத்பாதிதாவித்யா	மகாவாக்கியப் பிரமாணத்தினாலுண்டான ஞானமானது
ப்ரபலம்	அதற்குமேலான
ப்ரமாணம்விநா	பிரமாணமன்றியில்
ந நஶ்யதி	நாசமாகாமாட்டாது
வேதாந்தாத்	வேதாந்தத்தைக்காட்டிலும்
ப்ரபலம் மாநம்	பிரபலமான பிரமாணமானது
ந ஈக்ஷ்யதே	பார்க்கப்படவில்லை

இ-தி. சீமைத்தீர்ப்பு மாறவேண்டுமானால் அதற்குமேல்கோர்ட்டிருந்தால்தானாகும் அப்படியில்லாமையால் மாறாததுபோலவறி.

அ-கை. சொன்னஅர்த்தத்தைமுடிக்கிறார்.

तस्माद्वेदांतसंसिद्धंसदद्वैतंनबाध्यते ।
अन्तकालेप्यतोभूतविवेकान्निर्वृतिस्स्थिता ॥

தஸ்மாத்வேதாந்தஸம்ஸித்தம்ஸதத்வைதம்நபாத்யதே ।
அந்தகாலேப்யதோபூதவிவேகாந்நிர்வ்ருதிஸ்ஸ்திதா ॥ ௧௦௯ ॥

தஸ்மாத்	ஆகையினாலே
வேதாந்தஸம்ஸித்தம்	வேதாந்த விசாரத்தாலுண்டான ஞானத்தால் சித்தித்திருக்கிற
ஸதத்வைதம்	சத்தான அத்துவைதம்
ந பாத்யதே	பாதிக்கப்படுகிறதில்லை
அத:	ஆகையினாலே
அந்தகாலேபி	அந்திக்காலத்திலேயாவது
பூதவிவேகாத்	இந்தப்பஞ்சபூத விவேகத்தால்
நிர்வ்ருதி:	மோக்ஷமானது
ஸ்திதா	இருக்கிறது

இ-தி. புகைவண்டியில்முன்னமேபோய் சீட்டுவாங்கிப்போகாமல் வண்டிவிடும்சமயத்திலாவதுபோய் சீட்டுவாங்கியேறிப்போகிறவனுக்கு அன்றையத்தினம்வீணாகாமல் சபலமாவதுபோலவறி.

பஞ்சபூதவிவேகம்சம்பூர்ணம்.

(௫)—பஞ்சகோசவிவேகசாரார்த்தப்பிரகாசிகை.

தைத்திரீயஉபநிடதம் ஆனந்தவல்லியிற் சொல்லியிருக்கும்அர்த்தத்தையிப்பஞ்சகோசவிவேகத்தால் வெளியாக்குகின்றனர்.

வேதங்களின்அங்கமான நியாயசாத்திரத்தில், சாகாசந்திரநியாயமும்ஸ்தூலாருந்ததிநியாயமும், மார்ஜாரநியாயமும், மர்க்கடநியாயமும், ஸ்தாலீபுலாகநியாயமும், ஸ்தூணாநிகனநியாயமும், கைமுதிகநியாயமும், ஆகஇவ்வேழுவகைநியாயங்கள் வேதாந்தசாத்திரத்தில்அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன, ஏனையநியாயங்கள் இவ்வேதாந்தத்தில்ஆன்றோர்களாலங்கீகரிக்கப்பட்டனவல்ல, சாகாசந்திரநியாயமாவது, ஸ்தூலமானமரத்தைக்காட்டி சூக்குமமானசந்திரனைக்காட்டுவதுபோல், ஸ்தூலமானபஞ்சகோச இலக்கணத்தைக்காட்டி சூக்குமமானஆத்துமாவைக்காண்பிவிப்பதாம், தூலாருந்ததிநியாயமாவது சூக்குமமானஅருந்ததிநக்ஷத்திரத்துடன் கூடினஇரண்டுஸ்தூலநக்ஷத்திரங்களைக்காட்டிசூக்குமமானஅருந்ததியை விவாகத்தில்தம்பதிகளுக்குக் காண்பிவிப்பதுபோல், கோசவிசாரத்தால்ஆத்துமாவைக் காண்பிவிப்பதாம்மார்ஜாரநியாயமாவது பூனைதன்மதலையை வலியத்தழுவுவதுபோல் குருசீடனைவலியஆட்கொள்ளுதலாம். குரங்கின்குட்டிதாயைவலுவேதேடுவதுபோல், சீடன்வைராக்கியாதிசாதனத்துடன்நிறைந்தவனாய் ஆசானிடம்சென்று. அவனால்ஸ்தூலாதிசரீர இலக்கணமுறுவதுமர்க்கட நியாயமெனப்படும், ஒருபானைசோறுக்கொருபருக்கையைப்பார்த்துப் பக்குவமறிவதுபோல், பஞ்சகோசகுகையில்விளங்குகிறதைதன்னியத்தைத்தானென் றுணர்ந்தால் சச்சிதானந்தமான பிர்மமேதானென்றறிவதுஸ்தாலீபுலாக நியாயமெனப்படும், மானிடரால்குழியில்நாட்டுகிறகம்பத்தை உரமுறக்குத்தியுரைப்பிக்குமுபாயம்போல், சமுசயஅசம்பாவனாதிதோஷங்களைநிவர்த்தித்துப் பிரமசாக்ஷாத்காரத்தில் திடமுறசுத்தசத்துவவிருத்திவிளங்கி, பிர்மமாய்சேடிக்கிறதேஸ்தூணாநிகன நியாயமெனப்படும், கைமுதிகநியாயம் திருப்திதீபிகையில்விரிவாய்கூறப்படும் இவ்வேழுவகைநியாயங்களைஇப்பிரகரணத்திலும் மற்றிதரபிரகரணங்களிலும் ஆங்காங்குபயோகித்திருக்கின்றனர், மேற்கூறியஉபநிடத்தில்வெளியிட்டிருக்கிற(குகா) அர்த்தத்தைவிரிக்கின்றனர் குகையிலிருக்கிறபிர்மத்தைப் பஞ்சகோசவிவேகத்தினால் அறிவதற்குமுடியுமென்று சுருதிகூறியிருப்பதால் இப்பஞ்சகோசவிவேகத்தைத்தெரிவிக்கின்றனர், அன்னமய்கோசம், பிராணமயகோசம், மனோமயகோசம், விஞ்ஞானமயகோசம், ஆனந்தமயகோசம், ஒன்றினுளொன்றடக்கமாயிருப்பதால்குகையெனப்படும் தகப்பன்வீரியத்தினாலுற்பத்தியாயும், அன்னத்தினால்விருத்தியடைந்தும், அன்னமில்லாவிட்டால் நாசத்தையடைவதாலும், முன்பின்னில்லாததாலுமிருக்கிறஇவ்வன்னமயனாத்துமாவாகான் தேகத்திற்குபலம்கொடுக்கிறவனாயும், கர்மேந்திரியங்களையேவுகிறவனாயுமிருக்கிறஇப்பிராணமயன்அறிவின்மையால், ஆத்துமாவாகான், தேகத்தில்நானென்றும், வி[illegible]

லியதையெனதென்றும் காமாதியவஸ்தைகளால், பைத்தியம்கொண்டவனு மனோமயனுமாத்துமாவாகான் சுஷுப்தியில்லீனத்தையடைகிறவனும், ஜாக்கிராவஸ்தையில்சிரசுமுதல் இத்தேகத்தில்வியாபகனும், அறிவின்நிழலாயுமிருக்கிற விஞ்ஞானமயனுமான்மாவாகான் எஜமானனைகருத்தாவாயிருப்பதால்விஞ்ஞானமயனென்றும் ஏவினதொழில்செய்வதால்மனோமயனென்றும் கூறினர்ஜாக்கிரகாலத்தில்பிரியமோத பிரமோதாதிவிருத்திகளுடன்விடயானுபவம்செய்து புண்ணியபோகம்சாந்தகாலத்தில் நித்திராரூபனாய்அஞ்ஞானவிருத்தியுடன் சுஷுப்தியானந்தம் புஜிக்குமானந்தமயன் ஆத்துமாவாகமாட்டான், இவ்வைங்கோசங்களுக்கதிட்டானமான வஸ்துவே(ஆத்துமா)வென்றறி வஸ்துவில்ஈசுவரத்துவமும், ஜீவத்வமும்மாயைஅவித்தைகளால் கற்பிவிக்கப்பட்டனவேயொழியவாஸ்தவத்திலில்லை, அவ்வீச்சுவரசம்மந்தமான, மாயாசக்தியானது சகலவஸ்துக்களையும்ஏவுதல்செய்தும், ஆனந்தமயமுதல்சகலவஸ்துக்களில் ரகசியமாய்பிரகாசித்தும் விளங்குகின்றது சத்தியில்லாவிடில்நரபதியில்லாநகர்போல ஜகத்துவித்தியாசத்தை அடைந்துவிடும்அறிவின்சாயையுடன்கூடினசக்திஅறிவுபோலவிளங்குகின்றது, அச்சக்தியினுபாதிச்சேர்க்கையால் பிர்மமேசுவரத்துவத்தையடைந்தார் ஐங்கோசங்களுபாதியால் ஜீவபாவமெய்தினர் ஒருபுருடனுக்குப்புத்திரனால்தகப்பனென்கிறசொல்லும், பேரனால்பாட்டனென்கிறசொல்லும், வந்தனபோல்மாயையாகிறபுத்திரனால் ஈசனாகியதகப்பனென்கிறசொல்லும் அக்கோசோபாதியால்ஜீவனாகிய பாட்டனென்கின்றசெல்லும், புத்திரனும்பேரனுமற்றகாலத்தில் அச்சொற்கள்பொய்யாவதுபோல்அப்பிர்மத்திற்குஇவ்வீச ஜீவபாவம்பொய்யாய்அறிவுமாத்திரம் ஒன்றாய்ப்பிரகாசிக்கின்றது இவ்விதம்பிரமத்தையறிந்தவன் பிர்மமேயொழியபிரமவித்தல்ல, இஞ்ஞானிக்குஜன்மமில்லை இதற்கையமில்லை.

பஞ்சகோசவிவேகசாரார்த்தப்பிரகாசிகை முற்றிற்று.

𑌶𑍍𑌰𑍀𑌰𑌸𑍍𑌤𑍁.

𑌶𑍍𑌰𑍀𑌗𑌣𑍇𑌶𑌾𑌯 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀 [illegible] 𑌨𑌮𑌃.

𑌪𑌞𑍍𑌚𑌕𑍋𑌶𑌵𑌿𑌵𑍇𑌕𑌃.

नत्वाश्रीभारतीतीर्थविद्यारण्यमुनीश्वरौ ।
पञ्चकोशविवेकस्यकुर्वेव्याख्यांसमासतः ॥

𑌨𑌤𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑍀𑌭𑌾𑌰𑌤𑍀𑌤𑍀𑌰𑍍𑌥𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌰𑌣𑍍𑌯𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑍌 ।
𑌪𑌞𑍍𑌚𑌕𑍋𑌶𑌵𑌿𑌵𑍇𑌕𑌸𑍍𑌯𑌕𑍁𑌰𑍍𑌵𑍇𑌵𑍍𑌯𑌾𑌖𑍍𑌯𑌾𑌂𑌸𑌮𑌾𑌸𑌤𑌃 ॥

ஸ்ரீபாரதீதீர்த்தவித்தியாரண்யமுனீஸ்வரர்களைவந்தனம்செய்துபஞ்சகோசவிவேகத்திற்கு சுருக்கமாய்வியாக்கியானம் செய்கிறேன்.

அ-கை தைத்திரீயஉபநிஷத்தின்தாற்பரிய வியாக்கியானமான இந்தபஞ்சகோசவிவேகமென்கிறபிரகரணத்தை ஆரம்பிக்கிறஆசாரியர் அதில் கேட்கிறவர்களுக்குப் பிரவிருத்திசித்திக்கும்பொருட்டு பிரயோஜனத்துடன்கூடியிருக்கிறதென்று பிரத்தியக்ஷமாகசூசனைபண்ணி கிரந்தாரம்பம்செய்கிறார்.

गुहाहितंब्रह्मयत्तत्पंचकोशविवेकतः ।
बोद्धुंशक्यंततःकोशपञ्चकंप्रविविच्यते ॥

குஹாஹிதம்ப்ரஹ்மயத்தத்பஞ்சகோஶவிவேகத: ।
போத்தும்ஶக்யம்தத:கோஶபஞ்சகம்ப்ரவிவிச்யதே ॥ க ॥

குஹாஹிதம்	குகையிலிருக்கிற	போத்தும்	அறிவதற்கு
யத்	யாதொரு	ஶக்யம்	முடியும்
ப்ரஹ்ம தத்	பிரமமுண்டோ அதை	தத:	ஆகையினாலே
பஞ்சகோஶவிவேகத:	குகையென்கிறசப்தத்தால் சொல்லப்படுகிற பஞ்சகோசவிவேகத்தால்	கோஶபஞ்சகம்	அன்னமயாதி பஞ்சகோசங்களை
		ப்ரவிவிச்யதே	சாக்ஷியாகியதனக்கு வேறாகப்பிரித்துகாண்பிக்கிறார்

இ-தி. தாமரைப்புஷ்பத்திற்குள்ளே இருக்கிற காயையெடுக்கவேண்டினவன் அதைமூடிக்கொண்டிருக்கிற மேல்இதழ்களைப்பிரித்துத்தள்ளி காயைக் கண்டெடுப்பதுபோலவறி.

அ-கை. குகையென்பதெது அதிலிருக்கிறபிரமம்என்னமாயறிகிறதெனில்.

देहादभ्यंतरःप्राणःप्राणादभ्यंतरंमनः ।
ततःकर्ताततोभोक्तागुहासेयंपरंपरा ॥

தேஹாதப்யந்தர:ப்ராண:ப்ராணாதப்யந்தரம்மந: ।
தத:கர்தாததோபோக்தாகுஹாஸேயம்பரம்பரா ॥ உ ॥

தேஹாத்	அன்னமய கோசத்தைக் காட்டிலும்	கர்தா	உள்ளே இருக்கிறவிஞ்ஞானமயகோசம்
அப்யந்தர:	உள்ளே இருக்கிறது	தத:	அதைகாட்டிலும்
ப்ராண:	பிராணமயகோசம்	போக்தா	உள்ளே இருக்கிறஆனந்தமய கோசம்
ப்ராணாத்	பிராணமய கோசத்தைக் காட்டிலும்	ஸா	அந்த
அப்யந்தரம்	உள்ளேஇருக்கிறது	இயம்	இந்தப்பஞ்சகோசங்களுடைய
மந:	மனோமயகோசம்	பரம்பரா	கூட்டமானது
தத:	அதைக்காட்டிலும்	குஹா	சுருதியில்குகையெனப்படும்

இ-தி. ஐந்தடுக்குப்போகணியொன்றுக்குளொன்றுஅடங்கியிருப்பதுபோல.

அ-கை. இப்போது அன்னமயகோசத்தின் ஸ்வரூபத்தையும் அது அநாத்துமாவென்பதையுங்காண்பிக்கிறார்-

पितृभुक्तान्नजाद्वीर्याज्जातोन्नेनैववर्धते ।
देहस्सोन्नमयोनात्माप्राक्चोर्द्ध्वंतदभावतः ॥

பித்ருபுக்தாந்நஜாத்வீர்யாஜ்ஜாதோந்நேநைவவர்த்ததே ।
தேஹஸ்ஸோந்நமயோநாத்மாப்ராக்சோர்த்வம்ததபாவத꞉ ॥ ௩ ॥

தேஹ꞉ யாதொருதேகமானது
பித்ருபுக்தாந்நாத் தாய்தகப்பனால் பூஜிக்கப்பட்ட அன்னத்தினாலுண்டான
வீர்யாத் வீரியத்தினின்றும்
ஜாத꞉ உண்டானதாயும்
அந்நேந ஏவ அன்னத்தினாலேயே
வர்த்ததே விருத்தியாகிறதோ
ப்ராக் ச முன்னும்
ஊர்த்வம் பின்னும்
தத³பாவத꞉ அந்த தேகமில்லாமையால்
ஸ꞉ அந்த
அந்நமய꞉ அன்னமயகோசமானது
ந ஆத்மா ஆத்துமாவன்று

வி-ம். அநுமானம் இத்தேகமாத்துமாவன்று யெதனாலெனில்பிறக்குமுன்னும்இறந்தபின்னுமில்லாததினால் (கடாதிகள்போல) அது அநாத்துமா.

இ-தி. ஸ்திரீவேஷம்போட்டுக்கொண்டு ஆடுகிறவனுக்குஅந்த ஸ்திரீயின்தன்மைமுன்னும்பின்னுமில்லாமையால் அது அவனாகாததுபோலவறி.

ச-கை. தேகம்முன்னும்பின்னுமில்லாமையென்கிற ஏதுசரீரதேகமாத்துமாவல்லவென்றுசாதித்தது கூடாதென்கிறயென்பக்ஷத்தில் தோஷமின்மையால். நீர்சொன்ன ஏதுபிரயோஜனமில்லையெனில்.

पूर्वजन्मन्यसन्नेतज्जन्मसंपादयेत्कथम् ।
भाविजन्मन्यसन्कर्मनभुंजीतेहसंचितम् ॥

பூர்வஜந்மந்யஸந்நேதஜ்ஜந்மஸம்பாதயேத்கதம் ।
பாவிஜந்மந்யஸந்கர்மநபுஞ்ஜீதேஹஸஞ்சிதம் ॥ ௪ ॥

பூர்வஜந்மநி பூர்வஜன்மத்தில்
அஸத் இல்லாத இந்த தேகமான ஆத்துமா
ஏதஜ்ஜந்ம இந்த ஜென்மத்தை
கதம் எப்படி
ஸம்பாதயேத் சம்பாதிக்கும்
பாவிஜந்மநி வரப்போகிற ஜன்மத்தில்
அஸத் இல்லாத இந்ததேகமான ஆத்மா
ஸஞ்சிதம் இப்போது சேர்க்கப்படுகிற
கர்ம கர்மத்தை
இஹ இவ்வுலகத்திலிருந்து
ந புஞ்ஜீத புஜிக்கக்கூடாது

வி-ம். அப்படிச்சொன்னால்செய்யாதபலம்வருவதும் செய்தபலம்நாசமாய்போவதுமென்கிற இரண்டுதோஷங்கள்வரும்.

அ-கை. இப்படி அன்னமயகோசமனாத்துமாவென்றுகாண்பித்து பிராணமயன் அனாத்துமாவென்பதும் அவன்ஸ்வரூபத்தையுஞ்சொல்லுகிறார்.

पूर्णोदेहेबलंयच्छन्नक्षाणांयःप्रवर्तकः ।
वायुःप्राणमयोनासावात्माचैतन्यवर्जनात् ॥

பூர்ணோதேஹேபலம்யச்சந்நக்ஷாணாம்ய:ப்ரவர்த்தக: ;
வாயு:ப்ராணமயோநாஸாவாத்மாசைதந்யவர்ஜநாத் ॥ ரு ॥

ய: யாதொரு
வாயு: வாயுவானவன்
தேஹே இந்ததேகத்தில்
பூர்ண: (நகசிகபரியந்தம்) பூர்ணனாயும்
பலம் பலத்தை
யச்சந் கொடுக்கிறவனாயும்
அக்ஷாணாம் இந்திரியங்களை
ப்ரவர்த்தக: ஏவுகிறவனாயுமிருக்கிறானோ
அஸௌ அந்த இந்த
ப்ராணமய: பிராணமயன்
சைதந்ய வர்ஜநாத் (வெளியிலடிக்கிற காற்றுபோல) அறிவற்றிருப்பதால்
ந ஆத்மா ஆத்துமாவன்று

இ-தி. துருத்திகுள்புகுந்து வெளியில்வருகிறகாற்றானது புருஷனாகா.

அ-கை. இப்போதுமனோமயன்ஸ்வரூபத்தையும் அவனனாத்துமாவென்பதையுங்காண்பிக்கிறார்.

अहंतांममतांदेहेगेहादौचकरोतियः ।
कामाद्यवस्थयाभ्रान्तोनासावात्मामनोमयः ॥

அஹந்தாம்மமதாம்தேஹேகேஹாதௌசகரோதிய: ।
காமாத்யவஸ்தயாப்ராந்தோநாஸாவாத்மாமநோமய: ॥ சா ॥

ய: யாதொருவன்
தேஹே தேகத்தில்
அஹந்தாம் நானென்கிறஅகங்காரத்தையும்
கேஹாதௌ வீடுமுதலானதுகளில்
மமதாம் எனதென்பதையும்
கரோதி பண்ணுகிறானோ
காமாத்யவஸ்தயா காமாதி அவஸ்தைகளினாலே
ப்ராந்த: மயக்கத்தையுடையவனாக
அஸௌ அந்த இந்த
மநோமய: மனோமயன்
ந ஆத்மா ஆத்துமாவன்று

இ-தி. ஒரு ராஜா தன்னரண்மனையும், வெளியிலுள்ளராஜ்யத்தையும் நானெனதென்று அபிமானிக்கிறதைப்போலும், பைத்தியத்தால்பலவிதமாய்ப் புலம்பித்திரிக்கிறவன், அறிவுள்ளவனாகஆகாததுபோலவுமறி.

அ-கை. விஞ்ஞானமயன்குடிம்பிபோல தாதாத்மியாத்தியாசத்தையுடையவனாயிருப்பதால் அவனுடையஸ்வரூபத்தையும் அவன் அனாத்துமாவென்பதையுங்காண்பிக்கிறார்.

लीनासुप्तौवपुर्बोधेव्याप्नुयादानखाग्रगा ।
चिच्छायोपेतधीर्नात्माविज्ञानमयशब्दभाक् ॥

லீநாஸுப்தௌவபுர்போதேவ்யாப்நுயாதாநகாக்ரகா ।
சிச்சாயோபேததீர்நாத்மாவிஜ்ஞாநமயஶப்தபாக் ॥ ௭ ॥

சிச்சாயோபேததீ: சிதாபாசனோடுகூடியிருக்கிறயாதொருபுத்தியானது
ஸுப்தௌ சுஷுப்தியில்
லீநா லயித்து
போதே { ஜாக்கிரத்தில் (தப்தாயபிண்டம்போலே)
ஆநகாக்ரகா { நகசிகை பரியந்தம் அடைந்ததாகி
வபு: தேகத்தை
வ்யாப்நுயாத் வியாபித்திருக்கிறதோ
விஜ்ஞாநமயஶப்தபாக் அந்த இந்த விஞ்ஞானமயன்
ந ஆத்மா ஆத்துமாவன்று

இ-கி. மின்னலானதுதோன்றித்தோன்றி மறைவதால்அநாத்மாவானது போலவறி.

அ-கை. மனோபுத்திஇரண்டும் ஓர்அந்தக்கரணகாரியமாகையால் மனோமயனென்றும்விஞ்ஞானமயனென்றும் இரண்டுகோசங்களாகப்பிரித்தது கூடாதெனில்.

कर्तृत्वकरणत्वाभ्यांविक्रियेतांतरिंद्रियम् ।
विज्ञानमनसीअन्तर्बहिश्चैतेपरस्परम् ॥

கர்த்ருத்வகரணத்வாப்யாம்விக்ரியேதாந்தரிந்த்ரியம் ।
விஜ்ஞாநமநஸீஅந்தர்பஹிஶ்சைதேபரஸ்பரம் ॥ ௮ ॥

அந்தரிந்த்ரியம் அந்தக்கரணமானது
கர்த்ருத்வகரணத்வாப்யாம் கருத்துருத்துவருபமாயும் கரணங்களான சாதனசுருவிருபங்களாயுமிருப்பதால்
அந்த: உள்ளிலும்
பஹி:ச புறம்பிலும்
விக்ரியேத { விகாரத்தை யடைந்து கொண்டிருக்கிறது
ஏதே இவைகள்
பரஸ்பரம் { ஒன்றுக்கொன்று பேதமா யிருப்பதால்
விஜ்ஞாநமநஸீ விஞ்ஞானமயமென்றும் மனோமயமென்றும் (சொல்லப்படுகிறார்கள்)

இ-கி. ஒருவிதையின்விகாரமேவேரும் கிளைகளுமாயிருந்தாலும் வேராதாரமாயும்பூமிக்குள்ளேவியாபித்து இருப்பதாயும், அசையாதிருப்பதாயும்கிளைகள்வெளியிலிருப்பதாயும், ஆதேயமாயும்சலிப்பதாயுமிருப்பதுபோலும்ரியாதிபதியும்சேவகனும் ஒருஅரசனின்வேலைக்காரராயிருந்தாலும் பிரயுத்தன்மையும், சேவகத்தன்மையுமிருப்பதுபோலவறி.

அ-கை. போக்தாவென்றுசொல்லப்பட்ட ஆனந்தமயன்ஸ்வரூபத்தையும் அவன் அநாத்துமாவென்பதையும் காண்பிக்கிறார்.

काचिदंतर्मुखावृत्तिरानंदप्रतिबिंबभाक् ।
पुण्यभोगेभोगशांतौनिद्रारूपेणलीयते ॥
कादाचित्कत्वतोनात्मास्यादानंदमयोप्ययम् ।

காசித்அந்தர்முகாவ்ருத்திராநந்தப்ரதிபிம்பபாக் ।
புண்யபோகேபோகசாந்தௌநித்ராரூபேணலீயதே ॥ கசு ॥
காதாசித்கத்வதோநாத்மாஸ்யாதாநந்தமயோப்யயம் ।

புண்ய போகே } புண்ணியபலானுபவமான போக காலத்தில்
காசித் ஒருக்கால்
அந்தர்முகா வ்ருத்தி: } அந்தர்முகமாகிற விருத்தியானது
ஆநந்தப்ரதிபிம்பபாக் ஆத்துமானந்தப்பிரதிபிம்பத்தை அடைந்ததாகி
போகசாந்தௌ போகம்ஒழிந்தவேளையில்
நித்ராரூபேண நித்திரா ரூபமாக
லீயதே லயிக்கிறது
அயம் இந்த
ஆநந்தமய: அபி ஆனந்தமயனும்
காதாசித்கத்வத: ஏகதேசத்தில்வருவதாலே
ஆத்மா ஆத்துமாவாக
ந ஸ்யாத் ஆகமாட்டான்

இ-தி. ஆற்றில்ஊற்றுப்போட்டுஇறைத்துத் தெளிந்தஅவசரத்தில் க்ஷண காலம்தன்முகம் தோற்றுவதுபோலவாம்.

ச-கை. அன்னமயாதிஆனந்தமயன்வரை ஆத்துமாவல்லவென்றுவிலக்கினால்ஆத்துமாவே இல்லையென்று வருமேயெனில்.

बिंबभूतोयआनन्दआत्मासौसर्वदास्थितेः ॥
பிம்பபூதோயஆநந்தஆத்மாஸௌஸர்வதாஸ்திதே: ॥ கஎ ॥

பிம்ப பூத: } ஆனந்தமயனுக்கு அதிஷ்டானமான
ய: யாதொரு
ஆநந்த: ஆனந்தமுண்டோ (அது).
ஸர்வதா எப்போதும்
ஸ்திதே: இருக்கிறபடியால்
அஸௌ அந்த இவரே
ஆத்மா ஆத்துமா

வி-ம். அனுமானம்நித்தியமாயிருப்பதால் ஆனந்தரூபியான, இவரே ஆத்துமாயாதொருவர், ஆத்துமாவன்றே அவர்நித்தியரன்று (தேகாதிகளைப்போல) ஆகாசாதிகளும்உற்பத்தியுடன்கூடி அநித்தியமாயிருப்பதால், அதிவியாப்தி தோஷமில்லை.

ननुदेहमुपक्रम्यनिद्रानन्दांतवस्तुषु ।
माभूदात्मत्वमन्यस्तुनकश्चिदनुभूयते ॥

நந்வேவமந்நமயாத்யாநந்தமயாந்தேஷு பஞ்சஸு |
ஸாக்ஷிணா சூந்யமந்யந்ந கஶ்சிதநுபூயதே || ௧௧ ||

நநு. சங்கிக்கிறான்	ஸாக்ஷிணா ஆத்மாவானது
ஏவம் அன்னமயத்தை	சூந்யம் ஆகவேண்டாம் [கிற
ஆதி ஆரம்பித்து	அந்யத் இவைகளுக் கன்னியமாயிருக்
ஆநந்தமயாந்தேஷு ஆனந்தமயன் வரையிலுள்ள வஸ்துக்களில்	கஶ்சித் ஒராத்துமாவும் [வில்லையே
நீர் சொன்ன ஏதுவால்	ந அநுபூயதே அனுபவிக்கப்பட

தா-ம். அப்போது சூனியமல்லவா சித்தித்ததென்றஅபிப்பிராயத்தால்சங்கித்தான்

இ-தி. ஐந்துவாசல்தாண்டிஉள்ளேபோனவன்ஒன்றுங்காணாதுபோலவாம்

அ-கை. அப்படிசூனியம்சம்பவிக்கவில்லையென்று பரிஹரிக்கிறார்.

बाढंनिद्रादयस्सर्वेनुभूयंतेनचेतरः ।
तथाप्येतेनुभूयंतेयेनतंकोनिवारयेत् ॥

பாடம் நித்ராதயஸ்ஸர்வேऽநுபூயந்தே ந சேதர: |
ததாப்யேதேऽநுபூயந்தே யேந தம் கோ நிவாரயேத் || ௧௨ ||

நித்ராதய: ஆனந்தமயன் முதலான	இதர: ந ச வேறொன்றும் அனுபவிக்க
ஸர்வே சகலகோசங்கள் [றன	ப்படவில்லை யென்று
அநுபூயந்தே அனுபவிக்கப்படுகின்	பாடம் நீ சொன்னது சரி

அ-கை. அப்போகோசங்களுக்குவேறாக ஆத்துமாவுண்டென்றெப்படிசொன்னீரெனில்.

ததா அபி அப்படி இருந்தாலும்	தம் அந்த சைதன்னியத்தை
ஏதே இந்த கோசங்கள்	க: எவன்
யேந யாராலே [ன்றன	நிவாரயேத் தடுப்பன்
அநுபூயந்தே அனுபவிக்கப்படுகி	

இ-தி. முன்னேஒன்றுங்காணப்படவில்லையென்று சொன்னவனிருப்பதுபோலவறி.

அ-கை. இப்போதுகோசவிலக்ஷணமான ஆத்துமாவேறேஇருந்தால் அப்போதுகாணப்படவேண்டும் அப்படிகாணப்படாமையால் ஆத்துமாஇல்லையெனில்.

स्वयमेवानुभूतित्वाद्विद्यतेनानुभाव्यता ।
ज्ञातृज्ञानांतराभावादज्ञेयोनत्वसत्तया ॥

ஸ்வயமேவாநுபூதித்வாத்வித்யதே நாநுபாவ்யதா |
ஜ்ஞாத்ருஜ்ஞாநாந்தராபாவாதஜ்ஞேயோ நத்வஸத்தயா || ௧௩ ||

ஸ்வயம் ஏவ } (இக்கோசங்களை அறிகிற) அறிவாகிய தான்தானே
அநுபூதித்வாத் } அநுபவரூபமாயிருப்பதால் [ருக
அநுபாவ்யதா அநுபவிக்கப்படுகிறவ
ந. வித்யதே ஆகமாட்டார்

ஜ்ஞாத்ருஜ்ஞாநாந்தராபாவாத் அவரையறிய வேறேகாண்பான் காக்ஷிகளில்லாமையால்
அஜ்ஞேய: அறியப்படவில்லை
அஸத்தயா ந. து முயல்கொம்புபோலில்லாமையால்அறியப்படாமலிருக்கவில்லை

தா-ம். பஞ்சகோசங்களுக்கும்; ஆத்துமாசாக்ஷியென்றும் அவைகள்அசத்தென்றும்முன்னரே நிராகரிக்கப்பட்டதால்இவரையறிய சாக்ஷிமுதலானதில்லாமையால், அறியப்படாதவரென்றுசொல்லப்பட்டது.

அ-கை. அனுபவரூபராயிருக்கிறஆத்துமாவுக்கு அனுபவிக்கப்படுதல், கூடாதென்பதையும் அறிவுசுபாவமென்பதையும் திருஷ்டாந்தமூலமாய்அறிவிக்கிறார்.

माधुर्यादिस्वभावानामन्यत्रस्वगुणार्पिणाम् ।
स्वस्मिन्तदर्पणापेक्षानोनचाऽस्त्यन्यदर्पकम् ॥
अर्पकान्तरराहित्येप्यस्त्येषांतत्स्वभवता ।
माभूत्तथानुभाव्यत्वंबोधात्मातुनहीयते ॥

மாதுர்யாதிஸ்வபாவாநாமந்யத்ரஸ்வகுணார்பிணாம் ।
ஸ்வஸ்மிந்ததர்பணாபேக்ஷாநோநசாஸ்த்யந்யதர்பகம் ॥ ௧௪ ॥
அர்பகாந்தரராஹித்யேப்யஸ்த்யேஷாந்தத்ஸ்வபாவதா ।
மாபூத்ததாநுபாவ்யத்வம்போதாத்மாதுநஹீயதே ॥ ௧௫ ॥

